KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி உட்பட அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy (ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 21 மார்ச் 2025 இதழ்:- 12

ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

# முப்படைகளில் இருந்து தப்பியோடிய 1604 பேர் கைது!

## மிருசுவில் படுகொலையாளி சுனிலுக்கு பயணத் தடை!

## முப்படையினர் கைது செய்யப்படுவதற்கு நாமல் கொந்தளிப்பு!

சட்ட ரீதியாக பணிநீக்கம் செய்யப்படாமல் பணிக்கு சமூகமளிக்க தவறிய முப்படைகளைச் சேர்ந்த 1,600க்கும் மேற்பட்ட வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏர் வைஸ் மார்ஷல் (ஓய்வு பெற்ற) சம்பத் துயகொண்டாவின் உத்தரவைத் தொடர்ந்து, சட்ட ரீதியாக இராஜினாமா செய்யாமல் பணியில் இருந்து தப்பிச் சென்ற முப்படையினரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. (3ம் பக்கம் பார்க்க)



ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
**eelanadu.ca**
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

# வடக்கில் கஜேந்திரகுமார் தவராஜா கூட்டு! கிழக்கில் பிள்ளையான் வியாழேந்திரன் கூட்டு!

ஜனநாயக தமிழரசு கட்சியின் தலைவர் கே.வி.தவராசாவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர், கஜேந்திர குமாரும் இணைந்து பயணிக்கவுள்ள தாக ஜனநாயக தமிழரசு கட்சியின் பிரமுகரான கருணாகரன் குணாளன் தெரிவித்துள்ளார். இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், தமிழ்த்தேசிய சித்தாந்தத்தினை பலப்படுத்தும் வகையிலும் சிங்கள பேரினவாதத்தின் ஒற்றர்களால் அழிக்கப்பட்ட(8பக்கம் பார்க்க)

# யூடியூப்பர்களும் தமிழ் சமூகமும்





கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த யூத எழுத்தாளர் ஆகிய ஆர்தர் கோஸ்லரிடம் எதிர்காலத்தைப் பற்றிய தீர்க்க தரிசனத்தைக் கூறுங்கள் என்று கேட்ட பொழுது, அவர் சொன்னார், மந்தர்களே - mediocres- எல்லா இடங்களிலும் முதன்மை வகிப்பார்கள் என்று. அவர் எதைக் கருதி அவ்வாறு சொன்னார் என்பது தெளிவில்லை. ஆனால் இப்போதுள்ள சமூக வலைத்தள ஊடகச் சூழலை வைத்துப் பார்க்கும் பொழுது அது ஒரு தீர்க்க தரிசனமோ என்று சிந்திக்கத் தோன்றுகிறது. (நிலாந்தன் எழுதுகிறார் -9ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு

எதிர்பாருங்கள்! பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
01 யூன் 2025 ஞாயிற்றுக்கிழமை விபரங்கள் உள்ளே!

# போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600


NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial Industrial Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED



THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

RE/MAX REALTRON Realty Inc. Brokerage

Home of the Top Producers

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



22 Years Real Estate Experience


885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated

**Bus: 416-289-3333**

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Warden/Finch



**Scarborough** $424,900
2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school

### Kennedy / Hwy 401



**Scarborough** $429,900
1 Beds • 1 Baths • 5 Rooms
Newly Renovated Unit

### Markham / Sheppard Ave



**Scarborough** $479,000
1 Beds • 1 Baths • 3 Rooms
Corner Condo Townhouse

### McCowan / Ellesmere



**Scarborough** $599,000
2 Beds • 2 Baths • 5 Rooms
Just A Short Walk To STC

### Mccowan & Hwy 401


**Scarborough** $549,900
2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views

### Kennedy / 401



**Scarborough** $538,000
2 Beds • 1 Baths • 5 Rooms
Open Concept Living-Dining

### Simcoe St / 401



**Oshawa** $575,900
3+1 Beds • 2 Baths • 5+1 Rooms
Newly Painted, 1100+ Sqft

### Grandview Dr. / Bloor



**Oshawa** $649,800
2+2 Beds • 2 Baths • 7+4 Rooms
Upgraded floor, Newly renovated

### 9TH LINE / HIGHWAY 7



**Markham** $1,100,000
4 Beds • 4 Baths • 9 Rooms
luxury freehold townhouse

### Dixie/ Glenanna


**Pickering** $799,000
3 Beds • 2 Baths • 6 Rooms
Great area close to all amenities

### Audley Rd & Rossland Rd E


**Ajax** $799,000
3 Beds • 3 Baths • 8+3 Rooms
No maintenance fees Townhouse

### Markham & Ellesmere



**Scarborough** $1,050,000
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance

### Morningside/Mcnicol



**Scarborough** $1,099,900
3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout

### 401/Morningside


**Scarborough** $1,249,000
4+2 Beds • 4 Baths • 12 Rooms
Easy access to the new 407

### 10th Line/ Hoover Park Dr


**Stouffville** $1,499,999
4+1 Beds • 4 Baths • 10 Rooms
3,162 Sqft ,Upgrades Designed

### 9th Line/Hoover Park


**Stouffville** $999,000
4 Beds • 3 Baths • 8 Rooms
Modern Living Elegant Upgrades

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART
4A WADE AVE
TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO**

**5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# முப்படைகளில் இருந்து தப்பியோடிய 1604 பேர் கைது!

## மிருசுவில் படுகொலையாளி சுனிலுக்கு பயணத் தடை!

## முப்படையினர் கைது செய்யப்படுவதற்கு நாமல் கொந்தளிப்பு!

சட்ட ரீதியாக பணிநீக்கம் செய்யப்படாமல் பணிக்கு சமூகமளிக்க தவறிய முப்படைகளைச் சேர்ந்த 1,600 க்கும் மேற்பட்ட வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏர் வைஸ் மார்ஷல் (ஓய்வு பெற்ற) சம்பத் துயகொண்டாவின் உத்தரவைத் தொடர்ந்து, சட்டரீதியாக இராஜினாமா செய்யாமல் பணியில் இருந்து தப்பிச் சென்ற முப்படையினரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

19 மார்ச் 2025 புதன்கிழமை தப்பியோடிய 1,604 இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில், முப்படையினரால் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 1,444 பேர் கைது செய்யப்பட்டதாகவும், 160 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களில் 1,394 பேர் இராணுவ வீரர்கள், 138 பேர் விமானப்படை வீரர்கள் மற்றும் 72 பேர் கடற்படை வீரர்கள் என பாதுகாப்பு அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் எட்டு தமிழர்களை படுகொலை செய்த குற்றச்சாட்டின் கீழ் மரணதண்டனை விதிக்கப்பட்டு பின்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட குற்றாவளி சுனில் ரத்நாயக்கவிற்கு உயர் நீதிமன்றம் 20 மார்ச் 2025 வியாழக்கிழமை வெளிநாட்டு பயணத்தடை விதித்துள்ளது.




மார்ச் 2020இல் சுனில் ரத்நாயக்கவிற்கு அவ்வேளை ஜனாதிபதியாக பதவி வகித்த கோட்டாபய ராஜபக்ச பொதுமன்னிப்பு வழங்கியமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை பூர்த்தியாகியுள்ள நிலையிலேயே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

கோட்டாபய ராஜபக்ச வழங்கிய பொதுமன்னிப்பிற்கு எதிராக மாற்றுக் கொள்கைகளிற்கான நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தார். மிருசுவிலில் இருந்து இடம் பெயர்ந்த 9 பேர் 2000ம் ஆண்டு டிசம்பர் 19ம் திகதி தங்கள் வீடுகளை பார்ப்பதற்காக மீண்டும் மிருசுவில் பகுதிக்கு சென்றனர். இவர்களில் பதின்ம வயதினரும் ஐந்து வயது சிறுவனும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவர்கள் தங்கள் பகுதிக்கு திரும்பி வந்தவேளை



இரண்டு இராணுவத்தினர் அவர்களின் கண்களை கட்டி மோசமாக தாக்கியுள்ளனர். ஒரு இளைஞன் அவர்களின் பிடியிலிருந்து தப்பினான். எனினும் ஏனைய 8 பேரும் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் உடல்கள் அரு கில் உள்ள பகுதியில் புதைக்கப்பட்டிருந்த பகுதியில் மீட்கப்பட்டன என்பது நினைவு கொள்ளத் தக்கது.

இது இவ்வாறிருக்க பாதுகாப்புப் படைகளிலிருந்து தப்பியோடியவர்களை கைது செய்ய அரசாங்கம் எடுத்த முடிவு நியாயமற்றது என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

20 மார்ச் 2025 நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட விடயத்தை குறிப்பிட்டுள்ளார். பாதுகாப்புப் படைகளிலிருந்து தப்பியோடிய அனைவரையும் பாதாள உலகத்துடன் தொடர்புகள் இருப்பதாகக் கருதி அவர்களை ஒட்டுமொத்தமாகக் கைது செய்வது நியாயமானதல்ல அவர் அதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு பாதுகாப்புப் படைகளில் சிலர் தவறான செயல்களைச் செய்யலாம் என்றும், அத்தகைய நபர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார். எனினும் பாதுகாப்புப் படைகளிலிருந்து தப்பியோடியவர்கள் குறித்து அரசாங்கம் ஒரு பரந்த கலந்துரையாடலை நடத்த வேண்டும் என்றும், அவர்களுக்கு சட்டப்பூர்வமாக பணி நீக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். அதன்படி அத்தகைய நபர்கள் மீது அரசாங்கம் ஒரு கண்காணிப்பு செயல்முறையை உருவாக்க முடியும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பணி இடைநீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோனை ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தினால் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் முன்நிலைப்படுத்தப்பட்டிருந்தார். அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் இருந்து பலத்த பாதுகாப்புடன் தேஷபந்துதென்னகோன் நீதிமன்றத்திறகு அழைத்து வரப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# 9 மாதங்களின் பின் வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பினார் சுனிதா!

17 மணி நேர பயணத்தை முடித்துக் கொண்டு 9 மாதங்களுக்கு பின்னர் வெற்றிகரமாக 18 மார்ச் 2025 செவ்வாய்க்கிழமை பூமிக்கு திரும்பினார் சுனிதா உள்ளிட்ட குழுவினர். விண்வெளியில் ஆராய்ச்சிக்காக சர்வதேச விண்வெளி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசாவின் சார்பில் இந்திய வம்சாவளியை சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோரும் கடந்த ஆண்டு ஜீன் மாதம் போயிங் ஸ்டார்லைனர் என்ற விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பப்பட்டனர்.

8 நாட்கள் தங்கி இருந்து பூமிக்கு திரும்ப வேண்டிய அவர்கள் போயிங் ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக அங்கேயே தங்க வேண்டியதாயிற்று.

அடுத்தடுத்து நடந்த தொடர் முயற்சிகளிலும் சிக்கல் ஏற்பட்டதால் அவர்கள் பூமிக்கு திரும்ப முடியாத சூழல் ஏற்பட்டது. இதனால் அவர்கள் 9 மாதங்கள் விண்வெளி மையத்திலேயே தவித்து வந்தனர்.



எலான் மஸ்கின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் விண்கலம் மூலம் சுனிதா வில்லியம்சை பூமிக்கு அழைத்து வர அமெரிக்காவின் புதிய அரசு முயற்சி செய்தது. இதையடுத்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் க்ரு டிராகன் என்ற விண்கலம், பால்கன்-9 என்ற ரொக்கெட் மூலம் கடந்த சனிக்கிழமை விண்வெளிக்கு அனுப்பப்பட்டது.

இந்த மீட்பு விண்கலத்தில் ரஷிய நாட்டை சேர்ந்த கிரில்பெஸ்கோவ் உள்ளிட்ட 4 விண்வெளி வீரர்கள் இருந்தனர். அந்த விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்தை சென்றடைந்தது. இதையடுத்து சுனிதா வில்லியம்ஸ், வில்மோர் ஆகியோர் விண்வெளி நிலையத்தில் இருந்து, க்ரு டிராகன் விண்கலத்துக்கு சென்றனர்.

அவர்களுடன் இங்கிருந்த சென்ற விண்வெளி வீரர்களும் பயணிக்கிறார்கள். இது தொடர்பாக நாசா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தனது எக்ஸ் பக்கத்தில், வானிலை சீராக இருந்தால் க்ரு டிராகன் விண்கலம் புளோரிடா கடல் பகுதியை வந்தடையும் என்று தெரிவித்திருந்தது. இந்நிலையில் பூமியின் வளிமண்டலத்துக்குள் நுழைந்த டிராகன் விண்கலம், புளோரிட கடற்பரப்பை நோக்கி நெருங்கியது.

தரையிறங்கும் டிராகன் விண்கலத்தில் இருந்து விண்வெளி வீரர்களை ஸ்பேஸ் எக்ஸ் குழு பாதுகாப்பாக மீட்டது.

17 மணி நேர பயணத்துக்கு பிறகு புளோரிடாவில் உள்ள கடற்கரையில் அவர்களது விண்கலம் தரையிறங்கியது. சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து, இந்தியா வம்சாவளியைச் சேர்ந்த, சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்டோர் பாதுகாப்பாக பூமி திரும்பினார்.

# ஸ்ரீலங்காவின் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மாத்தறை நீதிமன்றத்தில் சரணடைந்தார்



முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் 19 மார்ச் 2025 புதன்கிழமை காலை மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார். 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் திகதி மாத்தறை வெலிகம பெலேன பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உட்பட கொழும்பு குற்றப் பிரிவின் (சி.சி.டி) எட்டு முன்னாள் அதிகாரிகளைக் கைது செய்ய மாத்தறை நீதவான் நீதிமன்றம் முன்னர் உத்தரவிட்டிருந்தது.

இதனை தொடர்ந்து முன்னாள் பொலிஸ்மாஅதிபர் தேசபந்து தென்னகோன் உட்பட எட்டு நபர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு சிஐடிக்கு அறிவுறுத்தப்பட்டது. இந்நிலையில் பல நாட்களாக லைமறைவாக இருந்து வந்த தென்னகோனைக் கண்டு பிடிப்பதற்கான பொலிஸார் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன.

துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக மாத்தறை நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த கைது உத்தரவை நிறைவேற்றுவதைத் தடுக்க இடைக்காலத் தடை கோரி தென்னகோன் தாக்கல் செய்த ரிட் மனுவை 17 ஆம் திகதி மேல்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தது.

அதனை தொடர்ந்து, தென்னகோனைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மேல்முறையீட்டு நீதிமன்றம் சிஐடிக்கு உத்தரவிட்டது.

இந்நிலையில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் 19 மார்ச் 2025 புதன்கிழமை காலை மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார்.

இதேவேளை தனக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளை 60 ஆக குறைக்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை உயர் நீதிமன்றம் 19 மார்ச் 2025 புதன்கிழமை நிராகரித்துள்ளது. இந்த மனு பரிசீலிக்கப்பட்டதையடுத்து நிராகரிக்கப்பட்டுள்ளது.

# பட்டலந்த அறிக்கை குற்றவியல் வழக்குகளைத் தாக்கல் செய்ய முடியும்

பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் குற்றவியல் வழக்குகளைத் தாக்கல் செய்ய முடியும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டபோது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். பட்டலந்த விவகாரம் தொடர்பில் விசாரணை களை மேற்கொண்ட ஆணைக்குழு தமது அறிக்கையில் பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. விரிவான சாட்சியங்களை பதிவு செய்ததன் பின்னரே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. பட்டலந்த விசாரணை அறிக்கையில் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பில் மக்கள் ‘உயிர்வாழும் உரிமை’ உள்ளடக்கப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, உத்தேச அரசியலமைப்பில் மக்கள் ‘உயிர் வாழும்’ உரிமையை உறுதிப்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்.

(6ம் பக்கத் தொடர்ச்சி) நமது இசை மற்றும் கலாச்சார பாரம்பரியத்தில் மகத்தான தாக்கத்தை ஏற்படுத்திய இசை ஜாம்பவான் ராஜ்சபா உறுப்பினர் இளையராஜாவை சந்தித்ததில் மகிழ்ச்சி. அவர் எல்லா வகையிலும் ஒரு முன்னோடி, மேற்கத்திய பாரம்பரிய சிம்பொனி வேலியண்ட் இசை நிகழ்ச்சியை அரங்கேற்றியதன் மூலம் மீண்டும் ஒரு வரலாற்று சாதனை படைத்துள்ளார். இந்த மகத்தான சாதனை அவரது இணையற்ற இசைப் பயணத்தில் மற்றொரு அத்தியாயத்தைக் குறிக்கிறது எனத் தெரிவித்தார்.

# அர்ச்சுனாவால் தேசிய நல்லிணக்கத்திற்கு பாதிப்பு! பாராளுமன்ற உரையை நேரடியாக ஒளி பரப்ப தடை



பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் செயற்பாடுகள் மற்றும் வார்த்தைகள் தேசிய நல்லிணக்கத்துக்கும், இன சகவாழ்வுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளன. இதற்கு நான் கடும் அதிருப்தியை வெளிப்படுத்துகிறேன் என சபாநாயகர் சபைக்கு அறிவித்துள்ளார். அத்துடன் அர்ச்சுனா எதிர்வரும் மே மாதம் வரை பாராளுமன்றத்தில் ஆற்றும் உரையை நேரடியாக ஒளிப்பரப்பு செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் பாராளுமன்ற உரையை அவர் சமூக வலைத்தளங்களில் பதிவிடக் கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் பயன்படுத்தியுள்ள சர்ச்சைக்குரிய வார்த்தைகள் அனைத்தையும் ஹன்சாட் பதிவில் இருந்து நீக்குமாறும் சபாநாயகர் உத்தரவிட்டுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்திக் கொண்டு பெண்களை மிக கீழ்த்தரமாக விமர்சித்துள்ளார். இது பாராளுமன்ற கௌரவத்தை அவமதிப்பதாகும் என்றும் சபாநாயகர் குறிப்பிட்டார்.

# கனடா வாழ் கருணையாளர்களே!





என் இனிய உறவுகளே! 13 ஆண்டுகளுக்கு முன் எமது இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தக் குழந்தைகள் போன்றவர்களை வாரி அணைத்து 86 குழந்தைகளோடு ஆரம்பித்து இன்று 423 குழந்தைகளின் அன்பு நிறைந்த இடமாக அன்பு இல்லம். பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இலங்கங்கள் திகழ்கின்றன.

மூன்று வேளை உணவு, உடை, உறையுள் மட்டுமன்றி கல்வி மேம்பாடு விளையாட்டு, பரதநாட்டியம் என பல்வேறு துறைகளிலும் எமது இல்லக் குழந்தைகள் முன்னணி வகித்து வருகின்றார்கள்.

அன்பர்களே! அருகே காணப்படும் குழந்தைகள் போல் பலர் இன்றும் ஆலய வீதிகளிலும் கடையோரங்களிலும் நிற்கும் குழந்தைகளைப் பொறுப்பேற்க முன் வருமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் இருந்து தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் விட்டப்பட்டு வருகின்றன. ஆனால் எம்மால் பொறுப்பேற்க முடியாதுள்ளமைக்கு எமது இல்லத்தின் நிதி நெருக்கடியே பிரதான காரணமாகும்.

உறவுகளே! உங்கள் கருணையினை இவர்கள் பக்கமும் திருப்புங்கள்! எமது சந்ததியை நாமே காப்பாற்றுவோம்! ஒரு இல்லத்துக் குழந்தைகளுக்கு உணவளிக்க ஒரு நாளுக்கு 200.00 டொலர்கள் மட்டுமே. ஒரு நாள் உணவளிக்க முடியாதோர் ஒரு வேளை உணவுக்கு 100.00 டொலர்கள் தாருங்கள். மேலதிக விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் பார்க்கலாம். ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி 14 ஆண்டுகளாகத் தொடர்கின்றது. தொடர்புகளுக்கு பரமேஸ் 416 841 9600

எமது வாழ்நாளில் ஒரு மலையைப் புரட்ட முடியவில்லையே என்ற கவலையை விடுவோம்! ஒரு குழந்தைகளுக்கு உணவளித்தோம் என்று மகிழ்வோடு வாழ்வோம். வாருங்கள்! இணையுங்கள்!

# சக மாணவிக்கு “ஐ லவ் யூ” சொன்ன மாணவனைத் தண்டித்த அதிபருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு!

பாடசாலை ஒன்றில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு (ஐ லவ் யூ ) தெரிவித்த அதே வகுப்பில் கல்வி கற்கும் சக மாணவனை அதிபர் பிரம்பால் கண்டித்ததையடுத்து மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் அதிபருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள சம்பவம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாடசாலை ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் 'பெற்றுள்ளதாக அந்த பிரதேச பொலிஸ் நிலைய பொலிசார் தெரிவித்தனர். இதுபற்றி தெரியவருவதாவது

ஆண், பெண் பிள்ளைகள் கற்றுவரும் கலவன் பாடசாலையில் சம்பவதினமான நேற்று குறித்த பாடசாலையில் தரம் 10 இல் கல்வி கற்றுவரும் மாணவி ஒருவரை பார்த்து அதே வகுப்பில் கல்விகற்று வரும் மாணவன் (ஐ லவ் யு) என தெரிவித்து தனது காதலை வெளிப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து குறித்த மாணவி பாடசாலை அதிபரிடம் சென்று குறித்த மாணவன் ஐ லவ் யு என தெரிவித்ததாக முறைப்பாடு செய்ததையடுத்து அதிபர் குறித்த மாணவனை தனது காரியாலயத்துக்கு வரவழைத்து பிரம்பால் மாணவன் மீது இரண்டு அடி கொடுத்து ஒழுக்கமாக நடக்குமாறு தெரிவித்து எச்சரித்து அனுப்பியுள்ளார்.

இதனை தொடர்ந்து வீட்டிற்கு சென்ற மாணவன் அதிபர் தனக்கு அடித்துள்ளார் என தெரிவித்ததையடுத்து மாணவனை பெற்றோர் மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதித்ததுடன், அதிபருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப் ஶ்ரீபாடு செய்ததையடுத்து அதிபரை விசாரணைக்கு அழைத்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை சிறுவர் பெண்கள் பிரிவு பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கெசல்பத்ரா பத்மே தலைமையில் கமாண்டோ உறுப்பிர்களைக் கொண்ட குழு இயங்குவதாக தகவல்!

டுபாயில் தலைமறைவாகியுள்ள கெசல்பத்தர பத்மே என்ற திட்டமிடப்பட்ட குற்றக் கும்பல் உறுப்பினர் தலைமையில் முன்னாள் கமாண்டோ உறுப்பினர்களை கொண்ட குழுவொன்று இயங்கி வருவதாக காவல்துறையினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

திட்டமிட்டு கொலை செய்யப்பட்ட கணேமுல்ல சஞ்சீவவின் கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் கமாண்டோ உறுப்பினர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது இந்த தகவல்கள் தெரியவந்துள்ளது.

கணேமுல்ல சஞ்ஜீவவின் கொலைக்குப் பின்னர் வெளியாகிய தகவல்களையடுத்து, இராணுவத்திலிருந்து விலகி, குற்றக் குழுக்களுடன் இணைந்த சில கமாண்டோ உறுப்பினர்கள் செய்த கொலைகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டை நடத்தியமை தொடர்பில் கமாண்டோ சமிந்து என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த கொலை சம்பவம் டுபாயில் தலைமறைவாகியுள்ள கெசல்பத்தர பத்மேவின் குற்றக் குழுவுடன் தொடர்புடைய மாலைதீவுகளிலுள்ள கமாண்டோ சலிந்து என்பவரால் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. கமாண்டோ சலிந்து, துப்பாக்கிச் சூ ட்டை மேற்கொள்ளும் நபரைத் தேர்ந்தெடுக்கும் பணியை யோ யோ எனப்படும் கமாண்டோ யொஹானிடம் ஒப்படைத்திருந்தார்.

கொலை சம்பத்தின் பின்னணியிலிருந்த சூத்திரதாரியான இஷார செவ்வந்தியின் தொலைபேசி தரவுகளைக் கொண்டு நடத்தப்பட்ட விசாரணையில், யோ யோ என்ற நபர் கமாண்டோ சமிந்துவைத் தொடர்பு கொண்டதாகத் தெரியவந்துள்ளது. இந்த நிலையில், தற்போது பணியாற்றிவரும் பல கமாண்டோ உறுப்பினர்கள் மற்றும் சேவையிலிருந்து தப்பியோடிய படையினரிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளதாகவும் விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### இந்தியத் தம்பதியினர் கைது

இதேவேளை சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட 2,400 கிலோகிராம் குஷ் போதைப்பொருளுடன் இந்திய தம்பதியினர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருளின் மொத்த பெறுமதி சுமார் 25 மில்லியன் ரூபா என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். சம்பவத்துடன் தொடர்புடைய 32 வயது மற்றும் 29 வயதுடைய இந்திய தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி தம்பதி முதல் முறையாக இலங்கைக்கு வந்துள்ளதாகவும், அவர்கள் இந்தியாவில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் சுங்க அதிகாரிகளிடம் கூறியுள்ளனர். பயணப் பொதிக்குள் சூ ட்சுமான முறையில் மறைத்து வைத்து குஷ் போதைப்பொருளை கொண்டு வந்துள்ளனர்

# புலம்பெயர் சமூகத்தால் இப்போது முடியுமா?

ஹரி ஆனந்தசங்கரி கனடாவின் நீத்துறை அமைச்சராக பொறுப்பேற்றிருக்கின்றார். ஒரு புலம்பெயர் தமிழர் அரசியல் ரீதியில் அடைந்திருக்கும் அதி உச்சமான பதவியாக இதனை குறிப்பிடலாம். இது ஒட்டுமொத்த ஈழத் தமிழருக்குமான பெருமை போன்று வர்ணிப்போரும் உண்டு

அதேவேளை ஒரு ஈழத் தமிழ் சாதனையாகவும் நோக்குவோரும் உண்டு. பொதுவாக ஒருவரது தனிப்பட்ட வெற்றியை ஒட்டுமொத்த சமூகத்தின் சாதனையாக காண்பிக்கும் போக்கு தமிழ்ச் சூழலில் அவ்வப்போது தலைநீட்டுவதுண்டு. .வ்வாறான போக்கு ஏனைய சமூகங்களில் குறைவு முக்கியமாக மேற்குல சமூகத்தினர் மத்தியில் அவ்வாறான போக்கு இல்லை.

யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்கள் கடந்து விட்டன. இந்தக்காலத்தில் போர்க் குற்றவாளிகளான ராஜபக்ஷக்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப் போவதான ஒரு பிரசாரம் புலம்பெயர் சூழலில் பிரதான விடயமாக பேசப்பட்டது. சர்வதேச நீதிமன்றத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகவும் அருகில் சென்று விட்டதாகவும் ஏராளமான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், தமிழர்களுக்கான நீதி தேடும் அரசியல் முன்னெடுப்புகள் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகவே இடம் பெற்றிருக்கின்றன. இவ்வாறானதொரு பின்புலத்தில் ஹரி ஆனந்தசங்கரி ஓர் அதிஉயர் பதவியை அடைந்திரு க்கின்றார். இப்போது அவர் கனடிய அரசாங்கத்தை வழிநடத்தும் ஓர் உயர் குழாமின் அங்கம். கனடா, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் கையெழுத் திட்டிருக்கும் நாடுகளில் ஒன்று.

1998ஆம் ஆண்டு, ரோம் சமவாயத்தை ஏற்றுக் கொண்ட கனடா, 2000ஆம் ஆண்டு, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்களை அங்கீரித்த முதல் நாடு என்னும் தகுதியை பெற்றுகொண்டது.

ரோம் சமவாயத்தில் கையெழுத்திட்டிருக்கும் ஒரு நாடானது, உலகில் எப்பாகத்திலும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் இடம்பெற்றிருப்பதாக நம்பினால், அதனை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல முடியும். இந்த விடயத்தை ஹரி ஆனந்தசங்கரி ஒரு சர்வதேச விவகாரமாக முன்னெடுக்க முடியும். அதற்கான பதவி நிலை அதிகாரம் இப்போது அவருக்குண்டு. ஹரி ஆனந்தசங்கரி செய்வாரா? அவரை செய்யுமாறு கனடிய புலம்பெயர் சமூகம் நிர்ப்பந்திக்கும் ஆற்றலுடன் இருக்கின்றதா?

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கனடா இந்த விடயத்தை கொண்டு சென்றால், ராஜபகஷக்களும் இறுதி யுத்தத்தில் பங்கு கொண்ட இராணுவத் தளபதிகளும் வெளிநாடுகளில் வைத்து கைது செய்யப்படுவார்கள். கனடிய புலம்பெயர் சமூகம் இதுவரையில் ஜஸ்டின் ரூடோவை பொங்கல் விழாவுக்கு அழைத்து மகிழும் சமூகமாகவே இருந்திருக்கின்றது அதே போன்று கனடாவில் இருக்கின்ற ஜனநாயக இடைவெளியில் கிடைக்கும் கருத்து வெளிப்பாட்டு உரிமையை பயன்படுத்தி புலிகளின் சின்னங்களை சுமப்பதன் ஊடாக தங்களை தமிழ்த் தேசியத்திற்கு நெருக்கமான சமூகமாக காண்பித்துக் கொண்டது.

ஏனைய நாடுகளிலும் இதுதான் நடந்தது. இதற்கப்பால் இலங்கை அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் அரசியல் லொபியை புலம்பெயர் அமைப்புக்களால் செய்ய முடிந்ததா என்றால் பதில் பூச்சியமாகும். அவ்வாறான புலம்பெயர் லொபியில் பலமான நிலையில் புலம்பெயர் சமூகம் இருந்திருந்தால் இலங்கை அரசு இந்தளவு துணிவாகவும் உறுதியாகவும் சர்வதேச கடப்பாடுகளை தொடர்ந்தும் இலகுவாக புறக்கணித்து செயல்பட்டிருக்காது.

இப்போதாவது புலம்பெயர் சமூகத்தினால் முடி யுமா? என்னும் கேள்வி தான் தற்போது மேலெழுந்திருக்கின்றது. ஒரு கனடிய அரசியல்வாதியாக இருப்பதால் ஹரிஆனந்தசங்கரியும் அவரது குடும்பமும் நன்மையடையலாம் - அதற்கப்பால் அவரது பதவிக்கு எந்தப் பெறுமதியும் இல்லை.

ஆனால் சர்வதேச அரங்குகளில் ஈழத் தமிழருக்கான லொபிக்கு அவர் தலைமை தாங்குவாரானால், அது சமூகத்திற்கான பெருமையாகும். ஹரி ஆனந்தசங்கரி ஒரு சாதாரண கனடிய அரசியல்வாதியா அல்லது, ஈழத் தமிழர்களுக்கான கனடிய அரசியல்வாதியா? இந்தச் சந்தர்ப்பத்திலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விடயம் முடியவில்லையானால் அது இனி ஒரு போதும் நடக்காது. எதிர்காலத்தில் இது போன்ற சுலோகங்களை முன்வைத்து மக்களை ஏமாற்றும் பணிகளை அனைவரும் கைவிட வேண்டும்.

# பல நாடுகளுக்கு எதிராக போக்குவரத்துத் தடை! ஆராய்கின்றது அமெரிக்க டிரம்ப் நிர்வாகம்!

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் நிர்வாகம் புதிய தடைகளின் ஒரு பகுதியாக பல நாடுகளின் பிரஜைகளிற்கு போக்குவரத்து தடைகளை விதிப்பது குறித்து ஆராய்ந்து வருகின்றது.

இந்த விடயம் குறித்து நன்கறிந்தவர்கள் மூலமும், இது தொடர்பான ஆவணங்களை பார்வையிட்டவர்கள் மூலமும் இது தெரியவந்துள்ளது.

41நாடுகள் குறித்து கவனம் செலுத்தியுள்ள டிரம்ப் நிர்வாகம் இந்த நாடுகளை மூன்று பிரிவுகளாக பிரித்துள்ளது.

முதல் பிரிவில் ஆப்கானிஸ்தான் சிரியா ஈரான் வடகொரியா கியுபா உட்பட பத்துநாடுகள் காணப்படுகின்றன. இந்த நாடுகள் முழுமையான போக்குவரத்து தடை ஆபத்தை எதிர்கொள்கின்றன.

இரண்டாவது பிரிவில் எரித்திரியா ஹெய்ட்டி லாவோஸ் மியன்மார் தென்சூடான் போன்ற நாடுகள் காணப்படுகின்றன. இந்த நாடுகள் ஓரளவு விசா தடைகளை எதிர்கொள்ளக்கூடும் இதன் காரணமாக கல்வி மாணவர் விசாக்களுக்கும் குடிவரவு விசாக்களுக்கும் பாதிப்பு ஏற்படலாம்.

மூன்றாவது பிரிவில் பாக்கிஸ்தான் உட்பட 26 நாடுகள் காணப்படுகின்றன, இந்த நாடுகளின் அரசாங்கங்கள் தங்களின் தவறுகளை திருத்துவதற்கு 60 நாட்களிற்குள் நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் ஓரளவு தடைகளை எதிர்கொள்ளலாம். இந்த பட்டியலில் மாற்றங்கள் செய்யப்படலாம் என தெரிவித்துள்ள அமெரிக்க அதிகாரியொருவர் அமெரிக்க இராஜாங்க செயலாளர் மார்க்கோ ருபியோ உட்பட டிரம்ப் நிர்வாகத்தினர் இந்த தடைகளுக்கு இன்னமும் அங்கீகாரம் வழங்கவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தனது முதலாவது பதவிக் காலத்தில் ஏழு இஸ்லாமிய நாடுகளிற்கு எதிராக பயணத்தடையை கொண்டு வந்ததும் நீண்ட இழுபறியின் பின்னர் நீதிமன்றம் அதற்கு அனுமதி வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

தேசிய பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல்களை கண்டறிவதற்காக அமெரிக்காவிற்கு வரவிரும்பும் எந்தவொரு வெளிநாட்டவர் குறித்தும் தீவிர விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என ஜனவரி 20ம் திகதி டிரம்ப் நிர்வாக உத்தரவொன்றை பிறப்பித்திருந்தார்.

அமெரிக்காவிற்கு செல்பவர்களின் விபரங்களை ஆராய்வதில் எந்த நாடுகள் பலவீனமாக உள்ளன என கண்டறிந்து எந்த நாடுகளிற்கு முழுமையாக தடைகளை விதிக்க வேண்டும் போன்ற விபரங்களை தனது அமைச்சரவை உறுப்பினர்கள் மார்ச் 21ம்திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என டிரம்ப் கேட்டிருந்தார்.




# இந்தி மொழியை எங்கள் மீது திணிக்காதீர்கள் என்று நாங்கள் சொல்வது மொழி வெறுப்பல்ல தாய்மொழி பாதுகாப்பு



உங்கள் இந்தி மொழியை எங்கள் மீது திணிக்காதீர்கள் என்று நாங்கள் சொல்வது பிறமொழி வெறுப்பல்ல. அது தாய்மொழியை பாதுகாக்கும் முயற்சி என்று ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாணுக்கு நடிகர் பிரகாஷ் ராஜ் பதிலடி கொடுத்துள்ளார்.

முன்னதாக ஜன சேனா கட்சியின் 12-வது ஆண்டு விழாவில் தனது ஆதரவாளர்களுக்கு மத்தியில் அக்கட்சியின் தலைவரான பவன் கல்யாண் பேசி இருந்தார். அப்போது அவர், இந்தியாவுக்கு பல மொழிகள் தேவை. அது தேசத்துக்கு சிறப்பு சேர்க்கும். இது தமிழகத்துக்கும் பொருந்தும். இந்தி மொழியை எதிர்க்கும் தமிழகம், தமிழ் திரைப் படங்களை பிற மொழிகளில் டப்பிங் செய்யக் கூடாது. ஆனால், நிதி ஆதாயத்துக்காக தமிழ் படங்கள் பல மொழிகளில் டப் செய்யப்படுகின்றன எனக் கூறியிருந்தார். இதற்குப் பதிலடி கொடுத்துள்ள நடிகர் பிரகாஷ் ராஜ்,

உங்கள் இந்தி மொழியை எங்கள் மீது திணிக்காதீர்கள் என்று நாங்கள் சொல்வது பிறமொழி வெறுப்பல்ல. அது எங்களின் தாய்மொழியை, எங்களது கலாச்சார அடையாளத்தை சுயமரியாதையோடு பாதுகாக்கும் முயற்சியாகும். இதை யாரேனும் பவன் கல்யாணுக்கு எடுத்துச் சொல்லவும் என்று சமூக வலைதளப் பக்கத்தில் கருத்தைப் பகிர்ந்துள்ளார்.

பவன் கல்யாணின் கருத்துக்கு திமுக எம்.பி. கனிமொழியும் கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் தனது பதிவில், தொழில்நுட்ப வளர்ச்சி எங்களை திரைப்படங்களை மொழி எல்லைகள் கடந்து ரசிக்கும்படி செய்திருக்கிறது என்று குறிப்பிட்டு, பவன் கல்யாண் கடந்த 2017-ஆம் ஆண்டு தெரிவித்த கருத்தையும் சுட்டிக் காட்டியுள்ளார். அந்தப் பதிவில் பவன், வட இந்திய அரசியல்வாதிகள் நம் கலாச்சார பன்முகத்தன்மையை புரிந்து உரிய மரியாதை கொடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். அன்றைய கருத்தையும், இன்றையும் கருத்தையும் ஒப்பிட்டு பவன் கல்யாணை கனிமொழி விமர்சித்துள்ளார். பவன் கல்யாணின் கருத்துக்கு பலரும் கண்டனங்களைப் பதிவு செய்து வருகின்றனர்.

# இசைஞானி இளையராஜாவுக்கு இந்தியப் பிரதமர் வாழ்த்து!



இந்திய பிரதமர் நரேந்தி மோடியை இசைஞானி இளையராஜா 18 மார்ச் 2025 செவ்வாய்க்கிழமை சந்தித்துள்ளார். இசைஞானி இளையராஜா 35 நாட்களில் எழுதி முடித்த முழு சிம்பொனியை 'வேலியன்ட்' எனும் தலைப்பில் கடந்த 8ஆம் திகதி லண்டனில் உள்ள அப்பல்லோ அரங்கத்தில் அரங்கேற்றினார். இதன் மூலம் ஆசிய கண்டத்தில் சிம்பொனியை எழுதி, சர்வதேச அளவில் அரங்கேற்றிய முதல் இசையமைப்பாளர் எனும் வரலாற்றுச் சாதனையைப் படைத்தார்.

இந் நிலையில் இந்திய பிரதமர் மோடியை இளையராஜா சந்தித்து தனது சிம்பொனி தொடர்பாக வாழ்த்து பெற்றுள்ளார். இது தொடர்பாக தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த இளையராஜா, பிரதமர் மோடியுடன் மறக்கமுடியாத சந்திப்பு. எனது சிம்பொனி 'வேலியன்ட்' உட்பட பல விஷயங்களைப் பற்றி நாங்கள் பேசினோம். அவரது பாராட்டையும் ஆதரவையும் பணிவுடன் பெற்றுக் கொண்டேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார். (4ம் பக்கம் பார்க்க)

# திருத்தப்பட்ட பட்டியலில் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட 45 அமைப்புக்களுக்கு தடை வெளியிட்டது இந்தியா!




தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட 45 அமைப்புகள் அடங்கிய தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளின் திருத்தப்பட்ட பட்டியலை இந்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் மற்றும் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டதாகக் கூறி, மத்திய அரசால் தடை செய்யப்பட்ட மற்றும் பயங்கரவாத அமைப்பு லின் திருத்தியமைக்கப்பட்ட 67 அமைப்புகள் கொண்ட பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி 45 பயங்கரவாத அமைப்புகளாகவும், 22 சட்டவிரோத அமைப்புகளாகவும் வகைப் படுத்தப்பட்டு திருத்தி அமைக்கப்பட்ட பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, தமிழீழ விடுதலைப் புலிகள், பாபர் கால்சா இன்டர்நேஷனல், காலிஸ்தான் கமாண்டோ படை, காலிஸ்தான் ஜிந்தாபாத் படை, சர்வதேச சீக்கிய இளைஞர் கூட்டமைப்பு, லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ முகமது, மக்கள் பாசிச எதிர்ப்பு முன்னணி, ஹர்கத் உல் முஹாஜஜீதின், அல் உமர் முஹாஜஜீதின், ஜம்மு காஷ்மீர் இஸ்லாமிய முன்னணி, அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி, சிமி, தமிழ்நாடு விடுதலைப் படை, தமிழ் தேசிய மீட்புப் படை, இந்திய கம்யூ னிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) மக்கள் போர் உள்பட 45 அமைப்புகள் இந்தியாவில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், போப்புலர் ப்ரண்ட் ஆப் இந்தியா, மக்கள் விடுதலை இராணுவம், தேசிய பெண்கள் முன்னணி, தேசிய மனித உரிமைகள் அமைப்பு கூட்டமைப்பு, அகில இந்திய இமாம்கள் கவுன்சில் உள்பட 22 அமைப்புகள் சட்ட விரோத அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த அமைப்புகள் இந்தியாவில் செயல்பட தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், அவர்களின் வங்கிக் கணக்குகள் முடக்கப்படும். இந்த அமைப்புகளுக்கு ஆட்சேர்ப்பது, நிதி திரட்டுவது உள்ளிட்ட உதவி செய்வது கடும் குற்றமாகும்.

அவ்வாறான நபர்களுக்கு எதிராக சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க மன்னார் பிரதேசத்தில் காற்றாலை மின் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு இந்தியாவின் அதானி நிறுவனத்துடன் மேற் கொண்ட தீர்மானத்தை ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் இருந்து 18 மார்ச் 2025 மீளப்பெறப்பட்டுள்ளன.

சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் சீராக்கல் மனுவொன்றை சமர்ப்பித்து திட்டம் வாபஸ் பெறப்படுவதாக இந்திய அதானி நிறுவனம் இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

அதானியின் அறிவிப்புக்குப் பின்னர் மனுதாரர்கள் அடிப்படை உரிமை மனுக்களை மீளப் பெற்றுள்ளனர். சுற்றுச் சூழல் நீதிக்கான மையம் உள்ளிட்ட 5 தரப்பினரால் எதிரான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இதனிடையே இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள் குறித்து அதானி நிறுவனம் தொடர்ந்தும் கலந்துரையாடல்களை மேற் கொண்டு வருவதாக கூறப்படுகின்றது.

# 13 தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன? ஐ.நா.வில் இந்தியப் பிரதிநிதி கூறிய பதில் இது!



தமிழருக்கான 13வது திருத்த சட்டத்தில் இந்தியாவின் நிலைப் பாட்டில் மாற்றம் இல்லை என இந்தியாவிற்கான ஐ.நா.பிரதிநிதி அரின்டாம் பாக்ஜீ தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிமை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 58வது கூட்டத் தொடர் வேளையில், இந்திய தூதுவராலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஓர் கூட்டத்தின் போதே இந்த தகவலை அவர் வெளியிட்டுள்ளார்.

ஐ.நா. மண்டபத்தில் நடத்தப்பட்ட இக் கூட்டத்தின் முக்கிய பேச்சாளராக, இந்தியாவின் தேசிய மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர், நீதியரசர் (Justice) வி. இராம சுப்பிரமணியம், இந்தியாவின் மனித உரிமை நிலைமை பற்றி ஓர் நீண்ட உரையாற்றியிருந்தார். இவர் தமிழ் நாட்டு தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் தனது உரையில், படிப்பிக்கும் பொழுது யாரும் ஏதும் முக்கிய கேள்வி கேட்டால் இவ் விடயம் பாடத் திட்டத்தில் (syllabus) இல்லையென கூறுவது சுலபமென கூறியிருந்தார்.

இராம சுப்பிரமணியத்தின் உரையை தொடர்ந்து சபையில் கேள்விகள், அபிப்பிராயங்கள், கருத்துக்கள் கூறுவது ஆரம்பமாகியது.

அவ்வேளையில் அக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரான்ஸ் தமிழர் மனித உரிமைகள் மையத்தின் — பொதுச் செயலாளர் ச.வி.கிருபாகரன் கேள்வி எழுப்பினார்.

அதாவது சிறிலங்காவில் யுத்தம் முடிந்த காலம் தொட்டு, இந்தியாவினால், தமிழ் மக்களிற்கான அரசியல் தீர்வாக 13வது திருத்த சட்டத்தை முற்று முழுதாக நிறைவேற்ற வேண்டுமென இந்தியா கூறி வந்துள்ளது.

ஆனால் சிறிலங்காவில் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததை தொடர்ந்து, இந்தியா தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் அமைதியாக உள்ளது? இவ் அமைதி, 13ம் திருத்த சட்ட விடயத்தில் இந்தியாவின் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா? என கிருபாகரன் கேள்வி எழுப்பினார்.

இவ்வினா வெளிநாட்டு விடயமாகையால் இராம சுப்பிரமணியம் இவ் வினாவிற்கு பதில் கூறுவதை தவிர்த்திருந்த பொழுதிலும், இந்தியாவிற்கான ஐ.நா. பிரதிநிதி அரின்டம் பாக்ஜீ (Mr. Arindam BAGCHI) அவர்கள், சபையில் உடனே பதில் கூறியிருந்தார்.

அவர் கூறியதாவது, சிறிலங்கா விடயத்தில், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வான 13வது திருத்த சட்டம் என்பதில் இந்தியாவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் கிடையாது. நீங்கள் விரும்பினால், இவ் விடயமாக டெல்கியில் கதைத்து உறுதிப்படுத்தலாமென வும் கூறியிருந்தார்.

அரின்டம் பாக்ஜீ சிறிலங்காவில் 2014ம் முதல் 2018 ஆண்டு வரை இந்தியாவின் துணை தூதுவராக கடமையாற்றியதுடன், இந்தியாவின் வெளிநாட்டு அமைச்சின் பேச்சாளராக மூன்று வருடங்கள் கடமையாற்றினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக்கூட்டத்தில் சிறிலங்காவின் தூதுவர் திருமதி கிமாலி அருண திலாக உட்பட, மண்டபம் நிறைந்த ராஜதந்திரிகள், தமிழ் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

# சதியா? அல்லது பதவிப் போட்டியா?

இலங்கைத் தமிழ் அரசு கட்சியை பிளவுபடுத்த சதிகள் நடக்கின்றன என்று கட்சியின் தற்காலிக தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்திருக் கிறார். புதிய அரசியல் சவால்களை எதிர் கொள்வ தற்குக் கட்சியிடமுள்ள திட்டங்கள் என்ன? தமிழ் மக்களின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார வாழ்வை மேம்படுத்துவதற்கு கட்சி எவ்வாறான செயல்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது? போன்ற விடயங்கள் தொடர்பில் சீ. வீ. கே. சிவஞானம் இது வரையில் பேசியதில்லை.

மாறாக, தலைமைப் பொறுப்புக்கு நியமிக்கப்பட்ட திலிருந்து அவ்வப் போது தங்களின் உள்பிரச்னை பற்றியே பேசி வருகிறார்.

இதிலிருந்து கட்சியைப் பிளவுபடுத்துவதற்கு எவரும் சதி செய்யவில்லை. மாறாக, கட்சிக்குள் இருக்கும் சிலருக்கிடையிலான பதவிப் போட்டியால் கட்சி சீரழிந்து கொண்டிருக்கிறது என்பதே உண்மை. ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் புதிய சவால்களுக்கு முகங் கொடுக்கக் கூடிய நிலையில் வலுவானதோர் அரசியல் ஸ்தாபனத்தை உருவாக் கும் முயற்சியில் இதுவரையில் எவருமே வெற்றி பெறவில்லை. அவர்களால் முடியவில்லை.

இந்த நிலையில் தான், இருப்பதில் பரவாயில்லை என்னும் அடிப்படையில் மக்கள் வேறு வழியின்றி தமிழ் அரசு கட்சிக்கு வாக்களித்து வருகின்றனர். இதன் காரணமாகவே, தமிழ் அரசுக்கட்சியால் இப்போதும் அதனை ஒரு கட்சியாக முன்னிறுத்திக் கொள்ள முடிகிறது.

தென்பகுதியை உற்று நோக்கினால் தேர்தல்களில் ஒரு குறிப்பிட்ட சூழலில் தோல்வியை சந்திக்கும் கட்சிகள் புதிய அரசியல் சவால்களை துல்லியமாக மதிப்பிட்டு அதற்கேற்ப தங்களை பலப்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றுவதை காணக்கூடியதாக இருக்கிறது.

மொட்டு சின்னம் தென்னிலங்கைக்கு பரிட்சயமில் லாத சின்னம். ஆனால், பஸில் ராஜபக்ஷ தலைமை யிலான அணி மிகவும் குறுகிய காலத்தில் அந்த சின்னத்தை சிங்கள மக்களுக்கான புதிய அரசியல் சின்னமாக முன்னிறுத்துவதில் வெற்றி பெற்றது. இதனைத் தொடர்ந்தே அவர்களால் தேர்தலில் வெற்றி பெறமுடிந்தது.

கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் நன்கு திட்டமிட்ட வகையில் பயன்படுத்திக் கொண்ட ஜே. வி. பியானது, ராஜபக்ஷக்களின் வீழ்ச்சியைத் தொடர்ந்து சிங்கள மக்களுக்குள் தங்களை ஒரே யொரு மாற்றுத் தலைமையாக முன்னிறுத்துவதில் வெற்றி பெற்றது. அரிய வரலாற்று வெற்றியை பதிவு செய்திருக்கிறது.

இன்று தமிழ் மக்களும் அவர்களை நோக்கிச் சரிந்து கொண்டிருக்கும் நிலைமை உருவாகி விட்டது. ஆனால் தமிழ்ச் சூழலை உற்று நோக்கி னால் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போர் அனைவரதும் ஒரேயோர் இலக்கு எப்படியாவது தாங்கள் பாராளுமன்றம் சென்றுவிட வேண்டும்.

இதனைத் தவிர அவர்களிடம் வேறு எந்தவொரு சிந்தனையும் இல்லை. கட்சியை அடுத்த கட்டத் துக்கு வளர்க்க வேண்டும் என்னும் எண்ணமோ இம்மியளவுகூட அவர்களிடம் இல்லை.

இந்த நிலையில் தான் யுத்தத்துக்கு பின்னரான கடந்த பதினைந்து வருடங்களில் ஒரு வலுவான ஜன நாயக அரசியல் அடித்தளத்தை எவராலும் உரு வாக்க முடியாமல் போனது. இனியும் அது நடக்கும் என்பதற்கான எந்தவொரு நம்பிக்கைக் கீற்றையும் காணமுடியவில்லை.

பொதுவாகத் தங்களுடைய தவறுகளால் சறுக்கி விழுகின்ற போது அதற்கான காரணத்தை வெளி யில் தேடும் ஓர் அரசியல் நோய் தமிழர்களுக்கென்று கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இருந்து வருகின்ற ஒன்று தான்.

எழுச்சி என்றால் அது எங்களின் புத்திசாலித்தனம் அர்ப்பணிப்பு தியாகம்.

ஆனால், அதுவே வீழ்ச்சி சரிவு தோல்வி அழிவு என்றவுடன் அதற்கு மற்றவர்களை நோக்கி விரல் நீட்டுவது. இது அரசியல் அல்ல மாறாக ஓர் அரசி யல் மனநோய்.

# வடக்கில் கஜேந்திரகுமார் தவராஜா கூட்டு! கிழக்கில் பிள்ளையான் வியாழேந்திரன் கூட்டு!




ஜனநாயக தமிழரசு கட்சியின் தலைவர் கே.வி.தவராசாவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர், கஜேந்திரகுமாரும் இணைந்து பயணிக்கவுள்ளதாக ஜனநாயக தமிழரசு கட்சியின் பிரமுகரான கருணாகரன் குணாளன் தெரிவித்துள்ளார். இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

தமிழ்த்தேசிய சித்தாந்தத்தினை பலப்படுத்தும் வகையிலும் சிங்கள பேரினவாதத்தின் ஒற்றர்களால் அழிக்கப்பட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பினை மீள் உருவாக்கம் செய்யும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் சைக்கிள் சின்னத்தில் தமிழர் தாயகத்தில் இரு கட்சிகளும் இணைந்து போட்டியிடவுள்ளவுள்ளனர். அதே போன்று மாகாணசபைகளுக்கான தேர்தல் நடைபெறுமாகவிருந்தால் இக்கூட்டமைப்பின் ஊடாகவே நீதித்துறை சார்ந்த பிரமுகர் ஒருவர் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடவுள்ளார். பாரம்பரிய கட்சியான இலங்கை தமிழரசு கட்சியில் ஊடுருவியுள்ள சிங்கள பேரினவாத தரப்பின் ஒற்றர்களின் தமிழ்த்தேசிய விரோத செயற்பாடுகளின் காரணமாக அக்கட்சியிலிருந்து வெளியேறி வருகின்றவர்கள் கே.வி. தவராசா தலைமையிலான சனநாயக தமிழரசு கட்சியில் தொடர்ச்சியாக இணைந்து வருகின்றனர்.

தமிழ்மக்களின் நீண்டகால உரிமைப் போராட்டத்திற்கு முழுமையாக வலுச்சேர்க்கும் நோக்கில் இணைந்து பயணிக்கவுள்ள இக்கூட்டமைப்பில் நேர்மை மிகுந்த வெளிப்படையான செயற்பாடுகளை மேற் கொள்கின்ற அனைத்து தமிழ்தேசிய தரப்பினரும் இணைந்து பயணித்து தமிழ்மக்களின் மனதை வெல்ல வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் 'கிழக்கு தமிழர் கூட்டமைப்பு' எனும் புதிய கூட்டமைப்பு உதயமாகியுள்ளது. முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியா



ழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகத்தினருக்கு இடையிலான உத்தியோகபூர்வ புரிந்துணர்வு கைச்சாத்திடும் நிகழ்வு 15 மார்ச் 2025 சனிக்கிழமை காலை 10 மணியளவில் மட்டக்களப்பு ரிவேரா விடுதியில் இடம் பெற்றுள்ளது.

கிழக்குத் தமிழர்களின் வளர்ச்சியையும் சுபிட்சத்தையும் கருத்தில் கொண்டு பல்லின சிக்கல்களுக்கு முகம் கொடுக்கும் வண்ணம் பலமிக்க அரசியல் சக்தி ஒன்றினை கட்டமைக்கும் முயற்சியில் 'கிழக்கு தமிழர் கூட்டமைப்பு' எனும் புதிய கூட்டமைப்பு இன்று உதயமானது.

இதன் முதற்கட்டமாக முன்னாள்



கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சிக்கும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகத்தினருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ புரிந்துணர்வு கைச்சாத்திட்டனர்.

இந்த ஒற்றுமைக்கான பயணத்தில் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கிழக்கை அடிப்டையாகக் கொண்டு இயங்கும் அரசியல் சக்திகள் அனைவரையும் ஒன்றிணைத்து போட்டியிட உள்ளதோடு எதிர்காலத்தில் பல்வேறு தமிழ் அரசியல் கட்சிகளையும் சிவில் சமூக ஆர்வலர்களையும் ஒன்றிணைத்து அதனுடாக எதிர் காலத்தில் கிழக்குத் தமிழர்களின் அரசியல், சமூக பாதுகாப்பு அரணாக பலம்பொருந்திய கட்டமைப்பாக இது செயல்படவுள்ளது என தெரிவித்தனர்.





வங்கிக் கடன்
தொல்லைகளிலிருந்து
விடுதலை

NEW LIFE FRESH START


Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience
in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# யூடியூப்பர்களும் தமிழ் சமூகமும்

கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த யூத எழுத்தாளர் ஆகிய ஆர்தர் கோஸ்லரிடம் எதிர்காலத்தைப் பற்றிய தீர்க்கதரிசனத்தைக் கூறுங்கள் என்று கேட்ட பொழுது, அவர் சொன்னார், மந்தர்களே – mediocres – எல்லா இடங்களிலும் முதன்மை வகிப்பார்கள் என்று. அவர் எதைக் கருதி அவ்வாறு சொன்னார் என்பது தெளிவில்லை. ஆனால் இப்போதுள்ள சமூக வலைத்தள ஊடகச் சூழலை வைத்துப் பார்க்கும் பொழுது அது ஒரு தீர்க்கதரிசனமோ என்று சிந்திக்கத் தோன்றுகிறது.



சமூக வலைத்தளங்களின் பயன்பாடு என்பது இரண்டு புறமும் கூரான கத்தி போன்றது. ஒருபுறம் சமூக வலைத்தளங்கள் சாதாரண மக்களைப் பொறுத்த வரையில் அதிகம் ஜனநாயகமானவை. பாரம்பரிய ஊடகங்களுக்கு இருக்கக் கூடிய கட்டுப்பாடுகள் எவயுமின்றி யாரும் விரும்பியதைக் கூறலாம். அதை விரைவாகப் பரப்பலாம். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது நலிவுற்ற பிரிவினர் தங்கள் கருத்துக்களை உடனடியாகவும் விரைவாகவும் பரவலாகவும் பரப்பக்கூடிய வாய்ப்புகள் முன்னெப்பொழுதையும் விட அதிகரித்துள்ளன. இது முக்கியமான நன்மை. அவ்வாறு சமூக வலைத்தளங்களை உச்சமாகப் பயன்படுத்திய ஒரு மருத்துவர் தமிழ் மக்களால் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

அதேசமயம் பாரம்பரிய ஊடகங்கள் போலல்லாது சமூக வலைத்தள ஊடகச் சூழல் என்பது துறை சார்ந்த நிபுணத்துவம், துறை சார் அறம் என்பவற்றை அதிகம் மதியாத ஒன்றாகவும் மாறி வருகிறது. எப்படியென்றால் அது பொதுப் புத்தியை அதிகம் பிரதிபலிப்பது. பொதுப் புத்தி எப்பொழுதும் விஞ்ஞான பூர்வமானதாக அறிவுபூர்வமானதாக இருக்க வேண்டும் என்று இல்லை. அது பெரும்பாலும் இனம் சார்ந்து, மதம் சார்ந்து மொழி சார்ந்து, சாதி சார்ந்து, ஊர் சார்ந்து, பால் சார்ந்து… என்று பல்வேறு சார்பு நிலைகளுக்கு ஊடாகவும் வெளிப்படுவது. அது பெரும்பாலும் ஒரு குழு மனோ நிலை.

அதனால், சமூக வலைத்தள சூழல் எனப் படுவது, மற்றொரு சமூகத்துக்கு அல்லது சமூகத்தின் மற்றொரு பிரிவினருக்கு அல்லது மற்றொரு நாட்டுக்கு எதிரான கருத்துக்கள் அதிகம் பரவலாக்கப்படுவதற்கா னவாய்ப்புகளை ஒப்பீட்டளவில் அதிகமாகக் கொண்டிருக்கின்றது.

அதனால் தான் ஐநாவின் வெறுப்புப் பேச்சுகளுக்கான சிறப்புத் தூதுவர்கள் சமூகவலைத்தளச் சூழலானது இன ரீதியான, மத ரீதியான, நிற ரீதியான, வெறுப்புப் பேச்சுக்களை பரப்புகின்றன என்று விமர்சிக்கின்றார்கள். குறிப்பாக பர்மாவில் ரோகியங்கா முஸ்லிம்களுக்கு எதிரான இன அழிப்பில் முகநூல் ஒரு கருவியாகத் தொழில்பட்டது என்று ஐநாவின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

அது போலவே சில ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் கண்டி, திகன ஆகிய இடங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறைகளின் போது, முகநூல் தடை செய்யப்பட்டது.

இப்போதுள்ள அமெரிக்க அதிபர் டிரம்ப் முதல் தடவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பொழுது, ருவிட்டர் தளத்தை அதிகம் பயன்படுத்தியதாக விமர்சனங்கள் எழுந்தன.

அதாவது சமூக வலைத்தளச் சூழல் என்பது ஒரு புறம் சமானிய மக்களின் பொதுப் புத்தியை பிரதிபலிக்கின்றது. இன்னொரு புறம் அவ்வாறு பொதுக் புத்தியை பிரதிபலிப்பது என்பதினாலே பொது புத்திக்குள் காணப்படும் இனம்,




மொழி,மதம், நிறம் சாதி சார்ந்த வெறுப்புகளை பரவலாக்கும் களமாகவும் மாறி வருகிறது.

அதனால் தான் சமூக வலைத்தள சூழல் என்பது நிபுணர்களை வெளித்தள்ளுகின்றது என்று பொதுவாக அவதானிக்கப்பட்டுள்ளது. துறை சார் ஞானம் இல்லாதவர்கள் கருத்துக ˙கூறும் ஒரு பொதுத் தளத்தில் துறை சார் நிபுணர்கள் கருத்துக் கூறி அவமதிக்கப்பட விரும்ப மாட்டார்கள். எனவே அவர்கள் விலகி நிற்பார்கள். இதனால் ஒரு குறிப்பிட்ட கருத்து விஞ்ஞான பூர்வமாகவும் அறிவு பூர்வமாகவும் அணுகப்படும் சூழலை அங்கே முழுமையாக உத்தரவாதப்படுத்த முடிவதில்லை.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை குறிப்பாக, 2009க்குப் பின்னரான ஈழத் தமிழ் அரசியல் சூழலிலும் அதைக் காண முடியும். வெறுப்பர்களே அதிகம் விளைந்து விட்டார்கள். எதையும் ஆழமாக வாசிப்பதில்லை. ஒரு கைபேசியும் இணைய இணைப்பும் இருந்தால் காணும். யாரும் எதையும் சொல்லலாம் என்ற ஒரு நிலை. இதில் ஜனநாயகம் உண்டு. அதேசமயம் எனது நண்பர் ஒருவர் கூறுவது போல, தனக்குத் தெரியாத ஒன்றைப் பற்றிக் கருத்துக் கூறும் துணிச்சலை அது வழங்கி விட்டது. இந்தத் துணிச்சல் மனித குலம் இது வரை கண்டடைந்த அறிவியல் மகத்துவங்களுக்கு எதிரானது. எனக்குத் தெரியாத ஒன்றைப் பற்றி கருத்துக் கூறும் துணிச்சல் என்பது அறிவியலின் வீழ்ச்சி.

பெரும்பாலான சமூக வலைத்தளங்கள் குறிப்பாக யுடியூப்கள் பொதுப் புத்தியை கவரும் பொருட்டு காணொளிகளை வெளியிடுகின்றன. அதனால் பொது புத்தியின் பலவீனம் எதுவென்று கண்டு அதனைச் சுரண்டி காசு உழைக்கின்றன. ஒரு சமூகத்துக்கு நல்லதையும் உன்னதமானதையும் எடுத்துக் காட்டி அந்த சமூகத்தின் உளவியல் கூர்ப்பை அடுத்த கட்டத்துக்கு கொண்டு போக வேண்டியது தான் ஊடகப் பணியாகும்.

மாறாக அந்த சமூகத்தின் பலவீனம் எதுவோ அல்லது அந்த சமூகத்தை எங்கே இலகுவாகச் சுரண்டலாமோ அதை விற்பது என்பது சமூகக் கூர்ப்புக்கு எதிரானது. மனித குலத்துக்கு எதிரானது.


குறிப்பாக ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரை 2009க்கு பின்னரான கூட்டு உளவியல் என்பது அதிகம் கொந்தளிப்பானது. இனப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காத பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காத் தலைமைத்துவ வெற்றிடம் புலம்பெயர்ந்த தமிழர்களின் ஆதிக்கம்.. போன்ற பல காரணிகளும் கடந்த 15 ஆண்டு கால ஈழத் தமிழர்களின் கூட்டு உளவியலைத் தீர்மானிக்கின்றன. இக்கூட்டு உளவியலைத் தீர்க்க தரிசனமாகக் கையாளவல்ல தலைமைகள் கடந்த 15 ஆண்டுகளாக மேலுயரவில்லை. கூட்டுக் காயங்களிலும் கூட்டு மனவடுக்களிலும் அழுந்திக் கிடக்கும் ஒரு சமூகத்துக்கு, கூட்டுச் சிகிச்சையாக அமையவல்ல அரசியலை, விழுமியங்களை முன் வைத்துத் தலைமை தாங்கவில்லை பொருத்தமான தலைவர்கள் இல்லாத வெற்றிடத்தில், சமூக வலைத்தளங்களால் திறந்து விட்டிருக்கும் கட்டுப்பாடற்ற,கட்டற்ற சூழலானது வெறுப்பவர்களுக்கும் மந்தர்களுக்கும் கயவர்களுக்கும் பொய்யர்களுக்கும் அதிகம் வாய்ப்பானதாக மாறி வருகிறது.

பொதுவாக ஒரு சமூகத்தின் பொதுப் புத்தியானது சீரியஸானதாக அறிவு பூர்வமானதாக விஞ்ஞான பூர்வமானதாக இருப்பது குறைவு. சீரியஸானதுக்கும் ஜனரஞ்சகத்துக்கும் இடையிலான இடைவெளி என்பது எல்லாச் சமூகங்களிலும் காணப்படுவது. ஆனால் ஈழத் தமிழ் சமூகத்தில் அந்த இடைவெளி ஆழமானது. யூரியுப்பர்களின் காலத்தில் அந்த இடைவெளி மேலும் ஆழமாகிக் கொண்டே போகிறது. சீரியஸான, அறிவு பூர்வமான சமூக விலைத்தலங்களையும் காணொளித் தளங்களையும் பார்ப்பவர்களின் எண்ணிக்கை சில ஆயிரங்கள் தான். சீரியஸ் இல்லாத மந்தமான உணர்ச்சிகரமான, விஞ்ஞான பூர்வமற்ற, பொழுதுபோக்கான, எல்லா வற்றையும் காசாக்க முற்படும் யூரியுப்களை பார்ப்பவர்களின் எண்ணிக்கை பல ஆயிரம். சில சமயங்களில் அந்தத் தொகை மில்லியன் கணக்கானது.

இவ்வாறு அறிவு பூர்வமானதுக்கும் மந்தமானதுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துச் செல்லுமோர் சமூகப் பொருளாதார அரசியல் சூழலில், அண்மை வாரங்களாக யூடியூபர்களின் மோசடிகள் தொடர்பாகவும் குற்றச்செயல்கள் தொடர்பாகவும் அதிகம் செய்திகள் வெளி வருகின்றன.

ஒருபுறம் நிதிப்பலம் மிக்க புலம் பெயர்ந்த சமூகம். அது தாயகத்தை நோக்கி பிரிவேக்கத்தோடு உதவுவதற்குக் காத்திருக்கின்றது. இன்னொரு புறம் தாயகத்தில் உதவிக்காக காத்திருக்கும் பாதிக்கப்பட்ட மக்கள். இந்த இரண்டு தரப்பையும் அதாவது தேவையையும் வளங்களையும் இணைப்பவர்கள் யார் என்று பார்த்தால், ஒன்றில் தனிநபர்கள் அல்லது அரசு சார்பற்ற நிறுவனங்கள் அல்லது சில தொண்டு நிறுவனங்கள் போன்றவை தான். இதில் தனிநபர்களாக இருப்பவர்களில் ஒரு பகுதியினர் அரசியல்வாதிகள் அரசியல் செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இதில் ஒரு பிரிவினர் தான் கண்ணீரையும் வறுமையையும் காணொளியாக்கிக் காசாக்குகிறார்கள்.

இதில் ஒரு சிறு தொகையினர் ஒரு கை கொடுப்பது மறு கைக்குத் தெரியாமல் தொண்டு செய்கிறார்கள். அதை அவர்கள் விளம்பரப்படுத்துவதில்லை. ஆனால் அவர்கள் மிகச் சிறிய தொகையினர். யாருக்கெல்லாம் பிரபல்யம் வேண்டுமோ, யாரெல்லாம் பிரபல்யத்தைக் காசாக்க விரும்புகின்றார்களோ, அவர்கள் தான் இப்பொழுது குற்றச்சாட்டுக்கு இலக்



காகியிருக்கிறார்கள்.

இது ஒரு உலகப் பொதுவான ஒரு போக்குத் தான். ஆனால் ஈழத் தமிழ் அரசியற் சூழலில் இதன் விளைவுகள் குறிப்பிடத்தக்க அளவுக்குப் பாரதூரமானவை. 2009க்குப் பின்னரான ஈழத் தமிழர்களின் சமூகப் பொருளாதார அரசியல் உளவியல் எனப்படுவது கொந்தளிப்பானது. தலைமைத்துவம் இல்லாதது. இந்த வெற்றிடத்துக்குள் யூடியுபர்கள் புகுந்து விளையாடுகிறார்கள். நேரலையில் தோன்றி ஒரு மருத்துவர் நாடாளுமன்ற உறுப்பினரும் ஆகி விட்டார். எனவே இந்த விடயத்தில் 2009க்குப் பின்னரான தமிழ்க் கூட்டு உளவியலை வெற்றிகரமாகக் கையாளவில்லை, ஒரு கூட்டுச் சிகிச்சையாக அமையவல்லை, அரசியலை முன்னெடுக்க விரும்பும் தரப்புகள் ஒரு பண்பாட்டு மறுமலர்ச்சிக்குத் தலைமைதாங்கத் தயாராக இருக்க வேண்டும். புத்திசாலிகளும் அறிவுபூர்வமாகச் சிந்திப்பவர்களும் துறை சார்ந்த ஞானம் உடையவர்களும் அரசியலில் மேலோங்கும் பொழுது, மந்தர்கள் பின்வாங்கி விடுவார்கள். இல்லையென்றால் மந்தர்களே எல்லா இடங்களிலும் மேலெழுவார்கள்.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

15 மார்ச் 2025 – 21 மார்ச் 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## நினைவழியா நினைவுகள்



### திருமதி செல்வநாயகி சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி திரு செல்லையா சோமசுந்தரம் ஆகியோரது நினைவு நாளையொட்டி கனடாவில் வசிக்கும் அன்னாரது குடும்பத்தினர் 21 மார்ச் 2025 வெள்ளிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி திரு செல்லையா சோமசுந்தரம் இணையரை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நடராஜா சிதம்பரநாதன்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா சிதம்பரநாதன் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 20 மார்ச் 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நடராஜா சிதம்பரநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பாக்கியம் மயில்வாகனம்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் மயில்வாகனம் அவர்களுடைய இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 24 மார்ச் 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பாக்கியம் மயில்வாகனம் அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.




# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



01 மார்ச் 2025 சனிக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த டாக்டர் இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



17 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை கனடா குடும்ப இணைவு நன்நாளாகும். அன்றைய தினத்திற்காக கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி குடும்பத்தினர் 02 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



05 மார்ச் 2025 புதன் கிழமை கனடாவில் வசிக்கும் திரு கண்ணன் இலங்கையன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு கண்ணன் இலங்கையன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



05 மார்ச் 2025 புதன்கிழமை கட்டுடை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கோகுலன் (கோபி) சண்முகம் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவர்களது குடும்ப நண்பர் திரு ஆர்.ஆர்.ராஜ்குமார் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்



07 மார்ச் 2025 வெள்ளிக்கிழமை உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி முருகேசு பரிமளம் அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




08 மார்ச் 2025 சனிக்கிழமைகனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீகுமார் ரோகினிதேவி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஸ்ரீதேவி ஸ்ரீகுமார் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஸ்ரீதேவி ஸ்ரீகுமார் அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



08 மார்ச் 2025 சனிக்கிழமை மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு விசுவலிங்கம் சுப்பிரமணியம் அவர்களது 8வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



08 மார்ச் 2025 சனிக்கிழமை தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி புவனேஸ்வரி நடராஜா அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



10 மார்ச் 2025 திங்கட்கிழமை யாழ்.சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி மார்க்கண்டு மனோன்மணி அவர்களது 26வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது கணவர் திரு செல்லர் மார்க்கண்டு அவர்களையும் நினைவு கூர்ந்து அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச சிறப்பு உணவு வழங்கினார்கள்.



10 மார்ச் 2025 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி தினுஷன் செல்வராஜா லக்ஷி தம்பதிகளின் செல்வப்புதல்வன் றேயுன் தினுஷனின் முதலாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் றேயுன் தினுஷன் தனது பெற்றோரகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



19 மார்ச் 2025 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு நல்லையா ஜெயபாலன் அவர்களது பிந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு நல்லையா ஜெயபாலன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



20 மார்ச் 2025 வியாழக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா சிதம்பரநாதன் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




21 மார்ச் 2025 வெள்ளிக்கிழமை தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி செல்வநாயகி சோமசுந்தரம் அவர்களது நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

## 39வது திருமண நன்நாள் வாழ்த்து



### திரு திருமதி மனோகரன் ரதிதேவி இணையர்கள் - கனடா

கனடாவில் வசிக்கும் திரு திருமதி மனோகரன் ரதிதேவி இணையர்களது 39வது ஆண்டு திருமண இணைவு நன்நாள் 26 மார்ச் 2025 புதன் கிழமையாகும். அன்றைய தினம் திரு திருமதி மனோகரன் ரதிதேவி இணையர்கள் தமது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். இருமனம் ஒன்றித்து ஒரு மனமாகி 39வது ஆண்டு காணும் இணையர்களை பாரதி இல்லக் குழந்தைகளுக்கும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்க வளமுடனும் நலமுடனும் என வாழ்த்துகின்றார்கள்.


APRIL
18&19
2025
TICKETS
$30 $50 VIP($100)
416-566-0790
RAMU
Playback Singer
TMS SELVAKUMAR
AKSHAYA SHIVKUMAR
Zee Tamil Singer
OLD IS GOLD
KARIS
EVENT PLACE
55 Nugget Ave unit 10,
Scarborough, ON M1S 4L4
AAROSAI
APRIL 18
NATCHATHRAA
MUSIC GROUP
APRIL 19



நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா




SUNDAY
JUNE 01
2025

METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு
ஈழநாடு
பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com





கனடா இந்து மாமன்றம் CANADA HINDU MAAMANTRAM

## கனடா இந்து மாமன்றம் சுவையுடன் படைத்திடும்

## சர்க்கரைப் பொங்கல் விழா - 2025

## சமய அறிவு, பேச்சு, பண்ணிசைப் போட்டிகள்

இடம்: SRI SATHYA SAI BABA CENTRE OF SCARBOROUGH
5321 Finch Ave East, Scarborough ON. M1S 5W2

காலம்: **March 22, 2025 (Saturday) 9.00 AM**

**போட்டிகளுக்கு உரிய பிரிவுகள்:**

| | |
|---|---|
| மழலைகள் (JK) | : 01-01-2020 இற்குப் பின் பிறந்தோர் |
| ஆரம்பப் பிரிவு (SK) | : 2019 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 1 (Gr.1) | : 2018 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 2 (Gr.2) | : 2017 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 3 (Gr.3) | : 2016 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 4 (Gr.4) | : 2015 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 5 (Gr.5) | : 2014 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 6 (Gr.6) | : 2013 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 7 (Gr.7) | : 2012 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 8 (Gr.8) | : 2011 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் பிறந்தோர் |

❋ மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்புப் போட்டிகள் தனிப்பிரிவாக நடாத்தப்படும்.

குறிப்பு:

1. சமய அறிவுப் போட்டிகள் பிரிவு 4ம் அதற்கு மேல் உள்ள பிரிவுகளுக்கு மட்டும் இடம்பெறும். கீழ்ப் பிரிவு மாணவர்கள் விரும்பினால் 4வது பிரிவில் பங்குபற்றலாம்.
2. புதிய பாடத்திட்டத்தின்படி போட்டிகள் இடம்பெறும். விபரங்களை, தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.
4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற ஒரு போட்டியாளருக்கு $5.00 அறவிடப்படும்.
5. ஏப்ரில் 27, 2025ல் நடைபெறும் சர்க்கரைப் பொங்கல் விழாவில் போட்டிகளில் பங்கு பற்றிய மாணவர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கப்படும்.

**மார்ச்சு 05, 2025க்கு முன் தரவேண்டிய தகவல்கள்:**

முதல் பெயர்: ..............................

குடும்பப் பெயர்: ..............................

பிரிவு: ..............................

பிறந்த திகதி: ..............................

தொலைபேசி எண், email: ..............................

..............................

பங்குகொள்ளும் போட்டிகள்:

☐ பேச்சு ☐ பண்ணிசை ☐ சமய அறிவுப் போட்டி

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

Secretary,
Canada Hindu Maamantram,
41, Longbow Sq, Scarborough, ON. M1W 2W6
email: canhinduma@gmail.com

மேலதிக தொடர்புகளுக்கு: 416.497.4741
647.620.5171, 416.356.7323
647.992.0587, 905.785.6526

**விண்ணப்ப முடிவு திகதி: மார்ச்சு 05, 2025**

# ஊருக்கும் வெட்கமில்லை! உலகுக்கும் வெட்கமில்லை! ரணிலுக்கும் வெட்கமில்லை!

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -





சிங்கள பௌத்த அரசுத் தலைவர்கள், அவர்கள் யுத்த வெற்றிவாதிகளாக இருந்தாலும் சரி அல்லது லிபரல் முகமூடி அணிந்தவர்களாக இருந்தாலும் சரி அல்லது சமூக நீதி முகமூடி அல்லது மாற்றத்தின் முகமூடி அணிந்தவர்களாக இருந்தாலும் சரி, யாருமே தமிழ் மக்களுக்கோ அல்லது இறந்த காலத்துக்கோ பொறுப்புக் கூற மாட்டார்கள் என்பதைத் தான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் ஐநாவின் 58ஆவது கூட்டத் தொடர் உணர்த்துகின்றது.

ஐநா கூட்டத்தொடரில் கடந்த மாதம் 25ஆம் திகதி,தேசிய மக்கள் சக்தியின் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் ஆற்றிய உரையில் ஐநாவின் பொறுப்புக் கூறலுக்கான பன்னாட்டு நிகழ்ச்சித் திட்டத்தை நிராகரித்திருந் தார். சிறீலங்கா பொறுப்புக் கூறலுக்கான நிகழ்ச்சித்திட்டம் (SriLanka accountability project)எனப்படும் அப்பொறிமுறையானது கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து செயற்பட்டு வருகின்றது. போர்க்களத்தில் நிகழ்ந்த குற்றங்கள் தொடர்பான சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஒரு பலவீனமான ஆனால் பன்னாட்டுப் பொறி முறை அதுவாகும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பன்னாட்டுப் பொறிமுறையை நிராகரித்து ஒன்பது நாட்களின் பின் ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய வாய் மூல அறிக்கை வெளிவந்து நான்கு நாட்களின் பின்,ரணில் விக்கிரமசிங்கவின் அல்ஜசீரா நிகழ்ச்சி வெளிவந்திருக்கிறது. அந்த நிகழ்ச்சியும் சிங்களத் தலைவர்கள் யாராயிருந்தாலும் குற்றங்களுக்குப் பொறுப்புக்குகூற மாட்டார்கள் என்பதைத் தான் உலகத்துக்கு எடுத்துக் கூறியுள்ளது.

ஜெனிவா கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் மேற்படி காணொளி வெளிவந்திருக்கிறது. ஏற்கனவே ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பான ஒப்புதல் வாக்குமூலம் அடங்கிய காணொளி உள்ளடங்களாக 'சனல் நாலு' காணொளிகள் இவ்வாறு ஐநா கூட்டத் தொடர்கள் நடந்து கொண்டிருந்த காலப் பகுதியிலேயே வெளி வந்தனை என்பதையும் இங்கு தொகுத்துக் கவனிக்க வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு மறைமுகமாக அழுத்தங்களைப் பிரயோகிக்கும் உள்நோக்கங்கள் இதில் உண்டா என்றும் பார்க்க வேண்டும். கடந்த 15 ஆண்டுகளிலும் இவ்வாறு பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்களின் விளைவாக தமிழ்மக்களுக்கு என்ன கிடைத்தது என்பதையும் தொகுத்துப் பார்க்கவேண்டும்.

இனி அந்தக் காணொளிக்குள் நுழைவோம். முதலில் அந்த நிகழ்ச்சி எவ்வாறு கட்டமைக்கப்பட்டது என்பதைப் பார்க்க வேண்டும். அது ஒரு நேர் காணல் என்பதை விடவும் குறுக்கு விசாரணையாகவே பெருமளவுக்கு அமைந்திருந்தது. மஹ்தி ஹசன் நன்கு வீட்டுவேலை செய்து கொண்டு வந்திருந்தார். விரல் நுனியில் தகவல்களை வைத்திருந்தார். வீட்டுவேலை செய்யாமல் கேள்வி கேட்கப் போகும் ஊடகவியலாளர்கள் அவரிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

அது புலம் பெயர்ந்த தமிழர்கள் பலமாக உள்ள ஒரு களம். புலம்பெயர்ந்த தமிழர்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று தெரிந்திருந்தும் ரணில் அநாயாசமாகப் போய் மாட்டிக் கொண்டார். இனி எந்த ஒரு சிங்களத் தலைவரும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிக்கு போவதற்கு முன் ஒன்றுக்கு பலதடவை யோசித்து முடிவெடுக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கும் நிகழ்ச்சி அது.ஒரு விதத்தில் புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் பலத்தையும் அது காட்டியது.

ரணிலைச் சுற்றிவளைக்கும் கேள்விகள். அவர் கதைத்துக் கொண்டிருக்கும் பொழுதே மஹ்தி ஹசன் குறுக்கே பாய்ந்து கேள்விகளைக் கேட்கிறார். சில இடங்களில் ரணில் கூறும் பதில்களைப் பொருட்படுத்தாமலேயே கடந்து போகிறார். சில பதில்களுக்கு மறுத்தான்களை அனாயசமாகத் தூக்கிப் போட்டு விட்டுப் போகிறார்.அந்த நிகழ்ச்சி முழுவதிலும் மஹ்தி ஹசன் ஒரு குறுக்கு விசாரணை செய்யும் அதிகாரியின் தோரணையிலேயே பெருமளவுக்கு நடந்து கொண்டார்.அந்த நிகழ்ச்சிக்கு கிடைத்த கவர்ச்சியும் அது தான். தமிழ்த் தரப்பு அதை கொண்டாடுவதற்கு பிரதான காரணங்களில் அதுவும் ஒன்று.

ஆனால் மஹ்தி ஹசன் எவ்வளவுதான் சுற்றிவளைத்தாலும் ரணில் பெருமளவுக்கு உணர்ச்சி வசப்படவில்லை என்பதனை பலரும் கவனிக்கத் தவறுகிறார்கள். ரணில் வெகு 'கூலாக' பதில் கூறுகிறார். அவருடைய சிறிய தொந்தியில் வழுகும் கழுத்துப்பட்டியை இடைக்கிடை சரி செய்து நேராக்கியபடி மிகவும் 'கூலாக'அவர் பதில் கூறுகிறார்.ஒரு இடத்தில் மஹ்தி ஹசனைப் பார்த்து பொறுமையை இழக்காதீர்கள் என்று சொல்லுகிறார்.அதை அவர் மஹ்தி ஹசனுக்குச் சொன்னாரா? அல்லது தனக்குத் தானே சொன்னாரா?

என்பதனை வெளிப்படுத்துகிறார். அப்படியென்றால் ஐநாவில் இலங்கை அரசாங்கம் வழங்கிய இணை அனுசரணைக்குப் பொருள் என்ன?

மஹிந்த பான் கிமூன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க விசாரணைக் குழுக்களை உருவாக்கினார். ஆனால் அவை உண்மையைக் கண்டுபிடிக்கவில்லை. அல்லது அவை கண்டு பிடித்த அற்ப உண்மைகளையும் கூட மகிந்த ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் ரணில் அதைவிட ஒருபடி மேலே சென்று ஒரு தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கினார். அதுவும் இலங்கைத் தீவில் நிலைமாறு கால நீதியை ஸ்தாபிப்பதற்கான அதாவது பொறுப்புக் கூறலுக்கான தீர்மானம். ஆனால் அவரும் அந்தத் தீர்மானத்துக்கு விசுவாசமாக இருக்கவில்லை. ஐநாவைப் பேய்க் காட்டுவதற்காகத்தான் அவர் அவ்வாறு இணை அனுசரனை வழங்கினார் என்பதைத் தான் அந்த நிகழ்ச்சி வெளிப்படுத்தியது.

ஆனால் அதற்காக அவர் வெட்கப்படவில்லை. என்பது தான் இங்குள்ள

அவர் கூறும் பதில்களில் பல இக் கட்டுரையின் நோக்கு நிலையில், அதாவது தமிழ் நோக்கு நிலையில் மோசமானவை. ஆனால் ரணில் முக்கியமான இடங்களில் மிகவும் கூலாகப் பதில் சொல்லுகிறார். சிரித்துக் கொண்டே தன்னை காந்தியோடு ஒப்பிடுகிறார். சிரித்துக் கொண்டே இலங்கை ஒரு வன்முறை இல்லாத நாடு என்று கூறுகிறார். சிரித்துக் கொண்டே சில கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாது என்று கூறுகிறார்.

அதே சமயம் அவர் சொன்ன பதில்கள் பலவற்றிலிருந்து உலக சமூகமும் குறிப்பாக ஐநா ஒரு தெளிவான செய்தியைப் பெறக்கூடியதாக இருந்தது. அது என்னவென்றால், சிங்கள பௌத்த அரசுத் தலைவர்கள் யாராக இருந்தாலும் பொறுப்புக்கூற மாட்டார்கள் என்பது தான்.

2015ஆம் ஆண்டு பொறுப்புக் கூறலுக்கான ஐநாவின் தீர்மானத்திற்கு இணையனுசரணை வழங்கியது ரணில் விக்ரமசிங்க தான். நிலைமாறு கால நீதிக்கான அந்த தீர்மானத்துக்கு ரணில்- மைத்திரி அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியது. அதற்கு முன்னரும் பின்னரும் நிறைவேற்றப்பட்ட ஐநா தீர்மானங்களுக்கு எந்த ஒரு இலங்கை அரசாங்கமும் இணை அனுசரனை வழங்கவில்லை. மட்டுமல்ல, அந்த தீர்மானங்களுக்கு எதிராகவே காணப்பட்டன. ஆனால் ஒரே ஒரு தீர்மானம், அதுவும் பொறுப்புக் கூறலுக்கான தீர்மானம், அதற்கு இணை அனுசரணை வழங்கிய ஒரே ஒரு தலைவர், ஒரு பகிரங்க நிகழ்வில் வைத்துப் பொறுப்புக்கூறத் தயாரில்லை

பயங்கரமாகும். ஜேவிபியின் இரண்டாவது ஆயுதப் போராட்டத்தின் போது சிங்கள மக்கள் சித்திரவதை செய்யப்பட்ட, கொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் சரி, தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்ந்த இன அழிப்புக் குற்றச்சாட்டுகளுக்கும் சரி,ஈஸ்டர் குண்டு வெடிப்புத் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கும் சரி, அவர் பொறுப்புக்கூறத் தயாராக இருக்கவில்லை. பொறுப்பற்றதனமாகப் பதில் சொன்னார்.

இலங்கைத்தீவின் வரலாற்றில் ஒரு முன்னாள் அரசத் தலைவர் அது போல எங்கேயும் அவமானப்படுத்தப்பட்டதாக எனக்கு நினைவில்லை. உன்னுடைய வயதை விட என்னுடைய அரசியல் வாழ்வின் காலம் அதிகமானது என்று ரணில் சிரித்துக் கொண்டு செல்லலாம். ஆனால் அவ்வளவு அனுபவசாலியான அவர் அது போல வேறு எங்கேயும் அவமானப்படவில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

அதாவது சிங்களபௌத்த அரசுக் கட்டமைப்பை அம்பலப்படுத்திய ஆகப் பிந்திய நிகழ்ச்சி அது.சிங்கள பௌத்த அரசு தலைவர்கள் தமிழ் மக்களுக்கும் பொறுப்பு கூற மாட்டார்கள் கொல்லப்பட்ட சிங்கள மக்களுக்கும் பொறுப்பு கூற மாட்டார்கள் முஸ்லிம்களுக்கும் பொறுப்புக்கூற மாட்டார்கள் மட்டுமல்ல சிங்களக் கத்தோலிக்கர்களுக்கும் பொறுப்புக்கூற மாட்டார்கள் என்பது அங்கே தெளிவாகத் தெரிந்தது.

எல்லாக் குற்றங்களையும் செய்து விட்டு அல்லது குற்றவாளிகளைக் காப்பாற்றிக் கொண்டு கூலாக அவர் சொன்ன பதிலகள் யாவும் இனஅழிப்புச் செய்தவர்களையும் தமது அரசியல் வெற்றிகளுக்காக முஸ்லிம் மக்களை பலியிட்டவர்களையும் அவர் பாதுகாக்கிறார் இன்று நம்பப் போதுமானவைகளாக இருந்தன.

அதாவது குற்றங்களைப் பாதுகாக்கும் குற்ற மயப்பட்ட ஒரு அரசுக் கட்டமைப்புக்கு அவர் தலைவராக இருந்திருக்கிறார் என்பதை அவர் வெளிப்படுத்தினாரா? மகா சங்கத்துக்கு விசுவாசமாக அவர் கூறிய பதிலில் தன்னை ஒரு சிங்கள பௌத்தனாகப் பிரகடனப்படுத்துகிறார். அங்கே அவருடைய லிபரல் முகமூடி பாரதூரமாகக் கிழிகிறது. ஆனால் அவர் கூலாகப் பதில் கூறுகிறார்.

இதில் தமிழ் மக்களுக்குப் புதிதாக எதுவும் இல்லை.ஏனென்றால் ரணிலைப் பற்றி ஏற்கனவே தமிழ்மக்கள் மத்தியில் மிகப்பலமான ஒரு படிமம் உண்டு. அன்ரன் பாலசிங்கம் அவரை நரி என்று அழைத்ததை தமிழர்களில் பெரும்பாலானவர்கள் திரும்பத் திரும்ப மேற்கோள் காட்டுவது அந்த அடிப்படையில் தான். எனவே ரணில் யார் என்பது தமிழ் மக்களுக்குத் தெரியும்.

ஆனால் இங்குள்ள கேள்வி என்னவென்றால் ரணிலோடு இணைந்து நல்லாட்சிக் காலகட்டத்தில் அதாவது 2015 இல் இருந்து 18 வரையிலுமான காலப் பகுதியில், நிலைமாறு கால நீதிக்காக உழைத்த தமிழ்ப் பிரதிநிதிகள் இருக்கிறார்களே, அவர்கள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? அவர்கள் ரணிலை மட்டும் பாதுகாக்கவில்லை, கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சஜித்தையும் பாதுகாத்தார்கள். சஜித்தும் ரணிலைப் போலத்தான். கடந்த செப்டம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரங்கள் நடந்து கொண்டிருந்த அதே காலப்பகுதியில்தான் ஐநா கூட்டத் தொடரும் நடந்தது.அப்பொழுது சஜித் ஐநா தீர்மானங்களுக்கு எதிரான நிலைப் பாட்டைத் தான் கொண்டிருந்தார்.

ரணில் மட்டுமல்ல சஜித்தும் பொறுப்புக் கூறத் தயார் இல்லை. அதுவும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் தமிழ் வாக்குகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அதே காலகட்டத்தில் தான் பொறுப்புக்கூறல் தொடர்பில் பன்னாட்டு பொறிமுறைகளுக்கு எதிராகத் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தார். இது நல்லூர் கிட்டுப் பூங்காவில் நடந்த,பொது வேட்பாளருக்கான கடைசிப் பிரச்சார கூட்டத்தில் மேடையில் வைத்துப் பகிரங்கமாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

ஆனால் தமிழ் மக்களின் வாக்குகளை சுமந்திரன் சஜித்துக்கு வாங்கி கொடுத்தார். தேசத் திரட்சிக்காக பொது வேட்பாளராக நிறுத்தப்பட்ட அரிய நேத்திரனை சுமந்திரனுக்கு விசுவாசமான மத்திய குழு கட்சியை விட்டு நீக்கியிருக்கிறது. அதாவது சிங்களத் தலைவர்கள் இறந்த காலத்துக்கு பொறுப்புக் கூறத் தயார் இல்லை. தமிழ் மக்களின் வாக்குகளை அவர்களுக்குச் சாய்த்துக் கொடுக்கும் தமிழ்த் தலைவர்களும் தமிழ் மக்களுக்குப் பொறுப்புக்கூறத் தயாரில்லை.

# இந்தியாவின் எதிர்பார்ப்பு!



கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, அடுத்த மாதம் முதல் வாரத்தில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவிருக்கிறார். அவரது இந்தப் பயணம் மிகவும் முக்கியத்துவம் இருக்கப் போகிறது. வாய்ந்த ஒன்றாக கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம், இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், கொழும்புக்கு வரப்போகும் முதலாவது வெளிநாட்டுத் தலைவர் அவர். ஆனால் இந்தியப் பிரதமர் மோடிக்கு, இலங்கை ஒன்றும் புதிய இடம் அல்ல. 2015 ஆம் ஆண்டு, இலங்கையில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்த பின்னர், அவரது முதலாவது இலங்கை பயணம் இடம் பெற்றது.

அந்தப் பயணத்தின் போது, அறிவிக்கப்பட்ட திட்டங்கள், வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படாமல் உள்ளன. அதற்கு இரண்டு நாடுகளும் பொறுப்புக ்கூற வேண்டிய நிலையில் இருக்கின்றன. அதன் பின்னர், இந்திய பிரதமர் மோடி இரண்டு முறை கொழும்புக்குப் பயணங்களை மேற்கொண்டிருந்தார். இப்போது அவர் கொழும்புக்கு மேற் கொள்ளும் பயணம், நான்காவதாகும்.

இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற ஆட்சி மாற்றம், இந்தியாவுக்கு எந்தளவு நம்பிக்கையை கொடுத்திருக்கிறது என்ற கேள்விகள் இருக்கின்ற நிலையில், அவரது இந்தப் பயணம் அமையப் போகிறது. இலங்கையில் ஆட்சிக்கு வந்திருக் கின்ற அநுர குமார திசாநாயக்க, தனது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்த போதும் அந்தப் பயணம் இரண்டு நாடுகளுக்கும் இடையில் நம்பிக்கையை துளிர் விடச் செய்திருப்பதாக கூறப்பட்ட போதும் பல விடயங்களில் இன்னமும் இறுக்கமான நிலை தளரவில்லை. இதனை யாரும் மறுக்க முடியாது.

குறிப்பாக, இந்திய முதலீடுகள் விடயத்தில், இலங்கை அரசாங்கம் எடுத்திருக்கின்ற முடிவுகளும், கையாளும் அணுகு முறைகளும் நிச்சயமாக புதுடெல்லிக்கு திருப்தியை ஏற்படுத்துவதாக இருக்காது என்பது நிச்சயம்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இந்தப் பயணத்தின் போது சம்பூ ரில் சூ ரிய மின்சக்தி திட்டம் ஒன்றுக்கு, அடிக்கல் நாட்டவிருக்கிறார். இந்தியாவின் உதவியுடன், சம்பூரில் அனல் மின்நிலையம் ஒன்றை உருவாக்குவதற்கு 2007 ஆம் ஆண்டு இணக்கப்பாடு காணப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த போது, இணங்கப்பட்ட இந்த திட்டத்திற்கு கிட்டத்தட்ட 18 ஆண்டுகளுக்குப் பின்னரே அடிக்கல் நாட்டப்படப் போகிறது. சம்பூரில் அனல்மின் திட்டம் தொடங்கப்படுவது சுற்றுச்சூ ழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என, தமிழ் தேசிய கூட் டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இந்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தார். அதற்குப் பதிலாக சூரிய மின்திட்டத்தை செயற்படுத்தலாம் என்றும் அவர் ஆலோசனை முன் வைத்திருந்தார்.

இந்த திட்டத்திற்காக காணிகள் சுவீகரிக்கப்பட்டு, பல ஆண்டுகள் ஆகிவிட்டன. பலத்த இழுபறிகளுக்குப் பின்னரே, இந்த திட்டத்தை இந்தியாவினால் தொடங்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்திய முதலீடுகளுக்கு அல்லது உதவி திட்டங்களுக்கு இலங்கையில் காணப்படுகின்ற நெருக்கடிகள், தடங்கல்களை இது தெளிவாக காட்டுகிறது. இவ்வாறான நிலையை இந்தியா விரும்பவில்லை. தனது திட்டங்களுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதை அது வலுவாக எதிர்த்து வந்திருக்கிறது. ஆனாலும், இத்தகைய சூ ழலில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. முன்னைய அரசாங்கத்தின் காலத்தில், மன்னார் மற்றும் பூ நகரியில் காற்றாலை மின் திட்டங்களை அமைப்பதற்கு அதானி கிறீன் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது,

அதற்கமைய, சுமார் 500 மெகாவாட் மின் சக்தியை உற்பத்தி செய்யக் கூடிய திட்டங்களில் ஒரு பில்லியன் டொலரை முதலீடு செய்வதற்கு அதானி கிறீன் நிறுவனம் முன் வந்தது. ஆனால், உள்ளூரில் சுற்றுச் சூழல் தொடர்பாக எழுந்த கவலைகளும், அது சட்டரீதியான நெருக்கடிகளை ஏற்படுத்தியதாலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், மின்சார கொள் முதல் விலையை குறைக்க வேண்டும் என கொடுத்த அழுத்தங்களாலும், அதானி கிறீன் நிறுவனம் அந்தத் திட்டத்தில் இருந்து விலகுவதாக அறிவித்திருக்கிறது. பொருளாதார நெருக்கடிக்கு பின்னர், இலங்கையில் மேற்கொள்ள உறுதியளிக்கப்பட்ட ஒரு மிகப்பெரிய முதலீட்டுத் திட்டம் இது. இந்த திட்டத்தில் இருந்து இந்தியா நிறுவனம் விலகிக் கொண்டதை, இலங்கை அரசாங்கம் தீவிரமான விடயமாக எடுத்துக் கொண்டிருக்கவில்லை. போனால் போகட்டும் என்ற ரீதியிலேயே செயற்படுகிறது.

ஏற்கனவே அதானி குழுமத்தின் ஒப்பந்தங்களை இரத்துச் செய்வதாக தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தி வாக்குறுதி கொடுத்திருந்ததால், அரசாங்கத்தின் இந்தப் போக்கு யாருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. ஆனால் இந்திய நிறுவனங்களுக்கு ஏற்படுகின்ற இவ்வாறான தடைகள், சர்வதேச அளவில் இலங்கை தொடர்பான எதிர்மறையான விம்பத்தை தோற்றுவிக்கும். இது சர்வதேச அளவிலான முதலீடுகளையும் பாதிக்கக் கூடியது. பாராளுமன்றத்தில் அண்மையில் இதனை சுட்டிக் காட்டிய மனோகணேசன் இந்தியாவின் முதலீடுகளைத் தாண்டி இலங்கைக்கு முதலீடுகள் வராது என்று குறிப்பிட்டிருந்தார். இந்திய முதலீடுகளுக்கே பாதுகாப்பற்ற நிலை இருக்குமானால் ஏனைய நாடுகள் இங்கு முதலீடு செய்ய தயங்குகின்ற நிலை ஏற்படும்.

சர்வதேச முதலீடுகள் இல்லாமல் இலங்கையில் பொருளாதாரத்தை மீட்டெடுப்பது சாத்தியமற்றது. இது தற்போதைய அரசாங்கத்துக்கு புரிகிறதோ, இல்லையோ தெரியவில்லை. அவர்கள் இன்னமும் வெளிநாட்டு பயணக் கொடுப்பனவை மிச்சப்படுத்தி, நாட்டை மீட்டெடுக்கலாம் என நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மனோ நிலையில் இருந்து அவர்களை வெளியே கொண்டு வருவது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு உள்ள சவாலாக இருக்கும். இந்த விடயத்தை இந்தியா சாதாரணமாக எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், அண்மையில் லண்டனுக்கு பயணம் மேற ்கொண்டிருந்த போது, 'சத்தம் ஹவுஸ்' என்ற ஒரு சிந்தனைக் குழாமில் கலந்துரையாடல் நிகழ்வில் பங்கேற்றிருந்தார். அந்த நிகழ்வில் அண்டை நாடுகளுடனான இந்தியாவின் உறவுகள் பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு இலங்கையை முன்னிறுத்தியே ஜெய்சங்கர் பதிலளித்திருந்தார். இலங்கை மிகவும் கடுமையான நிதி நெருக்கடியைச் சந்தித்தபோது, உலகின் பிற பகுதிகள் கைகட்டி நின்றபோது. நாங்கள் 4 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான நிதி உதவிப் பொதியை வழங்கினோம்.

இது சர்வதேச நாணய நிதியத்தின் உதவித் தொகுப்பை விட கிட்டத் தட்ட இரண்டு மடங்கு பெரியது. ஆனால் நாம் ஒரு பெரிய பொருளாதாரமாக இருந்தாலும், பொதுவாக தாராள மனப்பான்மை கொண்டவர்களாக இருந்தாலும், பரஸ்பரம் பொறுப்புணர்வு இல்லாதவர்களாக இருக்கிறோம். எந்தவொரு நாட்டையும் போலவே எங்களுக்கும் நலன்கள், அல்லது ஆர்வங்கள் உள்ளன. எனவே, எமது அண்டை நாடுகளும் அதை உணர்ந்து எமது உணர்வுகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அனைத்தும் சமமான கொடுக்கல் வாங்கலாக இருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. ஆனால், கொடுக்கல் வாங்கல்கள் இருக்க வேண்டும். எமது அண்டை நாடுகள் பற்றி, எமக்கு ஒரு பொறுப்பு இருப்பது போலவே, எமது அண்டை நாடுகளுக்கும் எம்மைப் பற்றிய ஒரு பொறுப்பு இருக்கிறது' என்று ஜெய் சங்கர் கூறியிருந்தார். அவரது இந்த கருத்து, இலங்கையின் ஊடகங்களால் கவனத்தில் கொள்ளப் பட்டிருக்கவில்லை.

ஆனால் இது முற்று முழுதாக இலங்கைக் காக கூறப்பட்ட செய்தி. இந்தியப் பிரதமரின் பயணம் உறுதி செய்யப்பட்ட நிலையில், இந்த செய்தி வெளியே சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் அதானி கிறீன் நிறுவனம், தனது முதலீட்டு திட்டத்தை விலக்கிக் கொள்வதாக அறிவித்த பின்னர், இந்த செய்தியை கூறியிருக்கிறார் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர். இதன் ஊடாக இந்தியா சொல்ல வருகின்ற விடயம் என்ன?

பொருளாதார நெருக்கடியில் இருந்த போது, பிற நாடுகள் கைகட்டி நின்ற போது, நாங்கள் 4 பில்லியன் டொலர்களை கொடுத்து உதவினோம். அண்டை நாடு என்ற ஒரே காரணத்திற்காக, இந்த உதவியை நாங்கள் செய்திருக்கிறோம். இதற்கு பதிலாக 4 பில்லியன் டொலருக்கு.. இலங்கை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று அர்த்தமில்லை. அதற்குப் பதிலாக, எங்களுடைய நலன்களையும் இலங்கை

(22ம் பக்கம் பார்க்க)



# கூட்டுக்கு அங்கலாய்க்கும் கூடிழந்த போலித் தமிழ்த் தேசியக் கட்சிகள்

இலங்கையின் கடந்த பாராளுமன்றத் தேர்தல் முடிந்த கையோடு தேர்தலில் தமிழ் மக்களிடம் வாங்கிய 'அடி', ஐக்கியம் பற்றிய 'அருட்டுணர்வை'த் தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே(?) ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூறிய உத்தேச புதிய அரசியலமைப்பு விடயமாக இனப் பிரச்சினைக்கான தீர்வை முன்பு தமிழ் மக்கள் பேரவை முன்மொழிந்த ஆலோசனைகளின் அடிப்படையில் (சமஷ்டி)



ஒற்றுமையாக முன் வைக்கும் முயற்சியில் ஈடுபடுவதாகக் கூறி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் (?) சிறிதரன் பா. உ. மற்றும் தமிழீழ விடுதலை இயக்கத் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் பா.உ. ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். ஆனால் அப்பேச்சுவார்த்தை பிசுபிசுத்துப் போய் விட்டது. மட்டுமல்லாமல் அரசாங்கமும் புதிய அரசியலமைப்பு விவகாரத்தை மூன்று ஆண்டுகளுக்குத் தள்ளிப் போட்டும் விட்டது.

கடந்த தேர்தலில் சுமந்திரன் தோல்வியுற்ற நிலையில் தமிழர்களுடைய அரசியல் பொது வெளியில் சுமந்திரன் பிடித்து வைத்திருந்த இடத்தை எதிர் காலத்தில் தான் பிடித்து வைத்திருக்கலாம் என்ற எண்ணத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கொண்ட 'முஸ்தீபு'தான் இது.

உள்ளூராட்சி அதிகார சபைகளின் தேர்தல் சம்பந்தமாக அரச அறிவிப்பு வந்ததும் மீண்டும் 'ஐக்கியம்' குறித்த 'அருட்டுணர்வு' ஆரம்பித்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி வி கே சிவஞானம் தமிழரசுக் கட்சியுடன் வந்து இணைந்து கொள்ளும்படி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினருக்கு அழைப்பு விடுப்பதும் அதற்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சில பங்காளிக் கட்சித் தலைவர்கள் (சித்தார்த்தன – புளொட், அடைக்கலநாதன் — ரெலோ) தமிழரசுக் கட்சியைத் தங்களோடு வந்து இணைந்து கொள்ளும்படி மாறி அழைப்பு விடுவதுமான ஒரு வகையான பந்தடித்தல் விளையாட்டை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சம காலத்தில் ஏற்கெனவே தன்னை ஐந்து கட்சிகளின் கூட்டாகக் காட்டிய ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தற்போது இன்னும் நான்கு கட்சிகளைத் தேடிப் பிடித்துத் தன்னோடு சேர்த்துத் தன்னை ஒன்பது கட்சிகளின் கூட்டாகத் தமிழ் மக்களின் ஒற்றுமை அணியாக உருப்பெருக்கிக் காட்டும் அரசியல் சித்து விளையாட்டிலும் ஈடுபட்டிருக்கிறது.

மொத்தத்தில் இந்த ஐக்கிய மற்றும் கூட்டு முயற்சிகள் எல்லாமே இதில் சம்பந்தப்பட்டுள்ள கட்சிகளினதும் அக்கட்சிகளில் உள்ள தனிநபர் சிலரினதும் அரசியல் எதிர்காலம் குறித்த நலன்களைச் சார்ந்ததே தவிர ஒட்டு மொத்தத் தமிழ் மக்களின் எதிர் கால நலன் குறித்து அல்ல என்பதைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பின்னர் தொடர்ந்து வந்த பாராளுமன்றத் தேர்தலிலும் வடக்கு கிழக்கு மாகாணத் தமிழர்கள் ஒப்பீட்டளவில் கடந்த காலங்களை விடவும் அனுர குமார திசாநாயக்கா தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்குக் கணிசமான வாக்குகளை வழங்கியுள்ளனர் என்கின்ற உண்மை தான் இவர்களைத் தற்போது உசுப்பி விட்டிருக்கிறது. அதனால் உத்தேச உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ள 'உஷார்' ஆகி வருகிறார்கள். இது தமிழ்த் தேசியக் கட்சிகளின் மக்கள் நலன் சாராத வழமையான 'வாக்குப்பெட்டி' அரசியலே தவிர வேறொன்றுமில்லை. தற்போதைய தமிழ் அரசியல் சூழலை 1970களில் நடந்த நிகழ்வுகளுடன் ஒப்பிட்டுப்பார்த்தல் பொருத்தம்.

1944இல் உருவான ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து வந்து எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சி உருவான காலத்திலிருந்து வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் தமிழரசுக் கட்சியும் கீரியும் பாம்புமாகவே 'தேர்தல் அரசியல்' செய்துவந்தன. இக் காலகட்டத்திலேயே 1970இல் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் வந்தது.

இத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் மற்றும் தமிழரசுக் கட்சியின் மூத்த பெருந்தலைகள் மண்கவ்வின.

யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி ஜி பொன்னம்பலம் தோல்வியுற்று தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சி எக்ஸ் மார்டின் புதிதாகத் தெரிவானார்.

வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதியில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த 'தளபதி' அ. அமிர்தலிங்கம் தோல்வியுற்று தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர் தியாகராசா வெற்றிபெற்றார்.

நல்லூர்த் தேர்தல் தொகுதியில் தமிழரசுக் கட்சியின் 'இரும்பு மனிதன்' டாக்டர் ஈ எம் வி நாகநாதன் தோற்று தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர் அருளம்பலம் தெரிவானார்.

உடுப்பிட்டித் தேர்தல் தொகுதியில் தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த 'உடுப்பிட்டிச் சிங்கம்' மு சிவசிதம்பரம் தோல்வியுற்றுத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஜெயக்கொடி வெற்றியீட்டினார்.

வவுனியாத் தேர்தல் தொகுதியில் தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த 'எல்லைக் காவலன்' சிவசிதம்பரம் தோல்வியைத் தழுவ தமிழரசுக் கட்சி வேட்பாளர் எக்ஸ் எம் செல்லத்தம்பு தெரிவானார்.

கிளிநொச்சித் தேர்தல் தொகுதியில் தமிழரசுக்கட்சியின் 'பிரச்சாரப் பீரங்கி' ஆலாலசுந்தரம் தமிழ்க் காங்கிரஸ்க் கட்சி வேட்பாளர் வீ ஆனந்த சங்கரியிடம் தோல்வியடைந்தார். இவ்வாறு தமிழ்க் காங்கிரசினதும் தமிழரசுக் கட்சியினதும் மூத்த பெருந்தலைகள் 1970 ஆம் ஆண்டுத் தேர்தலில் அடி வாங்கியதால் தமது எதிர்கால தேர்தல் அரசியல் வெற்றிகளை உறுதி செய்து கொள்வதற்காகவே தமிழ்க் காங்கிரஸூம் தமிழரசுக் கட்சியும் இணைந்து1972 இல் தமிழர் கூட்டணி உருவாகி அது பின்னர் 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியாகப் பெயர் மாற்றம் பெற்றது என்பதை அதற்குப் பின்னர் நடைபெற்ற அரசியல் நிகழ்வுகள் நிரூபித்துள்ளன. தமிழ் மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தி இந்த ஐக்கியம் நிகழவில்லை என்பது நிதர்சனமாகியது.

அதுபோலவே, 2001 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் (பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி நீக்கப்பட்டு அந்த இடத்தை தமிழரசுக் கட்சி நிரப்பியது) தமிழ்க் காங்கிரசையும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியையும் (ஈ பி ஆர் எல் எவ்) தமிழீழ விடுதலை இயக்கத்தையும் (ரெலோ) இணைத்துத் ('புளொட்'டைத் தவிர்த்து) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாக்கியது தமக்கு இலங்கைப் பாராளுமன்றத்தில் ஓர் 'ஊதுகுழல்' வேண்டும் என்பதற்காகவே தவிர உண்மையில் தமிழ் மக்களின் சமூக பொருளாதார அரசியல் நலன்களுக்காக அல்ல என்பதைப் பின்னர் நடந்த நிகழ்வுகள் எண்பித்துள்ளன. அதனால் தான் 2009 மே இல் யுத்தம் முடிவுற்றுப் புலிகளின் ஆயுதப் பிரசன்னம் அற்றுப் போனதும் கல்லிலே அடித்த



கட்டுரையாளர்:-
மட்டக்களப்பில் இருந்து
தம்பியப்பா
கோபாலகிருஷ்ணன்

தேங்காய் மாதிரித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதறுண்டு போயிற்று.

இந்த வரலாற்றுப் பின்னணியில் வைத்துப் பார்க்கும்போது இப்போது தமிழ்க் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினாலும் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி வி கே சிவஞானத்தினாலும் – ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சித் தலைவர்களான சித்தார்த்தன் – அடைக்கலநாதன் மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றோரினாலும் முன் வைக்கப்படும் ஒற்றுமை கூட்டு யோசனை தம்முடையதும் தமது கட்சியினதும் நலன்கள் சார்ந்ததே தவிர ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் நலன்கள் சார்ந்ததல்ல.

இனிமேல் தமிழ் மக்களுக்குத் தேவை என்னவெனில், 'போலி'த் தமிழ்த் தேசியக் கட்சிகளின் 'போலி' ஒற்றுமையோ அல்லது இப் 'போலி' த் தமிழ்த் தேசியக் கட்சிகளைத் திருத்தும் முயற்சிகளோ அல்ல.






இதற்கு மாற்றீடாக, காலம் எடுக்கும் என்றாலும் கூட கடினமான பணிதான் என்றாலும் கூடப் 'போலி'த் தமிழ்த் தேசிய உளவியலிலிருந்து விடுபட்டதும் வாக்குப்பெட்டி அரசியலுக்கு முன்னுரிமை கொடுக்காததுமான முழுக்க முழுக்க மக்கள் நலனுக்கே முன்னுரிமை கொடுத்து அர்ப்பணிப்புடனும் ஆளுமைத் திறனுடனும் வெற்றிக் கனிகளை வீழ்த்தும் வினைத்திறனுடனும் செயற்படக்கூடியதுமான ஒரு புதிய மாற்று அரசியல் அணியின் உருவாக்கமே உடனடித் தேவையாகும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
**eelanadu.ca** மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2




## மணமகள்

**ID08120762 (F)**
43yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Teacher , Canada

**ID08120764 (F)**
31yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Manager HR , Sri Lanka

**ID08120768 (F)**
40yrs, 5'7" , Divorced , Not Specified , N/A Sevai , Bachelors.. , Accountant , Australia

**ID08120769 (F)**
24yrs, 4'11" , Single , Karthigai , N/A Sevai , Diploma , Teacher , Sri Lanka

**ID08120770 (F)**
32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Senior software.. , Sri Lanka

**ID08120771 (F)**
29yrs, 5'5" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , Software engineer , Sri Lanka

**ID08120774 (F)**
34yrs, 5'6" , Single , Rohini , 6 Sevai , Bachelors.. , Research Officer , Sri Lanka

**ID08120775 (F)**
35yrs, 5'1" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Marketing.. , United States

**ID08120776 (F)**
29yrs, 5'6" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , IT Proc Officer , Canada

**ID08120777 (F)**
30yrs, 5'2" , Single , Swaathi , 9 Sevai , Diploma , Lab Tech , Canada

**ID08120778 (F)**
26yrs, 5'4" , Single , Poorattathi , 12 Sevai , Bachelors.. , Nurse , Canada

**ID08120791 (F)**
36yrs, 5'2" , Divorced , Thiruvonam , N/A Sevai , Masters Degree , Senior Finance.. , Sri Lanka

**ID08120792 (F)**
33yrs, 5'2" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Mechanical.. , Germany

**ID08120794 (F)**
24yrs, 5'4" , Single , Poosam , N/A Sevai , Bachelors.. , Dental Assistant , Canada

**ID08120795 (F)**
31yrs, 5'4" , Single , Aayilyam , 9 Sevai , Bachelors.. , Human Resources.. , Canada

**ID08120799 (F)**
45yrs, 5'3" , Divorced , Poosam , 5 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120800 (F)**
38yrs, 5' , Divorced , Not Specified , N/A Sevai , Masters Degree , Chartered.. , India

**ID08120802 (F)**
20yrs, 5'4" , Single , Chathayam/sadayam , 4 Sevai , Bachelors.. , MSc intended.. , Canada

**ID08120803 (F)**
21yrs, 4'11" , Single , Revathi , N/A Sevai , High School , Beautician , Canada

**ID08120804 (F)**
29yrs, 5'6" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , HR Manager , Canada

**ID08120805 (F)**
30yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Development.. , Sri Lanka

**ID08120806 (F)**
27yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Audit firm , Sri Lanka

**ID08120807 (F)**
27yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Beautician.. , Sri Lanka

**ID08120808 (F)**
31yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Acadamic Staff , Sri Lanka

**ID08120809 (F)**
32yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Accountant , United Kingdom

**ID08120822 (F)**
22yrs, 5'3" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , RN , Canada

**ID08120830 (F)**
28yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Senior Consultant , United Kingdom

**ID08120804 (F)**
29yrs, 5'6" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , HR Manager , Canada

**ID08120799 (F)**
5yrs, 5'3" , Divorced , Poosam , 5 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120795 (F)**
31yrs, 5'4" , Single , Aayilyam , 9 Sevai , Bachelors.. , Human Resources.. , Canada

## மணமகன்



**ID08120761 (M)**
34yrs, 5'8" , Awaiting Divorce , Not Specified , N/A Sevai , Masters Degree , Own jewelry.. , Sri Lanka

**ID08120763 (M)**
34yrs, 5'9" , Single , Anusham , N/A Sevai , Bachelors.. , Business Administration , Sri Lanka

**ID08120765 (M)**
51yrs, 5'6" , Divorced , Aayilyam , N/A Sevai , Postgraduate.. , Book keeping.. , Canada

**ID08120766 (M)**
34yrs, 5'4" , Single , Pooraadam , 1 Sevai , High School , Business , Canada

**ID08120767 (M)**
33yrs, 6' , Single , Not Specified , N/A Sevai , Diploma , CUSTOMER Service.. , Sri Lanka

**ID08120772 (M)**
34yrs, 6'2" , Single , Not Specified , N/A Sevai , High School , Pharmach Own.. , Sri Lanka

**ID08120773 (M)**
46yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Elecerician.. , Sri Lanka

**ID08120779 (M)**
35yrs, 5'5" , Single , Aayilyam , N/A Sevai , High School , Company Forklift.. , Canada

**ID08120785 (M)**
52yrs, 5'9" , Divorced , Not Specified , N/A Sevai , Bachelors.. , Optician , Sri Lanka

**ID08120787 (M)**
33yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Medical rep , Sri Lanka

**ID08120788 (M)**
22yrs, 5'4" , Single , Rohini , N/A Sevai , High School , Phone shop , Sri Lanka

**ID08120789 (M)**
35yrs, 6'1" , Single , Rohini , N/A Sevai , High School , Tba , Canada

**ID08120790 (M)**
21yrs, 4' , Single , Not Specified , N/A Sevai , High School , Casc , Anguilla

**ID08120793 (M)**
25yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Sri Lanka

**ID08120796 (M)**
30yrs, 5'9" , Annulled , Thiruvonam , 8 Sevai , High School , Truck Driver , Canada

**ID08120797 (M)**
33yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , IT Consultant , Sri Lanka

**ID08120801 (M)**
69yrs, 5'10" , Divorced , Visaakam , N/A Sevai , Diploma , Security Officer , Canada

**ID08120811 (M)**
36yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Team Leader , Canada

**ID08120810 (M)**
42yrs, 6' , Single , Uthiram , N/A Sevai , Bachelors.. , Executive , Sri Lanka

**ID08120812 (M)**
32yrs, 5'7" , Single , Avittam , 10 Sevai , Masters Degree , Cyber Security.. , Sri Lanka

**ID08120813 (M)**
30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Pharmacy , Canada

**ID08120814 (M)**
43yrs, 5'5" , Divorced , Not Specified , N/A Sevai , Bachelors.. , Manager , Canada

**ID08120816 (M)**
22yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Canada

**ID08120817 (M)**
41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Self Employee , Sri Lanka

**ID08120818 (M)**
36yrs, 5'5" , Divorced , Not Specified , N/A Sevai , High School , Carpenter , Sri Lanka

**ID08120820 (M)**
30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Senior manager , Sri Lanka

**ID08120821 (M)**
30yrs, 5' , Single , Avittam , N/A Sevai , Bachelors.. , Manager Sri Lanka

**ID08120829 (M)**
38yrs, 5'8" , Single , Revathi , N/A Sevai , High School , Restaurant , France

**ID08120786 (M)**
36yrs, 5'5" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High School , Carpenter , Sri Lanka

**ID08120710 (M)**
22yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Sri Lanka

# பட்டலந்த குறித்துப் பேசினால் தான் சிங்களத் தலைவர்கள் வடக்கு கிழக்கில் செய்தது சிங்கள மக்களுக்குத் தெரிய வரும்

## வதை முகாமை வெளிப்படுத்திய ஊடகவியலாளர் நந்தன வீரரத்ன

அரசியல் எதிர் காலத்திற்காக கூட்டாக கொலை செய்வது தென்னிலங்கை அரசியல் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக காணப்பட்டது

கொழும்பு யாழ்ப்பாணம் மட்டக்களப்பு மாத்தளை என எல்லா இடங்களிலும் ஒரே தந்திரோபாயங்களே பின்பற்றப்பட்டன. தென்னிலங்கையில் இடம் பெற்ற அநியாயங்கள் பற்றி பேசிவது முக்கியம் ஏனென்றால் இது பற்றி பேசும் போது தான் ஜேஆர் ரணில் விக்கிரமசிங்க தென்னிலங்கையில் மாத்திரமல்ல வடக்கு கிழக்கிலும் இதனை செய்தார்கள் என்பதை சிங்கள மக்கள் அறிந்து கொள்ளும் உணர்ந்து கொள்ளும் நிலை உருவாகும் என பட்டலந்த வதை முகாம் குறித்து புலனாய்வு செய்து அதனை அம்பலப்படுத்திய புலனாய்வு ஊடகவியலாளர் நந்தன வீரரத்ன தெரிவித்துள்ளார்

மெய்நிகர் கலந்துரையாடல் ஒன்றின் போது இதனை தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது. நாங்கள் இளம் காலத்தில் பார்த்த ஒரு கொடுமையான வன்முறை மிகுந்த மர்மமான அரசியல் சூழ்நிலையின் கதை தான் பட்டலந்த. இதனுடைய வரலாற்றை பின்னர் பார்ப்போம்.

1960 களின் பிற்பகுதியில் இலங்கைக்கு முதல் முறையாக மொசாட் உறுப்பினர் ஒருவர் விஜயம் மேற்கொண்டார், அவர் அரிமா லெவி ஜேஆர் ஜெயவர்த்தனவை சந்தித்து அரசியல் இளைஞர் சமூகத்தை எவ்வாறு கட்டியெழுப்ப வேண்டும் என்பது குறித்து ஆலோசனை வழங்கினார்.

1970களில் சிறிமாவோ பண்டாரநாயக்க தங்களுடைய பிள்ளைகளை அடிப்படையாக வைத்து ஒரு இளைஞர் அரசியல் சமூகத்தை உருவாக்க முயன்றார்.தான் தாங்கள் சார்ந்த இளைஞர் சமூகத்தை உருவாக்க முயன்றார். அதற்கான பொறுப்புகளை தனது பிள்ளைகளிடம் வழங்கினார்.

1970களில் புதிய அரசியல் இளைஞர்களை உருவாக்கும் பொறுப்பு ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டது.

கொழும்பின் இந்த அரசியல் தலைவர்கள் தங்களிற்கு பின்னர் தங்கள் பதவிகளை தங்கள் பரம்பரைக்கு எப்படி கொடுப்பது என்பதற்கான திட்டமிடல்களில் ஈடுபட்டனர்.

இவர்கள் அதற்காக எப்படி தயாராகயிருந்தார்கள் என்றால் அரசாங்கத்துடன் ஒத்துப் போகாத இளைஞர்களை அழிப்பதற்கு இவர்கள் தயாராகயிருந்தார்கள். அதற்கான திட்டங்கள் இவர்களிடம் இருந்தன.

1977 முதல்81 வரை தமிழ் இனத்திற்கு எதிராக மிகப்பெரும் வன்முறைகள் தாக்குதல்கள் இடம்பெற்றன.

1981இல் யாழ் நூலகம் எரிக்கப்பட்டதும் தமிழர்கள் கொல்லப்பட்டதும் சொத்துக்கள் அழிக்கப்பட்டதும் நினைவில் உள்ளது.

இலங்கையின் ஆட்சியாளர்கள் திட்டமிட்டு வைத்திருந்த இந்த வன்முறைகளை முதன் முதலில் பரீட்சித்து பார்த்தது தமிழ் சமூகத்திற்கு எதிராகத் தான்.


தங்களிற்கு மசியாத தமிழ் இளைஞர்கள் தமிழ் சமூகத்தினர் தமிழ் தலைவர்கள் மீது அவர்கள் வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டார்கள். தண்டனை வழங்கினார்கள்.

அரசாங்க சிறையில் பாதுகாப்பாகயிருந்த தமிழ் கைதிகளை இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக படுகொலை செய்தமை இதற்கான ஒரு உதாரணம். இந்த சிறையிலிருந்த தமிழர்களிற்கு எதிராக சிங்களவர்களை தூண்டி விட்டார்கள், சிங்கள கைதிகளை வைத்தே தமிழர்களை தாக்கினார்கள்.

ஜேஆர் தனக்கு எதிரான சமூகத்தை தண்டிப்பதற்காக எவ்வளவு கீழ்த்தரமான நடவடிக்கைகளிலும் ஈடுபடுவார் என்பதை இந்த சம்பவம் வெளிப்படுத்தியது.

நான் முதன் முதலில் ஆராய நினைத்தது கொக்கட்டிச்சோலை படுகொலை பற்றித் தான். கொக்கட்டிச்சோலை படுகொலையில் ஈடுபட்ட அரச இராணுவத்தின் பொறுப்பதிகாரியாக இருந்தவர் இலங்கையின் கொழும்பின் மிகப்பெரிய பாடசாலையாகயிருந்த ஆனந்தா கல்லூரியின் அதிபரின் மகன் குடலிக. கேர்ணல் குடலிகம.

இராணுவ நீதிமன்றம் இவர் குற்றவாளி என தெரிவித்திருந்த போதிலும் இவருக்கு எந்த தண்டனையும் வழங்கப்படவில்லை.




தங்களுடைய அரசியல் எதிர்காலத்திற்காக கூட்டாக கொலை செய்வது தென்னிலங்கை அரசியல் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக காணப்பட்டது.

1971இல் சிங்கராஜா வனகாட்டுப் பகுதிக்குள் பின்வாங்கிய ஜேவிபி உறுப்பினரை கைது செய்து அவருக்கான புதைகுழியை அவரையே வெட்டச் செய்து கொன்று புதைத்த வரலாறு உள்ளது.

இந்த அரசாங்கங்கள் கடந்த 70 வருடங்களாக தங்களிற்கு எதிரானவர்களை மாற்றுக் கருத்தினை கொண்டிருப்பவர்களை கூட்டாக கொலை செய்தன அல்லது மோசமான வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டன.

இந்த பட்டலந்த முகாம் குறித்து தகவல்களை திரட்டுவதற்கு நான் ஆர்வம் காட்டியமைக்கு காரணம் , பட்டலந்த முகாமிற்கு பொறுப்பாகயிருந்த இந்த நாட்டின் தலைவராக வருவதற்கான கலாச்சாரத்தை நான் உணர்ந்திருந்தேன்.

1987-89 ஆண்டு பகுதிகளில் - இந்திய அமைதிப்படையினர் நிலைகொண்டிருந்த காலத்தில் வடக்கு கிழக்கு போல இலங்கை முழுவதும் வதை முகாம்கள் காணப்பட்டன. நாட்டின் முக்கிய பொறுப்பிலிருந்த அரசியல் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த வதைமுகாம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டோம்.

1970-80களில் மிகப்பெரிய முதலீடாக சப்புகஸ்கந்த யூரியா தொழிற்சாலை காணப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் ஆதரவுடன் விவசாயிகளிற்கு வழங்குவதற்கான யூரியாவை உற்பத்தி செய்வதற்கான திட்டம் இது. எனினும் தொழில் அமைச்சராகயிருந்த ரணில் விக்கிரமசிங்க பழைய இரும்புகளிற்கு விற்றுவிட்டு வீட்டு தொகுதிகளை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார். தனது அரசியல் தேவைகளிற்காக பயன்படுத்தினார்.

ஒரு தொழிற்சாலையை ஒரு ஒட்டுமொத்த வதைமுகாமாக பயன்படுத்தியது என்பது பெரும் கதையாடல். பட்டலந்த முகாமிற்குள் சென்று ஆராய்வது அவசியமான தேவையாக காணப்பட்டது. மிகவும் திட்டமிட்டவாறு கவனமாக நாங்கள் நுழைந்தோம். நாங்கள் பயன்படுத்திய உபாயங்கள் காரணமாக ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் சென்று பார்த்தோம்.

1994 இல் திரட்டப்பட்ட தகவல் மூலம் ,ஒரு மிகப்பெரிய வதைமுகாம் குறித்தும் அங்கு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கொல்லப்பட்டமை குறித்தும் தகவல்களை திரட்ட முடிந்தது. இந்த தகவல்களை மாற்று பத்திரிகையாக காணப்பட்ட ராவயவில் கோட்சூ ட் அணிந்த தலைவரின் வதைமுகாம் என்ற தலைப்பில் வெளியிட்டோம்.

அன்று ஜனாதிபதியாக பதவி வகித்தவர் சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க. அவர் பட்டலந்தகுறித்து உண்மைகளை அறிவதற்கான ஆணைக்குழுவை ஏற்படுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார், அதற்கு காரணம் எங்கள் எழுத்துக்கள் தான்.

சந்திரிகா இது குறித்து சிஐடியிடம் சென்று முறைப்பாடு செய்யுமாறு என்னை கேட்டார். சிஐடியில் எனது முறைப்பாட்டினை அடிப்படையாக வைத்து 1996 இல் உண்மைகளை கண்டறியும் ஆணைக்குழுவை அமைத்தார்.

சாட்சிகளை விசாரித்த வேளை இந்த பட்டலந்த முகாமில் ஜேவிபி இளைஞர்கள் மாத்திரம் சித்திரவதை செய்யப்படவில்லை, கொல்லப்படவில்லை, ஐக்கிய தேசிய கட்சியினர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கூட கொலை செய்யப்பட்டனர் என்பது தெரியவந்தது.

அந்த அரசியல் தலைவரின்ஆசீர்வாதம் பெற்ற பொலிஸார் அரசியல் எதிரிகளை மாத்திரமின்றி கப்பம் பெறுவதற்காக பலரைகடத்தி கொலை செய்தனர், தங்களின் சொல்லை கேட்காத வழக்கறிஞர்கள் மனித உரிமை ஆர்வலர்கள் ஏன் பொலிஸாரை கூட கொலை செய்தனர்.

பட்டலந்த விவகாரத்தில் முக்கியமாக ஒரு நபரின் பெயரை குறிப்பிட வேண்டும், அவர் கிறிஸ்டொபர் வின்சென்ட் பெரேரா, திருகோணமலையை சேர்ந்தவர். ரணிலின் உதவியாளராக பணியாற்றியவர்.

பட்டலந்த ஆணைக்குழுவில் இடம் பெற்றிருந்த நீதிபதிகள் ரணில்விக்கிரமசிங்கவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக தங்கள் அறிக்கையில் அவரது பெயரை குறிப்பிடவில்லை.

அந்த இளைஞர் வழங்கிய சாட்சியம் புலனாய்வு பிரிவிடம் இன்றும் உள்ளது. அந்த நபர் சாட்சியம் வழங்கி மூன்று நாட்கள்வரை ரணில்விக்கிரமசிங்கவின் சட்டத்தரணிகள் அது பற்றி மௌனமாகயிருந்தனர். ரணில் விக்கிரமசிங்கவிற்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு மூன்று நாட்களின் பின்னர் அவர் (36) மர்மமான முறையில் உயிரிழந்தார். இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நாங்கள் வேண்டுகோள் விடுத்தவேளை ஆணைக்குழு தனக்கு இதற்கான அதிகாரம் இல்லை என தெரிவித்தது.



இது குறித்து சிஐடியினர் மேற்கொண்டிருந்த விசாரணைகளை நிறுத்துமாறு உத்தரவிட்டவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற பரிந்துரைகளுடன் அந்த அறிக்கை அவரிடம் வழங்கப்பட்டது.

ஆனால் அவர் அந்த அறிக்கையை தனது மாளிகைக்கு கொண்டு சென்றார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தனது அரசியல் தேவைகளிற்காக 1999 தேர்தலின் போது மாத்திரம் அதனை வெளியில் எடுத்தார். அதன் பின்னர் அது வரலாற்றின் புழுதியில் மறைந்து போனது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியான வேளை பட்டலந்த வதை முகாமிற்கு சென்று அது குறித்து புலனாய்வு செய்து எழுதியவன் என்ற அடிப்படையில் வெட்கி தலைகுனியும் நிலையிலிருந்தேன்.

அதன் பின்னரே பட்டலந்தவிற்கு தீ வைத்தோம் என்ற நூலை எழுதினேன். ரணில் ஜனாதிபதியாகயிருந்த காலத்தில் இதனை வெளியிட்டோம். இந்த நூல் ஆங்கிலத்தில் வெளியானது, அல்ஜசீரா இந்த நூலைத்தான் தனது பேட்டிக்கு பயன்படுத்தியது.

அல்ஜசீரா இதனை தெரிவித்த பின்னர் தான் இலங்கையின் ஆங்கில சிங்கள முதுகெலும்பு அற்ற பத்திரிகையாளர்களிற்கு இவ்வாறாதொரு விடயம் இருப்பது நினைவிற்கு வந்தது. இது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் இடம்பெறப்போகின்றது.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக நாடு முழுவதும் ,வதைமுகாம் ஒன்றை பற்றி ஏப்பிரல் பத்தாம் திகதி பேசப் போகின்றது. இது உலகிற்கு சொல்வதற்கான ஆதாரம்.

இவ்வாறான நபர்களை ஆட்சியாளர்களை ஆட்சிக்கு கொண்டு வராதீர்கள் என உலகிற்கு சொல்வதற்கான வாய்ப்பு.

கொழும்பு யாழ்ப்பாணம் மட்டக்களப்பு மாத்தளை என எல்லா இடங்களிலும் ஒரே தந்திரோபாயங்களே பின்பற்றப்பட்டன, இதனை செய்தவர்கள் ஒரே ஆட்சியாளர்கள் தான். ஆகவே உரத்த குரலில் இது குறித்து பேசவேண்டும்.

பட்டலந்த என்பது சிங்களவர்களின் பிரச்சினை மாத்திரமல்ல, தமிழர்களின் பிரச்சினை, முஸ்லீம்களின் பிரச்சினை, பட்டலந்தவில் பயனபடுத்திய முறைகளை தான் தங்களிற்கு எதிரானவர்களிற்கு அவர்கள் பயன்படுத்தினார்கள்.

இத்தகைய கொடுமைகளில் ஈடுபட்டவர்களிற்கு (22ம் பக்கம் பார்க்க)

# தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாண உள்ளூராட்சி தேர்தலில் பெரிய வெற்றியைப் பெறுமா?

(27ம் பக்கத் தொடர்ச்சி) சந்திர சேகரின் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் வெறும் பகற்கனவாக மாத்திரமே இருக்க முடியும். இருந்தாலும், தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தில் இருக்கிறது என்ற உண்மையை கருத்தில் எடுத்தே ஆக வேண்டும். செல்வாக்கான இடத்தை தேடியோடும் அருவருப்பான பேர்வழிகளுக்கு அது ஒரு காந்தம் போனறு இருக்கும். அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கத்துடன் தங்களை இணைத்துக் கொள்ளவே பலரும் விரும்புவர். ஆனால், தேசிய மக்கள் சக்தியில் இணைகின்ற அல்லது ஆதரிக்கின்ற அந்த சந்தர்ப்பவாத பேர்வழிகளினால் பெருமளவில் வாக்குகளைக் கொண்டு வர முடியுமா என்பது மிகவும் சந்தேகமே.

### எண்கணிதக் காரணி

எண் கணிதக் காரணியை கருத்தில் எடுக்க வேண்டியதும் மிகவும் முக்கியமானதாகும். யாழ்ப்பாண மாவட்டத்தின் பாராளுமன்ற ஆசனங்களில் அரைவாசியைக் கைப்பற்றிய தன் மூலமாக தேசிய மக்கள் சக்தி மிகச் சிறந்த வெற்றயைப் பெற்றது. ஆனால், அது பெற்ற வாக்குகள் நான்கில் ஒரு பங்கிற்கு சமமானது மாத்திரமே. அநுரா அலை தேசிய மக்கள்சக்திக்கு வாக்குகளைக் கவர்ந்தாலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளில் நான்கில் மூன்று பங்கு ஏனைய கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்குமே சென்றது என்பதை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். இந்த கட்சிகளிலும் சுயேச்சைக் குழுக்களிலும் பெரும்பாலானவற்றை தமிழ்த் தேசியவாத அமைப்புகள் ' என்று வகைப்படுத்த முடியும்.

அதனால் தமிழ்த் தேசியவாத கட்சிகளினாலும் குழுக்களினாலும் ஒரு வகையான ஐக்கியத்தை ஏற்படுத்தி இரண்டு அல்லது மூன்று கூட்டணிகளாக தேர்தலில் களமிறங்க முடியுமாக இருந்தால் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் வாய்ப்புகள் குறைவானதாகவே இருக்க முடியும். அவ்வாறு நடந்தால் தமிழ்த் தேசாயவாத கட்சிகளும் கூட்டணிகளும் தேசிய மக்கள் சக்தியை விடவும் உயர்வான செயற்பாட்டை வெளிக்காட்டுவதற்கான வாய்ப்புக்களுக்கு இடமிருக்கிறது. தவிரவும், தமிழ்த் தேசியவாதத்தின் கோட்டையான யாழ்ப்பாணத்தில் சிங்கள தேசியக் கட்சி ஒன்று முதலாவதாக வந்தது குறித்து குறிப்பிட்ட சில வட்டாரங்கள் கவலைப்படுகின்றன.

### தமிழ்த்தேசியவாதக் கட்சிகள்

அதனால் தமிழ்த் தேசியவாதக்கட்சிகள் திருப்பித் தாக்கி அநுரா அலையைப் பின் வாங்கச் செய்வதற்கான ஒரு சாத்தியப்பாடு இருக்கிறது. இது தமிழ்த் தேசாயவாதக் கட்சிகளினால் எந்தளவு ஐக்கியத்தைச் சாதிக்கக் கூடியதாக இருக்கும் என்பதிலேயே தங்கியிருக்கிறது. பல்வேறு கூட்டங்களும் கலந்துரையாடல்களும் நடைபெற்று வந்திருக்கிறது. ஆனால், இதுவரையில் அவற்றினால் பயன் கிட்டவில்லை. ஐக்கியம் சாத்தியமாகாமல் போனாலும் கூட, தேர்தல் பிரசாரங்களின் போது தமிழ்த் தேசியவாதக் கட்சிகள் ஒன்றை ஒன்று தாக்குவதைத் தவிர்த்து தேசிய மக்கள் சக்தியை தனியொரு இலக்காகக் கொண்டு தாக்குவதற்கான ஏற்பாடொன்றைச் செய்து கொள்ள முடியும்.

மேலும், தமிழ்த் தேசியவாத கட்சிகள் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியை தோற்கடிக்க வேண்டுமானால் புதிய, நடைமுறைச் சாத்தியமானதும் கற்பனைத் திறனுடையதுமான கொள்கைகளை அவை வகுக்க வேண்டும். பழைய கொள்கைகளையே தொடர்ந்தும் பின்பற்றிக் கொண்டிருப்பது எதிர்பார்க்கப்படும் பயன் விளைவுகளைத் தராது. தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்கான அடிப்படைக் காரணம் மக்கள் மத்தியில் காணப்பட்ட மாற்றுத்துக்கான அவாவேயாகும் என்பதை நினைவிற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தமிழ்த் தேசியவாதக் கட்சிகள் தேசிய மக்கள் சக்தியைத் தோற்கடிக்க வேண்டுமானால் இந்த முதன்மையான காரணியை கருத்தூன்றிக் கவனத்துக்கு எடுக்க வேண்டும். தங்களது தற்போதைய கொள்கைகள் மற்றும் அணுகுமுறைகளினால் தேசிய மக்கள் சக்தியிடமிருந்து வாக்காளர்களை கவரக்கூடியதாக இருக்குமா என்பதை தமிழ்த் தேசியவாத கட்சிகள் தங்களைத் தாங்களே கேட்கவேண்டும்.

### உள்ளூராட்சித் தேர்தல் முறை

உள்ளூராட்சி சபைகளுக்கென்று தேர்தல் முறையொன்று இருக்கிறது. 60 சதவீதமான ஆசனங்கள் வட்டாரங்கள் மூலமாகவும் 40 சதவீதமான ஆசனங்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் மூலமும் தெரிவு செய்யப்படுவதே அந்த முறையாகும். இந்த தேர்தல் முறையின் விளைவாக 2018பெப்ரவரி தேர்தல்களுக்கு பிறகு அரசியல் கட்சிகளினால் உள்ளூராட்சி சபைகளில் ஒரு தெளிவான பெரும்பான்மையைப் பெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது.


தமிழரசு கட்சி, ரெலோ, புளொட் ஆகியவற்றை உள்ளடக்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பினால் அது 2018 ஆம் ஆண்டில் போட்டியிட்ட 48 உள்ளூராட்சி சபைகளில் மூன்று சபைகளில் மாத்திரமே பெரும்பான்மைப் பலத்தைப் பெறக்கூடியதாக இருந்தது. அதனால் தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சி சபை ஒன்றில் கூடுதலான வாக்குகளைப் பெற்றாலும் தெளிவான பெரும்பானமைப் பலத்தை பெறமுடியாத சூழ்நிலை தோன்றுவதற்கான சகல சாத்தியப்பாடுகளும் இருக்கின்றன. அத்தகைய சூழ்நிலையில், உள்ளூராட்சி சபைகளில் நிருவாகங்களை அமைப்பதற்காக தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் தேசிய மக்கள் சக்தியை ஓரங் கட்டக் கூடியதாக இருக்கும்.

NO. #1 ASTROLOGER, PSYCHIC & SPIRITUALIST



World Famous Indian Astrologer
PANDIT: SAI RAM

Face Reading, Palm Reading,
Horoscope & Date of Birth



SOLUTIONS & SUGGESTIONS:

OPEN 7 DAYS
9 AM to 7.30 PM

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.

Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob
Vasthu Prob
Real Estate
and all other

Call for 1 FREE QUESTION

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போதுகனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள் கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசிகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வதிவிடப் பிரச்சனைகள், வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்ணூறு நாவூறு, கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

100% GUARANTEE

+1 437-829-1722
2993 Islington Ave, North York, ON, M9L 2K9
(Major intersection: STEELES & ISLINGTON)

# அரசியல் தீர்வு முன்மொழிவு எதுவும் இல்லாமல் பாதுகாப்புச் செலவீனங்களுக்கு அதிக நிதியை ஒதுக்கிய வரவு செலவுத் திட்டம் அநுராவின் விருப்பத்தை நிறைவேற்றுமா?

**கட்டுரையாளர்:-**
**அழகு.குணசீலன்**

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நிதியமைச்சர் என்ற வகையில் 2025 வரவுசெலவுத்திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதன் மீதான விவாதங்கள் தொடர்கின்றன. ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள் என்றும் இல்லாதவாறு 159 அரசாங்க தரப்பு உறுப்பினர்களைக் கொண்டுள்ள பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் என்பதிலும் எந்த சந்தேகமும் இல்லை.




ஆனால் வரவுசெலவுத் திட்டத்தின் வெற்றி, தோல்விக்கு அப்பால் இரண்டு விடயங்களை இங்கு நோக்க வேண்டியிருக்கிறது. சுமார் 50 பக்கங்களை கொண்ட தனது வரவு-செலவுத்திட்ட உரையில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ள விடயங்களே அவை.

1. இந்த நாட்டில் இனி இன மோதல்கள் இருக்காது. மதம், இனம், அல்லது பாலினம் இனிமேல் பிரிவினைக்கான காரணிகளாக இருக்காது.

2.ஊழல்கள் நிறைந்த நிர்வாகம், தோல்வியுற்ற பொருளாதார திட்டங்கள், பொறுப்பற்ற தலைமைத்துவம் என்பன இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு காரணம், இந்த வரவு செலவுத் திட்டம் நாட்டை மீட்டுத்தரும்.

ஜனாதிபதியின் இரு முக்கிய விருப்பங்களே இவையன்றி தீர்க்கப்பட்டு விட்ட விவகாரங்கள் அல்ல. அரசியல் தீர்வுக்கான முன்மொழிவு எதுவும் இன்றி, பாதுகாப்பு செலவினங்களுக்கும் படைத்துறைக்கும் அதிக நிதியை வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ள இந்த வரவுசெலவுத் திட்டம் ஜனாதிபதியின் விருப்பை நிறைவேற்றுமா? அரசியல் தீர்வு இன்றி ஜனாதிபதியின் இந்த இரு இலக்குகளும் சாத்தியமற்றவை என்பதுடன், பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களில் முக்கிய பங்கு வகித்த யுத்தத்தை அவர் வசதி கருதி மறந்து விடுகிறார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டுள்ள ஊழல்கள் நிறைந்த நிர்வாகம், தோல்வியுற்ற பொருளாதாரத் திட்டங்கள், பொறுப்பற்ற தலைமைத்துவம் என்பனவற்றிற்கு இந்த நாட்டில் ஜே.வி.பி. 1970 களில் இருந்து ஏதோ ஒரு வகையில் பொறுப்பாக இருந்துள்ளது. இதை ஜே.வி.பி. ஏற்றுக் கொள்ளாத வரை தங்களை தவிர்த்து கடந்த கால ஆட்சியாளர்களை தனியாக குற்றம் சாட்டுவது யுத்தத்திற்கு பின்னரான காலத்திற்கு பொருத்தமானதாக இருந்தாலும் அதற்கு முந்திய அரை நூற்றாண்டு காலத்திற்கு ஜே.வி.பி.க்கும் இந்த இனவாதத்திலும், போரிலும், பொருளாதார திட்டங்களின் தோல்வியிலும், பொறுப்பற்ற தலைமைத்துவத்திலும் பங்குண்டு.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் ஆட்சி ஒரு இடதுசாரி ஆட்சி என்ற விம்பம் விழுகிறது. ஆனால் வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளில் முறைமை மாற்றத்திற்கான எந்த முன் மொழிவுகளும் இல்லை. மாறாக பொருளாதார சீர்திருத்தங்களை கூட தேடவேண்டியே இருக்கிறது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் கலாநிதி என்.எம்.பெரேராவின் வரவு செலவுத்திட்டங்கள் இன்றைய நிலையில் நினைவு படுத்தப்பட வேண்டியவை. அன்றைய சோவியத், சீன, கியூபா பொருளாதார அபிவிருத்தி மாதிரிகளை உள்வாங்கி தயாரிக்கப்பட்டவை. மூடப்பட்ட உள்நாட்டு அபிவிருத்தியும், நிலவுடமை சீர்திருத்தங்களும், தேசிய மயமாக்கலும் முறைமை மாற்றத்தின் அடிப்படையாக அமைந்தவை. ஆனால் இதற்கு எதிராக ஆயுதம் தூக்கியவர்கள் ஜே.வி.பி.யினர். இன்று முறைமை மாற்றம் பற்றி பேசுகிறார்கள் இன்றைய உலக மயமாக்கல் தாராள பொருளாதாரத்தில் இது காலாவதியான பொருளாதார மாதிரியாகி விட்டது.

இன்றைய உலக மயமாக்கல் சூழலில் முதலாளித்துவ தாராள பொருளாதார மாதிரியை விட்டு விலகி உலகில் எந்த ஒரு நாடும் ஓடமுடியாது. இதனால் தான் தேர்தல் காலத்தில் ஜே.வி.பி- என்.பி.பி.யினர் கூறிய பொருளாதார கருத்துக்கள் மற்றும் சர்வதேச நாணயநிதிக்கும், முதலாளித்துவ பொருளாதாரத்திற்கும் எதிரான கருத்துக்களை நிறைவேற்ற முடியாமல் திண்டாடுகிறார்கள். ஜனாதிபதி தனது தேர்தல் வாக்குறுதிகளுக்கு மாறாக, சகல தரப்பு சந்திப்புக்களிலும் ஐ.எம்.எப்.பின் நிபந்தனைகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டிய தேவையை வலியுறுத்தி ஆடிப்போன தங்கள் நிலைப்பாட்டை நியாயப்படுத்தி வருகிறார்.

ஜனாதிபதியும், நிதி அமைச்சருமான அநுரகுமார திசாநாயக்கவின் முன்மொழிவுகளின்படி 2025 பொருளாதார வளர்சி வீதம் 5வீதமாக எதிர்பார்க்கப்படுகிறது. மூன்று ஆண்டுகளின் பின்னர் 2028இல் இருந்து கடன் மீளளிப்பு தொடரும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த கடன் மீளளிப்பு மூன்று ஆண்டுகளில் சாத்தியமாவதற்கு உள்நாட்டு உற்பத்தியில் 2. 3 வீதம் ஆண்டு தோறும் சேமிக்கப்பட வேண்டும். இது நடைமுறையில் அவ்வளவு இலகுவான இலக்கு அல்ல.

பூகோள அரசியல்தீர்வு முன் மொழிவு அரசியல், பொருளாதாரங்களின் தாக்கங்களும், உள்நாட்டு பொருளாதார ஸ்திரத்தன்மையும் இதற்கு ஒத்துழைக்க தவறினால் இந்த இலக்கை ஜனாதிபதி நினைப்பது போல் அடைய முடியாது. மேற்கூறிய இரண்டிலும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தப் போவது இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக இருக்கும்..

2023 இல் 2.9 பில்லியன் டொலர்கள் அவசர நிதி ஐ.எம்.எவ்.ஆல் வழங்கப்பட்டதை அடுத்தே இலங்கை தன்னை மீட்டுக் கொள்ளக்கூடியதாக




இருந்தது. இலங்கையின் இன்றைய கையிருப்பு 9பில்லியன் டொலர்களாக உள்ளது. மத்திய வங்கியின் தகவல்களின் படி இது நான்கு மாத இறக்குமதிக்கு மட்டுமே போதுமானது. இந்த இருப்பு 2022 இல் 1.9 பில்லியன்களாக மட்டுமே இருந்தது. இன்றைய இந்த கையிருப்பை உயர்த்தியதில் சகல விமர்சனங்களுக்கும் அப்பால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார அணுகுமுறை பெரும் பங்கு வகித்துள்ளது என்பதை அநுரகுமாரவும் ஏற்றுக்கொள்வார்.

நாட்டில் ஏற்கனவே இருந்த பணப் புழக்கத்துடன் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுடனான நிவாரண, சம்பள, உதவித்தொகை அதிகரிப்புக்களும் எப்ரல் 2025 இல் இருந்து வழங்கப்படும் போது பணப்புழக்கத்தில் ஏற்படும் அதிகரிப்பு பணவீக்கத்திற்கு வழி வகுக்கும். உற்பத்தி அதிகரிக்காத, குறைவடைகின்ற அல்லது இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்படுகின்ற சூழலில் இந்த வருட ஆரம்பத்தில் இருந்தது போன்ற பொருட்கள் தட்டுப்பாடும், விலை உயர்வும் ஏற்படலாம். முக்கிய அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலை நிர்ணயத்தில் தனியார் துறையை கட்டுப்படுத்த முடியாத நிலையில் அரசாங்கம் இருக்கிறது. அந்தளவுக்கு முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரம் விலை நிர்ணயத்தில் அரசாங்கத்தை ஆட்டிப்படைக்கிறது.

இந்த நிலையில் நிதி திட்டமிடல், கல்வி, சுகாதாரம், பொதுநிர்வாகம் , மாகாணசபைகள், ஊடகம் போன்ற துறைகளுக்கு அதிக நிதி ஒதுக்கப் பட்டுள்ளதாக கூறப்படுகின்ற போதும் ஒப்பீட்டளவில் பாதுகாப்பு துறைக்கான ஒதுக்கீட்டுடன் பார்க்கையில் குறைவானவை.(22ம்பக்கம் பார்க்க)

சிவமயம்




ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை


சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
“இணுவில் திருவூர்”
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! வழக்குகளில் சாதகமான சூழல் ஏற்படும். ஆக்கபூர்வமான யோசனைகளை செயல்படுத்தி எதிலும் வெற்றி காண்பீர்கள். தெளிவான மன நிலை இருக்கும். செயல்திறன் அதிகரிக்கும் நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தாமதப்படும். தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். சில நேரங்களில் முக்கிய முடிவு எடுப்பதில் தயக்கம் காட்டுவீர்கள்.





ரிஸபராசி அன்பர்களே! பக்குவமான அணுகு முறையினால் எல்லா காரியங்களிலும் வெற்றி பெறுவீர்கள். செயல்திறமை அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எண்ணிய காரியங்கள் கைகூடும். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்வது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். உத்யோகத்தில் பணிசுமை குறைந்து காணப்படும்.





மிதுனராசி அன்பர்களே! புத்தி சாதூரியமும் அறிவு திறனும் அதிகரிக்கும். எதைச் செய்வது எதை விடுவது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப்படும். திடீர் சோர்வு உண்டாகும். அடுத்தவரிடம் உங்களது செயல்திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. பேச்சாற்றல் மூலம் தொழில் லாபம் கூடும்.





கடகராசி அன்பர்களே! பணிச்சுமை அதிகரிக்கும். எந்த ஒரு விஷயத்திலும் முடிவு எடுப்பது தாமதமாகும். அடுத்தவர் பிரச்சனைகளில் தலையிடுவதை தவிர்ப்பதும் நல்லது. பணவரத்து எதிர்பார்த்த நேரத்தை விட தாமதமாக வந்து சேரும். பூர்வீக சொத்துக்களில் இருந்து பிரச்சனைகள் தீரும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடுகள் ஏற்பட்டு பின்னர் விலகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக வேலைகளை செய்வது நல்லது.





சிம்மராசி அன்பர்களே! சுணக்க நிலையில் இருந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பெறும். மன சஞ்சலம் நீங்கும். யாரையும் நேருக்கு நேர் எதிர்க்காமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். வயிறு தொடர்பான நோய்கள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் மெத்தனமாக காணப்பட்டாலும் பணவரவு இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்பட்டு நீங்கும்.




கன்னிராசி அன்பர்களே! சொந்த பந்தங்களுக்குள் இணக்கம் ஏற்படும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு காரியத்தில் சாதகமான பலன் கிடைக்கும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். முன்கோபம் குறையும். பணவரத்து அதிகரிக்கும். மனதில் புதுதெம்பும் உற்சாகமும் தோன்றும். தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். குடும்பத்தில் அமைதி ஏற்படும்.





துலாம் ராசி அன்பர்களே! திடமான நம்பிக்கையுடன் எதையும் செய்வீர்கள். எதிலும் சாதகமான நிலை காணப்படும். பணவரத்து அதிகரிக்கும். வாக்கு வன்மை ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் செவிசாய்ப்பார்கள். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் கூடும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள்.





விருச்சிகராசி அன்பர்களே! சோதனைகளையும், தடைகளையும் தகர்த்தெறிவீர்கள். எல்லா காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் லாபம் கிடைக்கும். நோய்கள் தீரும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நன்மை, தீமை பற்றிய கவலை இல்லாமல் தலை நிமிர்ந்து நடப்பீர்கள். தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். கடன் பிரச்னைகள் குறையும்.








தனுசுராசி அன்பர்களே! கடின உழைப்பினால் வெற்றி பெறுவீர்கள். எதிலும் முன்னேற்றம் காணப்படும். இஷ்டத்திற்கு விரோதமாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும். கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மை தரும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம்.




மகரராசி அன்பர்களே! நிதான போக்கைக் கடைபிடித்து வெற்றி பெறுவீர்கள். எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. சுலபமாக முடிந்து விடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்று தாமதமாகலாம். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் இருந்த இழுபறி அகலும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் அலைச்சலுக்கு பின் நடந்து முடியும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் ஏற்படலாம்.




கும்பராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகரிக்கும். கணவன் மனைவி குடும்ப ஒற்றுமையில் சீரான நிலையே காணப்படும். ஆயுள் அபிவிருத்தி பெறுவதற்கான வகையில் நற்செயல்கள் இருக்கும். தந்தை வழி சார்ந்த உறவினர்கள் தங்களுக்கு தேவையான உதவிகளை உங்களிடம் கேட்டு பெறுவார்கள். குடும்பத்தினர் மகிழ்ச்சிக்காக சுபமங்களச் செலவுகளை செய்யும் வாய்ப்புகள் உருவாகும்.




மீனராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் செய்து முடிப்பதில் துணிச்சல் உண்டாகும். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படலாம். உறவினர்களுடன் பேசும் போது கவனமாக பேசுவது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

## அரசியல் தீர்வு முன்மொழிவு எதுவும்

(21ம் பக்கத் தொடர்ச்சி) பாதுகாப்பு செலவினங்களுக்காக 442 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. யுத்தம் முடிவுற்ற போது 2009 இல் இராணுவத்தினர் தொகை மூன்று இலட்சம். இது 2024இல் 15ஆண்டுகளில் 1,35,000 ஆக குறைக்கப் பட்டது. 2023 கடற்படையினர் 44,532 ஆகவும், விமானப்படையினர் நிரந்தரம் 17,567 ஆகவும், தற்காலிக படையினர் 9,076 ஆகவும் இருந்தனர். மொத்தத்தில் யுத்தத்தின் பின்னர் படையினர் தொகை குறைவடைந்துள்ளது. இந்த நிலையில் பாதுகாப்பு செலவினங்களில் ஏற்படும் அதிகரிப்பு எதனைக் குறிக்கிறது? இராணுவ ஆயுத நவீனமயப்படுத்தல் என்றால் அதற்கான தேவை என்ன?

இத்தனைக்கும் மத்தியில் 2030 இல் இராணுவத்தை ஒரு இலட்சமாக குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அப்படி இருக்க 2023 இல் 15 வீதமாக அதிகரிக்கப்பட்ட பாதுகாப்பு துறைச் செலவுகள், தற்போதைய வரவுசெலவுத்திட்டத்திலும் 2024 விடவும் 3 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதே போன்று கடற்படை செலவுகள் 12 வீதமாகவும், விமானப்படை செலவுகள் 4 வீதமாகவும் அதிகரித்துள்ளது. இராணுவத்தினர் தொகை அரைவாசிக்கும் கூடுதலாக குறைக்கப்பட்டுள்ள போது எல்லோரும் இலங்கையர் என்ற நாட்டில் இராணுவ செலுவுகள் அதிகரிப்பின் பின்னணி என்ன?

அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய யாழ்.பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டுள்ளார். அந்த விபரங்கள் இவை: இலங்கை இராணுவ மொத்த டிவிசன்கள்: 20. வடக்கு, கிழக்கில் நிலை கொண்டிருப்பது: 16. வடக்கில் மட்டும்: 14. கிழக்கில்: 02.

இன்னொரு வகையில் நோக்கினால், கடற்கரைகளில் இரண்டு கிலோமீற்றருக்கு ஒரு கடற்படைமுகாம் அமைந்துள்ளது. முல்லைத்தீவில் இரண்டு பொதுமக்களுக்கு (2:1) ஒரு படையினர் நிலை கொண்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் 14 பொது மக்களுக்கு ஒரு படைவீரர். (14:1) உள்ளனர். வன்னியில் 10 பொது மக்களுக்கு ஒரு படைவீரர் (10:1) உள்ளார்.

இந்த விபரங்கள் அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை எட்டும் எண்ணத்தில் இன்னும் உறுதியாக இல்லை எனபதை காட்டுகிறது. இதனால் தான் பொருளாதார வங்குரோத்துக்கு மத்தியிலும், போர் ஓய்வுக்கு பின்னரும் வடக்கு, கிழக்கில் இராணுவம் குவிக்கப்பட்டு இருக்கிறது. பொருளாதார வங்குரோத்துக்கு போர் தான் முக்கி காரணம் என்பதை மறைத்து கடந்த கால ஆட்சிகளின் ஊழல்களை மட்டும் முதன்மை படுத்தி அநுர குமார அரசியல் செய்கிறார்.

படையினரின் தமிழ்ப்பகுதி பிரசன்னத்தை நோக்கினால் சிங்கள பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்புக்கு உலகில் வடக்கு,கிழக்கை விடவும் வேறு உதாரணம் இருக்கமுடியுமா? அநுரகுமார தென்னிலங்கையையும், சிங்கள, பௌத்த மக்களையும் விடுவித்து வடக்கு கிழக்குமக்கள் மீது இராணுவஆட்சியை நடத்து கிறாரா? இதற்கு இலங்கையர் கோஷம் வேறு ....! அடுத்தவாரமும் தொடரும்.......!

## கனடாவின் புதிய பிரதமர் இந்தியா...

(24ம் பக்கத் தொடர்ச்சி) நிலைப்பாடும், கண்ணோட்டமும் முதிர்ச்சியானதாக இருந்தது என்று சொல்கிறார் அஜய் பிஸாரியா. நெருக்கடி ஏற்பட்ட போதும் நாம் அதை ட்ரூடோவின் பிரச்னையாக பார்த்தோம். ட்ரூடோவின் சுமை இல்லாத ஒரு புதிய கனடா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி உறவுகளை நிலைப்படுத்தி இயல்பானதாக மாற்ற இந்தியா தயாராக இருக்கிறது.' என்று அவர் சொல்கிறார்.

இந்தியாவும் கனடாவும் அதிகாரிகள் மட்டத்திலும், இரண்டாம் நிலையிலும் ஏற்கனவே ஏராளமான தொடர்பு வைத்துள்ளனர். கனடா உளவு தலைவர் டேனியல் ரோஜர்ஸ் மற்றும் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலை இந்தியா வில் அடுத்த வாரம் சந்திப்பார். எனவே இந்த பேச்சு வார்த்தைகள் பாதுகாப்பு அளவில், அதிகாரிகள் அளவில் தொடரும். ஆனால் அரசியல் உறவுகளை சீராக்க, ஒரு புதிய அரசு அமைக்கப்படவேண்டும். அதன் பின்னர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும். நான் சொன்னதைப் போல், உறவுகளை முடிப்பதற்கான நடவடிக்கையை அவர்கள் எடுத்தார்கள் என்பதால் தொடங்குவதற்கான நடவடிக்கை அவர்கள் தரப்பில் எடுக்கப்பட வேண்டும்', என்று அஜய் பிஸாரியா கூறுகிறார். நன்றி– பிபிசி

## இந்தியாவின் எதிர்பார்ப்பு!

(16ம் பக்கத் தொடர்ச்சி) கவனத்தில் கொள்ள வேண்டும். எங்களுக்கும் நலன்கள் இருக்கின்றன. அதனை இலங்கை தட்டிக் கழிக்க கூடாது. அண்டை நாடுகளின் மீது எங்களுக்கு இருக்கின்ற அக்கறையை போலவே, அந்த நாடுகளுக்கும் எங்களின் மீது அக்கறை இருக்க வேண்டும் என்பதே அந்த செய்தி. கொடுக்கல் வாங்கல் என்பது இருக்க வேண்டும் என்றில்லை. எங்களின் ஆர்வத்தினை புரிந்து கொண்டு உணர்ந்து கொண்டு இலங்கை செயற்பட வேண்டும். என ஜெய்சங்கர் கூறியிருப்பதை, இலங்கை அரசாங்கம் புரிந்து கொண்டிருக்கிறதா என்று தெரியவில்லை.

சமமாக அதனைப் புரிந்து கொண்டால், இந்திய பிரதமரின் பயணம் சுமுகமானதாக அமையும். இல்லாவிட்டால், இந்திய பிரதமரின் இந்த பயணம் இருதரப்புகளுக்கும், இயல்பான ஒன்றாக இருப்பதற்கு வாய்ப்புகள் குறைவு.

## பட்டலந்த குறித்துப் பேசினால் தான்....

(19ம் பக்கத் தொடர்ச்சி) எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையின் குற்றவியல் சட்டத்தின் கீழ் இந்த விடயத்தில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக குற்றச்சாட்டுகளை சுமத்துவதற்கான அழுத்தங்களை நாங்கள் கொடுக்க வேண்டும்.

தென்னிலங்கையில் இடம்பெற்ற அநியாயங்கள் பற்றி பேசிவது முக்கியம் ஏனென்றால் இது பற்றி பேசும் போது தான் ஜேஆர் ரணில் விக்கிரமசிங்க தென்னிலங்கையில் மாத்திரமல்ல வடக்கு கிழக்கிலும் இதனை செய்தார்கள் என்பதை சிங்கள மக்கள் அறிந்து கொள்ளும் உணர்ந்து கொள்ளும் நிலை உருவாகும்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## At Need Funeral Arrangements
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## Pre-Arranging: A Wise Choice...

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

EELANADU 21 Mar 2025 ஈழநாடு

கனடாவில் புதிய பிரதமராக மார்க் கார்னி பதவியேற்றுக் கொண்டுள்ளார். ஆளும் லிபரல் கட்சியின் தலைமைக்கான தேர்தலில் சமீபத்தில் வெற்றி பெற்ற அவர் முன்னாள் மத்திய வங்கி ஊழியர் ஆவார். இதனால், கனடாவில் ஜஸ்டின் ட்ரூடோவின் 9 ஆண்டு ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.

சொந்த கட்சியிலேயே அழுத்தம் அதிகரித்ததால், ஜனவரி மாதம் தனது பதவி விலகலை ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்தார். லிபரல் கட்சி புதிய தலைவரை தேர்ந்தெடுக்கும் வரை மட்டும் பதவியில் நீடிப்பதாகவும் அவர் அறிவித்தார்.

அண்மைக் காலத்தில் இந்தியா கனடா இடையே உறவுகள் சுமூகமாக இல்லை. கனடாவில் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள மார்க் கார்னி இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துவார் என்று அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

கனடாவில் ஃபெடரல் தேர்தல்கள் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ளன, ஆனால் கார்னி முன்கூட்டியே தேர்தல்களை அறிவிப்பார் என நம்பப்படுகிறது. அண்மையில், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் அச்சுறுத்தல்களை எதிர்த்து நின்றதால், தேர்தல்களை முன்கூட்டியே நடத்துவது லிபரல் கட்சிக்கு சாதகமாக இருக்கலாம் என ஆய்வாளர்களின் கணிக்கின்றனர்.

தான் பிரதமரானால் இந்தியாவுடன் வர்த்தக தொடர்பு மீண்டும் ஏற்படுத்தப்படும் என மார்க் கார்னி அண்மையில் தெரிவித்திருந்தார். ஒத்த கருத்துடைய நாடுகளுடன் கனடாவின் வர்த்தக தொடர்புகளை விரிவுபடுத்துவது குறித்தும் அவர் பேசினார்.

ஒத்த கருத்துடைய நட்பான நாடுகளுடன் வர்த்தக உறவை மேம்படுத்த கனடாவுக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. இந்தியாவுடன் நமது உறவை மீண்டும் கட்டமைக்க நமக்கு ஒரு வாய்ப்பு உள்ளது. இந்த வர்த்தக தொடர்புகளைச் சுற்றி இரு தரப்புக்கும் பொறுப்புணர்வு இருக்க வேண்டும். நான் பிரதமராக இருந்தால், அந்த வாய்ப்பை நான் எதிர் நோக்கியிருப்பேன் என்றார் கார்னி.

ஜனவரியில் ஜஸ்டின் ட்ரூடோ தனது ராஜினாமாவை அறிவித்த போது, இந்திய வெளியுறவுத்துறை, கனடாவுடன் இருதரப்பு உறவை வலுவடையச் செய்வதில் உறுதியாக இருப்பதாக தெரிவித்தது.

மேம்படுத்த முடியுமா என்பது குறித்து தற்போது சூடான விவாதம் எழுந்துள்ளது.

### உறவுகயை மேம்படுத்துவது கனடாவின் பொறுப்பு

அஜய் பிஸாரியா கனடாவுக்கான இந்திய தூதரக உயர் அதிகாரியாக பணியாற்றியிருக்கிறார். ட்ரூடோவை தவிர கனடா அரசில் எந்த மாற்றமாக இருந்தாலும் அது திருப்புமுனையாக இருக்கலாம் என்றும் இரு நாட்டு உறவுகளை சீரமைக்க ஒரு வாய்ப்பாக இருக்கலாம் என்று அவர் கூறுகிறார்.

ஆனால் அதைச் செய்ய இந்தியா அவசரப்படாது, ஏனென்றால் கனடாவில் விரைவில் தேர்தல் நடத்தப்பட வாய்ப்பு உள்ளது. மக்களின் வாக்கைப் பெற்ற புதிய பிரதமர் வந்த பின்னர்தான் இந்தியாவும், கனடாவும் பேச்சுவார்த்தை நடத்தும்,' என்கிறார் அவர்.

நாடுகளும் எதிர்கொள்கின்றன, பின்னர் இதை உள்நாட்டு அரசியல் எந்தளவு பாதிக்கிறது என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும். ஆனால் தற்போது உறவை மீண்டும் தொடங்கி அதை சமன்படுத்த இது ஒரு வாய்ப்பு என நான் நினைக்கிறேன்.,' என கூறுகிறார் பண்ட்.

### கனடாவின் நிலை தளருமா?

கனடாவில் மாறும் சூழ்நிலைகள் காரணமாக குடியேற்றம் அல்லது காலிஸ்தான் போன்ற பிரச்சனைகளில் கனடாவின் நிலைப்பாடு மாறுமா?, தளருமா? வாக்கு வங்கி எந்த பிரதமருக்கும் முக்கியமானதாக இருக்கும் என்பதால் இந்த பிரச்னைகள் தொடர்பான சிக்கல்கள் போய்விடாது என அஜய் பிஸாரியா இது குறித்து தெரிவித்தார். எனவே இது முழுமையாக



பிஸாரியாவின் கூற்றுப்படி, இந்திய தூதரக உயர் அதிகாரியையும் மூத்த அதிகாரிகளையும் வெளியேற்றும் இறுதி நடவடிக்கை கனடாவால் நவம்பரில் மேற் கொள்ளப்பட்டது என்பதால் பொறுப்பு தற்போது கனடாவை சேர்ந்தது.

போய்விடப் போவதில்லை. ஆனால், ட்ரூடோ இதை தனிப்பட்ட பிரச்னையாக்கி மோசமாக்கிவிட்டார். தற்போது அதை மேம்படுத்த ஒரு வாய்ப்பு. எனவே உடனடியாக இயல்பு நிலைக்கு திரும்ப முடியாவிட்டாலும், இதற்கு நீண்ட காலம் எடுக்கும். நாம் உறவுகளை நிலைப்படுத்தி அது தற்போது இருக்கும் குழியிலிருந்து வெளியே எடுக்க முடியும்,' என்கிறார் அவர்.

மறுபுறமோ, பேராசிரியர் பண்ட் இதுகுறித்து பேசும் போது இதை செய்வது லிபரல் கட்சியினருக்கு மிகவும் கடினம். தேர்தலில் போட்டி கடினமாக இருக்கும் என்பதால் இதன் பின்னால் உள்ளூர் அரசியல் காரணமிருப்பதாக நான் நினைக்கிறேன். பழமைவாத கட்சியினர் தற்போது முன்னணியில் உள்ளனர். லிபரல் கட்சியினரும் தங்களது வாக்கு சதவிகிதத்தை அதிகரித்து வருகின்றனர். ஆனால் அது கடுமையான தேர்தலாக இருந்தால், அரசியல் கணக்குகள் முக்கியத்துவம் பெறும் என நினைக்கிறேன். மார்க் கார்னியை பொருத்தவரை, பொருளில் மாற்றம் என்பதைவிட பாணியிலேயே மாற்றமிருக்கலாம்.'

பேராசிரியர் பண்டின் கூற்றுப்படி, விஷயங்களை தனிப்பட்ட பிரச்னையாக்கிய ட்ரூடோவின் வழி, ஒரு வகையில் அதுவும் ஒரு பாணி தான். ட்ரூடோ செய்ததைப் போல் பொதுவெளியில் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டுவதை விட, காலிஸ்தான் விவகாரத்தை மூடிய கதவுகளுக்கு பின்னால் தூதரக ரீதியாக கையாள்வது எப்படி என்பதை இனங்காண வேண்டும்,' என்கிறார் அவர்.

பண்ட் கூறுகிறார், 'இரு நாடுகளுக்கிடையிலான உறவில் ஒரு மாற்றம் இருப்பதால், கனடா அரசின் குரல் வரும் நாட்களில் தளரக் கூடும்.' ஆனால் பிரச்சனையின் சாரத்திற்கு வரும் போது, தேர்தல் கணக்குகள் என்ன, லிபரல் கட்சியின் பல்வேறு பிரிவினரும் அவர்களின் பல்வேறு கூட்டணி கட்சியினரும் தேர்தலுக்கு பிறகு எவ்வளவு வலுவாக இருக்கிறார்கள் என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். ஏனென்றால் இந்த நேரத்தில் மார்க் கார்னி தன்முன் உள்ள அனைத்து வாய்ப்புகளையும் திறந்தே வைக்க விரும்புவார் என்றும் கூட்டணி கட்சியினரை முழுமையாக தனிமைப்படுத்த அவர் விரும்ப மாட்டார் என நான் நினைக்கிறேன்.'

கார்னி நிலையை முழுமையாக மாற்றி விடுவார் என கூறுவது கடினம் என்கிறார் பேராசியர் பண்ட். ஆனால் நிச்சயம் அவர்களது பாணி வேறாக இருக்கக்கூடும், அந்த அணுகுமுறை சில பிரச்சனைகளுக்கு தீர்வு காண உதவக்கூடும்,' என்கிறார் அவர்.

### இந்தியாவின் அணுகுமுறை என்னவாக இருக்கும்?

கனடாவுடனான உறவு மோசமானது குறித்த இந்தியாவின் (22ம் பக்கம் பார்க்க)

# கனடாவின் புதிய பிரதமர் இந்தியாவுடன் உறவை மேம்படுத்துவாரா?

கனடாவில் நடைபெறும் அரசியல் நிகழ்வுகள் மீது ஒரு கண் வைத்திருப்பதாக இந்தியாவின் வெளியுறவுச் செய்தித் தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால் அந்த நேரத்தில் தெரிவித்திருந்தார்.

அதே நேரம், இந்தியா-கனடா இடையே வலுவான உறவு இருப்பதாகவும். இந்த உறவுகள் தொடர்ந்து வலுவாக இருக்கும் என்று இந்தியா எதிர்பார்ப்பதாகவும், இந்த திசையில் எந்த நடவடிக்கையும் எடுக்க இந்தியா தயாராக இருக்கும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

### இந்தியா - கனடா உறவில் பதற்றம் ஏற்பட்டது ஏன்?

ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ 2023ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் குற்றம் சாட்டினார். இந்த குற்றச்சாட்டுகளை முழுமையாக நிராகரித்த இந்தியா அவற்றை முட்டாள்தனமானவை என்றும் உள்நோக்கம் கொண்டவை என்றும் விமர்சித்திருந்தது.

இரு நாடுகளும் தூதரக அதிகாரிகளை நாட்டைவிட்டு வெளியேற்றியதுடன், தங்களது குடிமக்களுக்கு பயண ஆலோசனைகளையும் வழங்கின. இந்தியா கனடாவுக்கு அளித்து வந்த விசா சேவையை நிறுத்தி வைத்தது. இந்தியாவில் குற்றங்களுக்காக தேடப்படுபவர்களுக்கு கனடா புகலிடம் அளிப்பதாக இந்தியா கூறியிருந்தது.

இந்த குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கோ, அவர்களை மீண்டும் இந்தியாவுக்கு அழைத்து வருவதற்கோ கனடாவிடமிருந்து எந்த உதவியும் கிடைக்கவில்லை எனவும் இந்தியா தெரிவித்தது. இந்த கசப்புணர்வுக்கு மத்தியில், இந்தியா - கனடா இடையேயான உறவு மிகவும் மோசமான நிலையை எட்டியது.

ஜஸ்டின் ட்ரூடோ பிரதமர் பதவியிலிருந்து விலகிய பின்னர், இந்தியாவுடனான உறவை கனடாவால்

வர்த்தகம் மற்றும் மக்கள் இடையேயான நேர்மறையான உறவுகள் அரசியல் கொந்தளிப்பால் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் இரு நாடுகளுக்கிடையிலான தூதரக உறவுகள் எப்போதும் இல்லாத அளவு மோசமாக இருக்கிறது. இது போன்ற ஒரு சூழலில் கனடா அல்லது கனடாவின் புதிய பிரதமர் உறவுகளை சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உதாரணமாக முதல் கட்டமாக இந்திய தூதரக அதிகாரிகளை பரஸ்பரமாக பணியாற்ற அனுமதிக்க வேண்டும்.'

'ட்ரூடோ வெளியேறுவது ஒட்டு மொத்தமாக ஒரு நல்ல சந்தர்ப்பம். ட்ரூடோ உறவுகளை தனது தனிப்பட்ட பிரச்னையாக எடுத்துக்கொண்டார் என்பது தான், இரு நாடுகளின் மோசமான உறவுகளின் சாராம்சம். எனவே இந்தியாவில் இது ட்ரூடோவின் பிரச்னையாக பார்க்கப்பட்டது, கனடாவின் பிரச்சனையாக அல்ல என்று பிஸாரியா தெரிவிக்கிறார்.

புதுடெல்லியில் உள்ள அப்சர்வர் ரிசர்ச் ஃபவுண்டேசனில், ஆய்வுகள் மற்றும் வெளியுறவுக் கொள்கைத் துறை துணைத் தலைவராக இருக்கிறார் பேராசிரியர் ஹர்ஸ் வி பண்ட். ஜஸ்டின் ட்ரூடோவுக்கு பதிலாக மார்க் கார்னி பிரதமரானது இந்தியாவுக்கு நற்செய்தி என்கிறார் அவர். ட்ரூடோவுடனான விஷயம் தனிப்பட்டதாகி விட்டதாக நினைக்கிறேன். ட்ரூடோவால் உள்ளூர் அரசியலைத் தாண்டி பார்க்க முடியவில்லை என தோன்றுகிறது. மார்க் கார்னியின் கொள்கைகளுக்கும் உள்ளூர் அரசியல் தான் வடிவம் கொடுக்கும். ஆனால் ஒரு அரசோ, தலைமையோ மாறும்போது ஒரு புதிய தொடக்கத்திற்கு வாய்ப்பிருப்பதாக நினைக்கிறேன். இது இந்தியா- கனடா இடையேயும் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இரு தரப்பு உறவுகளை சீரமைப்பதற்கு இரு நாடுகளும் முன்னோக்கி நகர வாய்ப்பு உள்ளது,' என பண்ட் கூறுகிறார்.

தற்போது பிரச்னைகளை எந்த அளவுக்கு இரு

# நீதிமன்ற உத்தரவை மீறி நாடு கடத்தியது ட்ரம்ப் நிர்வாகம்!



200க்கும் மேற்பட்ட வெனிசுலாவைச் சேர்ந்த குற்றக் குழுவின் உறுப்பினர்கள் அமெரிக்காவிலிருந்து எல் சால்வடாரில் உள்ள ஒரு சூப்பர்மேக்ஸ் சிறைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

வெனிசுலா கும்பலான ட்ரென் டி அரகுவாவின் 238 உறுப்பினர்கள் 16 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை காலை மத்திய அமெரிக்க நாட்டிற்கு வந்தடைந்ததாகவும், சர்வதேச எம்எஸ்-13 கும்பலின் 23 உறுப்பினர்களுடன் வந்தடைந்ததாக எல் சால்வடோர் ஜனாதிபதி நயீப் புகேலே சமூக ஊடகங்களில் எழுதினார். அமெரிக்க அரசாங்கமோ அல்லது எல் சால்வடோர் கைதிகளின் விவரங்களை வழங்கவில்லை.

இந்த நாடு கடத்தலைத் தடுக்க அமெரிக்காவின் கூட்டாட்சி நீதிபதியின் உத்தரவை டிரம்ப் நிர்வாகம் மதிக்கவில்லை எனக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. எனினும் நீதிமன்ற உத்தரவு கிடைப்பதற்கு முன்னரே அவர்கள் நாடுகடத்தப்பட்டு விட்டனர் என டிரம்ப் நிர்வாகத்தினர் கூறுகினர்.

பல நூற்றாண்டுகள் பழமையான போர்க் காலச் சட்டத்தைப் பயன்படுத்தி டிரம்பின் நிர்வாகம் இந்த நாடு கடத்தலை மேற்கொண்டு வருகிறது. ஒரு கூட்டாட்சி நீதிபதியின் உத்தரவு கிடைத்தும் விமானம் ஏற்கனவே புறப்பட்டு விட்டது எனக் கூறப்பட்டது.

நீதிபதியின் தீர்ப்பை கேலி செய்து அச்சச்சோ... ரொம்ப லேட் என்று புக்கேல் சமூக ஊடகங்களில் பதிவிட்டார். அவரது பதிவுகளில் ஒன்றோடு இணைக்கப்பட்ட ஒரு காணொளி, கைகள் மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில், விமானங்களில் இருந்து ஆயுதமேந்திய அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்படும் மக்களின் வரிசையைக் காட்டுகிறது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் கூட்டாளியான புக்கேல், கைதிகள் உடனடியாக எல் சால்வடாரின் மோசமான மெகா சிறைச்சாலையான பயங்கரவாத சிறைச்சாலைக்கு (சிகோட்) மாற்றப்பட்டதாக எழுதினார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ எக்ஸ் தளத்தில் புக்கேலுக்கு நன்றி தெரிவித்தார். அவரை எங்கள் பிராந்தியத்தின் வலிமையான பாதுகாப்புத் தலைவர் என்று அழைத்தார்.

இந்த கொடூரமான அரக்கர்கள் பிரித்தெடுக்கப்பட்டு எல் சால்வடாருக்கு கொண்டு செல்லப்பட்டனர், அங்கு அவர்கள் இனி அமெரிக்க மக்களுக்கு எந்த அச்சுறுத்தலையும் ஏற்படுத்த முடியாது வெள்ளை மாளிகையின் பத்திரிகை செயலாளர் கரோலின் லீவிட் கருத்தை வெளியிட்டார்.

ட்ரென் டிஅரகுவா கும்பல் அமெரிக்காவிற்கு எதிராக ஒழுங்கற்ற போரை நடத்தி வருவதாகவும், அதன் உறுப்பினர்களை 1798 ஆம் ஆண்டு அந்நிய எதிரிகள் சட்டத்தின் கீழ் நாடு கடத்துவதாகவும் அறிவிக்கும் ஒரு பிரகடனத்தில் கையெழுத்திட்டதாக டிரம்ப் சனிக்கிழமை அறிவித்தார்.

அன்று மாலை, வாஷிங்டன் டிசியில் உள்ள அமெரிக்க மாவட்ட நீதிபதி ஜேம்ஸ் போஸ்பெர்க், டிரம்பின் பிரகடனத்தால் உள்ளடக்கப்பட்ட நாடு கடத்தல்களை 14 நாட்களுக்கு நிறுத்தி வைக்க உத்தரவிட்டார்.

நாடு கடத்தப்பட்டவர்களுடன் விமானங்கள் ஏற்கனவே புறப்பட்டு விட்டதாக வழக்கறிஞர்கள் அவரிடம் கூறிய பின்னர் நீதிபதி போஸ்பெர்க் விமானங்கள் திரும்பிக் கொண்டு வர வாய்மொழி உத்தரவு பிறப்பித்தார் என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இருப்பினும் அந்த உத்தரவு அவரது எழுத்துப்பூர்வ தீர்ப்பின் ஒரு பகுதியாக இல்லை.

ஞாயிற்றுக்கிழமை காலை 7:25 மணிக்கு வழக்கு ஆவணக் காப்பகத்தில் எழுத்துப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டதாக ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இருப்பினும் குற்றம் சாட்டப்பட்ட கும்பல் உறுப்பினர்களை ஏற்றிச் சென்ற விமானங்கள் அமெரிக்காவிலிருந்து எப்போது புறப்பட்டன என்பது தெளிவாகத் தெரியவில்லை.

அந்த நேரத்தில் இரண்டு விமானங்களும் சர்வதேச கடல் எல்லைக்கு மேல் பறந்து சென்றதால், நீதிபதியின் உத்தரவு செல்லாது என்று அவர்களின் சட்ட ஆலோசகர்கள் தீர்மானித்ததாக டிரம்ப் நிர்வாகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக அரசியல் செய்தி நிறுவனமான ஆக்சியோஸ் தெரிவித்துள்ளது.

நீதிபதியின் தீர்ப்பை எதிர்த்து நீதித்துறை (DOJ) மேல்முறையீடு செய்துள்ளது. டிரம்ப் நிர்வாகத்திற்கு எதிரான வழக்கில் தொடர்புடைய அமெரிக்க சிவில் லிபர்டீஸ் யூனியன் (ACLU), நீதிமன்றத்தின் உத்தரவு மீறப்பட்டிருக்கலாம் என்று கூறியது.

அமெரிக்காவின் சோதனைகள் மற்றும் சமநிலை முறையின் கீழ், அரசு நிறுவனங்கள் ஒரு கூட்டாட்சி நீதிபதியின் தீர்ப்பிற்கு இணங்க வேண்டும் என்று எதிர் பார்க்கப்படுவதால் இந்த வழக்கு அரசியலமைப்பு கேள்விகளை எழுப்புகிறது.

# ஹமாஸிற்கு ஆதரவளித்ததால் விசா ரத்து! அமெரிக்காவில் இருந்து வெளியேறிய இந்திய மாணவி!





பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்ற இந்திய மாணவியின் விசாவை அமெரிக்கா ரத்து செய்தது. இதையடுத்து நாடு கடத்துவதில் இருந்து தப்பிக்க தாமாக முன்வந்து அந்த மாணவி அமெரிக்காவை விட்டு வெளியேறினார்.

அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் இந்திய மாணவி ரஞ்சனி ஸ்ரீனிவாசன் நகர்ப்புற திட்டமிடல் ஆராய்ச்சி படிப்பு படித்து வந்தார். கடந்த ஆண்டு பாலஸ்தீனத்தில் உள்ள ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாகவும் இஸ்ரேலுக்கு எதிராகவும் சிலர் போராட்டம் நடத்தினர். அதில் ரஞ்சனியும் பங்கேற்று யூதர்களுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினார். ஹமாஸ் அமைப்புக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது. இந்நிலையில் மாணவர்கள் பலர் போராட்டம் நடத்தியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாக செயல் பட்ட ரஞ்சனியின் கல்வி விசாவை கடந்த 5ம் தேதி அமெரிக்க குடியேற்றத் துறை ரத்து செய்தது. இந்நிலையில் அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்படுவதற்கு முன்னதாக தாமாகவே முன்வந்து ரஞ்சனி கடந்த 11-ம் தேதி வெளியேறினார்.

அவர் விமான நிலையத்துக்கு வந்து அமெரிக்காவை விட்டு வெளியேறும் காட்சிகள் அடங்கிய வீடியோவை அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத் துறை செயலர் கிறிஸ்டி நோம் வெளியிட்டார். அமெரிக்காவில் சட்ட விரோதமாக தங்கியிருப்பவர்கள் நாட்டை விட்டு தாமாகவே வெளியேற 'கஸ்டம்ஸ் அண்ட் பார்டர் புரடெக்ஷன் ஏஜென்சி' செயலி உள்ளது. அந்த செயலியில் பதிவு செய்து அமெரிக்காவை விட்டு வெளியேறி உள்ளார் ரஞ்சனி.

சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறியவர்களை கை கால்களில் விலங்கிட்டு இராணுவ விமானத்தில் நாடு கடத்தி வருகின்றனர். அதுபோல் இந்தியர்களும் திருப்பி அனுப்பப்பட்டனர். அதில் இருந்து தப்பிக்க மாணவி ரஞ்சனி தாமாக வெளியேறி உள்ளார்.

இது குறித்து உள்நாட்டு பாதுகாப்புத் துறை செயலர் கிறிஸ்டி நோம் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் கூறும் போது அமெரிக்காவில் வாழவும் கல்வி கற்கவும் விசா வழங்குவது பெருமைக்குரிய விஷயம். அதே நேரத்தில் வன்முறை தீவிர வாதத்துக்கு நீங்கள் ஆதரவாக செயல்பட்டால் அந்த உரிமை விசா ரத்து செய்யப்படும். தீவிரவாதத்துக்கு ஆதரவானவர்கள் இந்த நாட்டில் இருக்க முடியாது. தீவிரவாதிகளுக்காக அனுதாபப்படும் கொலம்பியா பல்கலைக்கழக மாணவி நாட்டை விட்டு தாமாக வெளியேறியது மகிழ்ச்சி அளிக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

# தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாண உள்ளூராட்சி தேர்தலில் பெரிய வெற்றியைப் பெறுமா?

தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளிலும் வெற்றி பெற்று நிருவாகங்களை அமைக்கும்.' கடந்த வியாழக்கிழமை (மார்ச் 13) யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்கள் கிளப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது கடற்தொழில், நீர்வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மிகுந்த நம்பிக்கையுடன் கூறினார்.

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிடவிருக்கும் தேசிய மகள் சக்தி வேட்பாளர்களின் கட்டுப்பணத்தை செலுத்துவதற்காக அவர் யாழ்ப்பாணம் தேர்தல் செயலகத்துக்கு சென்றிருந்தார். அவருடன் தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரும் பிரதேச அமைப்பாளர்களுடன் கூட இருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியின் முக்கியமான ஆள் அமைச்சர் சந்திரசேகர் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. பதுளை மாவட்டத்தின் பண்டாரவளையை சேர்ந்தவராக இருந்தாலும், சந்திரசேகரிடம் யாழ்ப்பாணத்தில் அரசியல் விவகாரங்களை மேற்பார்வை செய்து ஒருங்கிணைக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவரே யாழ்ப்பாணம், கிளிநொச்சி நிருவாக மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராகவும் இருக்கிறார். இந்த இரு மாவட்டங்களையும் உள்ளடக்கியதே யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டமாகும். சந்திரசேகர் தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

தேர்தல்களில் போட்டியிடும் சகல அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் குறிப்பாக ஊடகங்களுடன் பேசும் போது வெற்றியில் நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக தெரிகிறது. தேர்தல் வெற்றி மீதான நம்பிக்கை அரசியல்வாதிகளுக்கு சாசுவதமாக பீறியெழும். அது வழமையாக எதிர்பார்க்கப்படுவதே.

நூற்றுக்கணக்கான வாக்குகளைப் பெற இயலாத வேட்பாளர்களும் கூட தேர்தலுக்கு முன்னதாக தங்களுக்கு வெற்றி நிச்சயம் என்று தம்பட்டம் அடிப்பார்கள். யதார்த்தமாக நோக்கும் போது தேர்தல்கள் இடம் பெறுவதற்கு முன்னதாக தாங்கள் வெற்றி பெற மாட்டார்கள் என்று எந்த வேட்பாளரும் கூறுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. தேர்தலில் தோல்வியடைந்த பின்னரும் கூட பலர் தங்களுடன் போட்டியிட்டவர்கள் வாக்கு மோசடிகளில் ஈடுபட்டதாக அல்லது வாக்குகள் எண்ணும் செயன்முறைகளில் தலையீடு செய்ததாக குற்றஞ் சாட்டி ஆர்ப்பாட்டம் செய்வார்கள்.

இந்த பின்புலத்தில் பார்க்கும்போது, ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி. )தலைமையிலான தேசிய மக்கள் சக்தி சந்திரசேகர் எதிர்வு கூறுவதைப் போன்று உண்மையில் பெரிய வெற்றியை பெறுமா அல்லது அவரது நம்பிக்கை நடைமுறைக்கு ஒத்துவராதா என்ற கேள்வி எழுகிறது. ஒரு வருடத்துக்கு முன்னர் சந்திரசேகர் இவ்வாறு கூறியிருந்தால், அவர் கேலி செய்யப்பட்டிருப்பார். தேசிய மக்கள் சக்தி போன்ற சிங்கள ஆதிக்கத்திலான ஒரு தேசியக்கட்சி யாழ்ப்பாணத்தில் சகல உள்ளூராட்சி சபைகளையும் கைப்பற்றக்கூடியதாக இருக்கும் என்பது நம்பமுடியாதது. ஆனால் கடந்த வருடத்தைய பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் நிலைவரத்தை முற்றாக மாற்றி விட்டது.

குறிப்பிடத்தக்க ஒரு அரசியல் திருப்பமாக யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தி பெரும்பாலான வாக்குகளைப் பெற்றது. போனஸ் ஆசனம் ஒன்றுக்கும் அது உரித்துடையதாக இருந்தது. அதனால் தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் மூன்று பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றது. அதற்கு அங்கு 80, 830 ( 24. 85 சதவீதம் ) வாக்குகள் கிடைத்தன. இலங்கை தமிழரசு கட்சி ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் போன்ற தமிழ்த் தேசியவாத கட்சிகளை விடவும் தேசிய மக்கள் சக்தி கூடுதல் வாக்குகளைப் பெற்றது. இந்த கட்சிகளுக்கு முறையே 63, 327 ( 19.47 சதவீதம்), 22.513(6.92 சதவீதம் ). 27. 986 (8.60 சதவீதம்) வாக்குகள் மாத்திரமே கிடைத்தன.



### தேசிய மக்கள் சக்தியின் 3 எம்.பிக்கள்

யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மூன்று தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களில் மிகவும் கூடுதலான வாக்குகள் கருணாநந்தன் இளங்குமரனுக்கே கிடைத்தன. அவருக்கு 32, 102 விருப்பு வாக்குகள் கிடைத்தன. தென்மராட்சி பிராந்தியத்தின் உசனை சொந்த இடமாகக் கொண்ட இலங்கை மின்சார சபையின் முன்னாள் ஊழியரான அவர் தற்போது யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் வசிக்கிறார். ஐந்து வருடக்களாக தேசிய மகள் சக்தியின் முழுநேரச் செயற்பாட்டாளராக இருந்து வரும் இளங்குமரன் பாராளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாணத்தில் அந்த கட்சியின் பிரதான வேட்பாளராக களமிறங்கினார்.

யாழ்ம்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியில் இருந்து இரண்டாவதாக தெரிவான வைத்தியர் சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜாவுக்கு 20, 430 விருப்பு வாக்குகள் கிடைத்தன. முப்பது வருடங்களுக்கும் கூடுதலான காலமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றிய அவர் அண்மையில் பிரதிப் பணிப்பாளராக ஓய்வு பெற்றார்.

தேசிய மக்கள் சக்தியின் மூன்றாவது பாராளுமன்ற உறுப்பினரான ஜெயச் சந்திரமூர்த்தி ரஜீவனுக்கு17.579 விருப்பு வாக்குகள் கிடைத்தன யாழ்ப்பாணத்தில் அவர் நன்கு பெயர்பெற்ற தனியார் கல்வி நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார். ரஜீவன் அண்மைக்காலம் வரை இலங்கை தமிழரசு கட்சியின் தீவிர ஆதரவாளராக இருந்தவர். கடந்த வருடம் ஜனாதிபதி தேர்தலுக்கு சில மாதங்கள் முன்னதாக தனது அரசியல் விசுவாசத்தை மாற்றிக்கொண்ட அவர் அநுரா குமாரவுக்காக பிரசாரங்களில் ஈடுபட்டார்.

### சந்திரசேகர்

யாழ்ப்பணத்தில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியின் சிற்பி அதன் மாவட்ட அமைப்பாளரான இராமலிங்கம் சந்திரசேகரேயாவார். அவர் ஜே.வி.பி.யின் மத்தியகுழுவிலும் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுக் குழுவிலும் உறுப்பினராக இருக்கிறார். ஜே.வி.பி.யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பிரான அவர் இந்த தடவை தேசிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் உறுப்பினராக நியமிக்கப்பட்டு அநுராகுமார திசாநாயக்கவின் அமைச்சரவையில் கடற்தொழில் அமைச்சராக இணைத்துக் கொள்ளப்பட்டார்.

ஜே.வி.பி.யின் அமைப்பாளர் என்ற வகையில் சந்திரசேகர் யாழ்ப்பாணத்தில் பல வருடக்கள் பணியாற்றியிருக்கிறார். தமிழ்ப் பத்திரிகைகள், தொலைக்காட்சி சேவைகள் மற்றும் செல்வாக்குமிக்க யூரியூபர்களுடன் நெருக்கமான உறவை வளர்த்துக் கொண்ட அவர் பல நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். விவசாயிகள், மீனவர்கள், மருத்துவத்துறை அதிகாரிகள், பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் போன்ற யாழ்ப்பாணச் சமூகத்தின் பல பிரிவினரையும் அணி திரட்டிய அவர் தேசிய மக்கள் சக்தியின் அணிகளுக்குள் அவர்களை இணைத்துக் கொண்டார். யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை சந்திரசேகர் பரவலாக்கினார் என்பது முக்கியமாக கவனிக்கத்தக்கது. அவர்களில் இலட்சிய நோக்குடன் கூடிய சில படித்த இளைஞர்களும் அடங்குவர்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கான தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் பட்டியலை அநுரகுமார, பிமல் இரத்நாயக்க, விஜித ஹேரத் ஆகியோருடன் ஆலோசனை கலந்து சந்திரசேகர் இறுதி செய்தார். முன்னதாக, 2024 செப்டெம்பர் ஜனாதிபதி தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அநுரா குமாரவுக்கு சுமார் 27.000 வாக்குகள் மாத்திரமே கிடைத்தது. ஆனால் பாராளுமன்ற தேர்தலில் அந்த எண்ணிக்கை சுமார் மூன்று மடங்காக அதிகரித்தது.

இந்த வாக்குகள் எங்கிருந்து வந்தன? தமிழரசு கட்சி, தமிழ் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி போன்ற அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களினால் பெறப்பட்ட வாக்குகளில் காணப்பட்ட வீழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது தேசிய மக்கள் சக்திக்கு இந்த கட்சிகள் சகலதிலும் இருந்தும் புதிய வாக்காளர்களிடம் இருந்தும் வாக்குகள் வந்து சேர்ந்தன என்று தோன்றியது.

தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த வாக்குகளில் ஒரு கணிசமானவை பெண்களினாலும் இளைஞர்களினாலும் போடப்பட்டவையாகும்.

யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த மிகவும் கூடுதலான தபால்மூல வாக்குகள் அரசாங்க ஊழியர்கள் மத்தியில் அதற்கு இருக்கும் ஆதரவை வெளிக்காட்டின. மேலும், யாழ்ப்பாணத்தில் உள்ள 11 தேர்தல் தொகுதிகளில் எட்டு தொகுதிகளில் தேசிய மக்கள் சக்தி முதலாவதாக வந்தது. நல்லூர், கோப்பாய், மானிப்பாய், காங்கேசன்துறை, உடுப்பிட்டி, வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை ஆகிய தொகுதிகளில் ` திசைகாட்டி ` முதலாவதாக வந்தது. ஏனைய கட்சிகளினால் மூன்று தொகுதிகளில் மாத்திரமே வெற்றி பெறக்கூடியதாக இருந்தது. ஊர்காவற்துறை (ஈ.பி.டி.பி.), கிளிநொச்சி (தமிழரசு கட்சி ), சாவகச்சேரி (சுயேச்சைக்குழு 17) ஆகியவையே அந்த தொகுதிகளாகும்.

கட்டுரையாளர்:-
மூத்த ஊடகவியலாளர்
- DBS ஜெயராஜ்-



### அநுரா குமார திஸநாயக்க

அநுரா குமார திசாநாயக்க 2024 செப்டெம்பரில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். அவர் தேர்தலில் முதலாவதாக வந்தார், ஆனால் 42.31 சதவீதமான வாக்குகளையே பெறக்கூடியதாக இருந்தது. இரண்டாவதாக வந்த சஜித் பிரேமதாசவுக்கு 32.76 சதவீதமான வாக்குகள் கிடைத்தன. இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் வரலாற்றில் வெற்றி பெற்ற வேட்பாளரினால் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற முடியாத சந்தர்ப்பமாக 2024 ஜனாதிபதி தேர்தல் அமைந்தது. அதனால் ஏனைய வாக்காளர்களின் வாக்குகள் நீக்கப்பட்டு இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கையில் இரண்டாவது விருப்பு வாக்கு கணக்கில் எடுக்கப்பட்டது. இதில் அநுரா 55.89 சதவீதமான வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக தெரிவானார்.

அநுராவின் ஜனாதிபதி தேர்தல் செயற்பாடு தடு மாற்றமானதாக இருந்த போதிலும், பிறகு ஒரு அரசியல் அதிசயம் நிகழ்ந்தது. அநுரா தனது கட்சியின் பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்களை தலைமை தாங்கி முன்னெடுத்தார். ஜனாதிபதியாக அவர் நாடு பூராவும் பயணம் செய்து தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களுக்காக வாக்குக் கேட்டார். அலை திரும்பியது. நாட்டை ஒரு அநுரா அலை சூழ்ந்து கொண்டது. பாராளுமன்றத்தில் 159 ஆசனங்களை கைப்பற்றி தேசிய மக்கள் சக்தி சாதனை படைத்தது.

### அநுரா அலை

தமிழ்த் தேசியவாத கோட்டையான யாழ்ப்பாணம் அநுரா அலையின் கீழ் சென்றது. 25 சதவீதமான வாக்குகளைப் பெற்ற தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாணத்தில் ஆறு ஆசனங்களில் மூன்று ஆசனங்கள் கிடைத்தன. தேர்தல் முடிவுகள் தேசிய மக்கள் சக்தியைக் குதூகலிக்க வைத்தன. யாழ்ப்பாண வெற்றி ஒரு மகுடச் சாதனை என்று பல தலைவர்கள் வர்ணித்தனர். தேசிய மக்கள் சக்தியின் (27ம் பக்கம் பார்க்க)

# தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாண உள்ளூராட்சி தேர்தலில் பெரிய வெற்றியைப் பெறுமா?

(26ம் பக்கத் தொடர்ச்சி) வெற்றிக் கிரீடத்தில் யாழ்ப்பாண முடிவுகள் ஒரு அணிகலனாக அமைந்தன. அதை யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியவாதத்தின் முடிவு என்றும் கூட சில அவதானிகள் எதிர்வு கூறினர்.

இந்த பின்னணியிலேயே, யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தியினால் மகத்தான வெற்றியைப் பெற முடியும் என்று அமைச்சர் சந்திரசேகர் அதிவிசேடமான நம்பிக்கையைக் கொண்டவராக இருக்கிறார். யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு மாநகரசபை, மூன்று நகரசபைகள் மற்றும் பதின்மூன்று பிரதேச சபைகள் இருக்கின்றன. எல்லாமாக பதினேழு உள்ளூராட்சி சபைகள். பாராளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பத்து தொகுதிகளில் எட்டு தொகுதிகளில் தேசிய மக்கள் சக்தி முதலாவதாக வந்ததால், உள்ளூராட்சி தேர்தல்களில் ஒரு முற்றுமுழுதான வெற்றி சாத்தியம் என்று தோன்றலாம்.

தேசிய மக்கள் சக்திக்கு நெருக்கமான தகவலறிந்த வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் கருத்துக்களின் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் அந்த கட்சியின் மக்கள் செல்வாக்கு குறையவில்லை என்று தெரிகிறது. அதற்கு ஆதரவு பெருகியிருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். தேசிய மக்கள் சக்தி தற்போது ஆளும் கட்சியாக இருப்பதால், யாழ்ப்பாண மக்கள் அதிகாரத்தில் உள்ள கட்சியுடன் சேர்ந்து கொண்டால் அலுவல்களைச் செய்வித்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் அதற்கு வாக்களிக்க விரும்புவர். அரசாங்கத்தின் புதிய பட்ஜெட் வடக்கிற்கு ஓரளவு தாராளமாக நிதி ஒதுக்கீடுகளைச் செய்திருக்கிறது. நடைமுறைச் சாத்தியமாகச் சிந்திக்கும் யாழ்ப்பாண தமிழர்கள் தேசிய மக்கள் சக்தியின் வண்டிலில் தொங்கிக் கொண்டு போவது சிறந்தது என்று விளங்கிக் கொள்வர்.

### வல்வெட்டித்துறை

அநுரா அலை யாழ்ப்பாணத்தில் தணிந்து விடவில்லை என்று தேசிய மக்கள் சக்தி வட்டாரங்கள் உணருகின்றன. அநுரா அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு செய்த விஜயம் அதற்கு சான்று என்று அவர்கள் கூறுகிறார்கள். வல்வெட்டித்துறையிலும் மிருசுவிலிலும் இடம் பெற்ற வெற்றிகரமான பொதுக் கூட்டங்களை அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். சாதாரண மக்கள் அநுரா மீது தன்னியல்பாகவே அன்பை வெளிப்படுத்தினார்கள். வல்வெட்டித்துறையில் நடைபெற்ற வெற்றிகரமான கூட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு என்று இந்த தேசிய மக்கள் சக்தி வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

வல்வெட்டித்துறை விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் அந்த இயக்கத்தின் முக்கிய தலைவர்களின் சொந்த ஊராகும். ஆயுதமேந்திய தமிழ்த் தீவிரவாதத்தின் தொட்டில் என்று வல்வெட்டித்துறை கருதப்படுகிறது. அந்த ஊரில் தேசிய மக்கள் சக்தியினால் வெற்றிகரமான ஒரு கூட்டத்தை நடத்தக் கூடியதாக இருந்தமை உண்மையில் அதன் செல்வாக்கு வளருவதன் ஒரு அறிகுறியாகும் என்று இந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

### உறுதிமொழியும் செயற்பாடும்

தேசிய மக்கள் சக்திக்குள் நம்பிக்கை நிலவுகின்ற போதிலும், உள்ளூராட்சி தேர்தல்களில் யாழ்ப்பாண மக்களின் போதுமான ஆதரவை கட்சியினால் பெறக்கூடியதாக இருக்குமா என்று சந்தேகமும் இருக்கிறது. உறுதிமொழிக்கும் செயற்பாட்டுக்கும் இடையிலான வெளியே இதற்கு பிரதான காரணமாகும். பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்களின் போது பொதுவில் தேசிய மக்கள் சக்தியும் குறிப்



பாக அநுராவும் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கினார்கள். பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும், சகல தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படுவார்கள், காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சினை கையாளப்படும். இராணுவத்தினர் கையகப்படுத்திய காணிகள் அவற்றுக்கு உரித்தானவர்களிடம் மீண்டும் கையளிக்கப்படும், பாதுகாப்பு படைகளின் முகாம்களும் வீதிச் சோதனை நிலையங்களும் குறைக்கப்படும், உயர்பாதுகாப்பு வலயங்கள் என்று பிரகடனப்படுத்தப்பட்ட இடங்களும் வீதிகளும் குறைக்கப்படும் என்றெல்லாம் வாக்குறுதிகள் அள்ளி வீசப்பட்டன.

இவற்றில் எந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை. ஒரு சில வீதிச் சோதனை நிலையங்களும் முகாம்களும் மூடப்பட்டன. ஒரு சில வீதிகள் பொதுமக்களின் பாவனைக்காக மீண்டும் திறந்து விடப்பட்டன. முக்கியமான எந்த காரியமும் இடம் பெறவில்லை. அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சினை, காணிகளை திருப்பிக் கையளித்தல் போன்ற விவகாரங்களில் நடைமுறைச் சாத்தியமான முறையில் முன்னோக்கிய செயற்பாடு எதையும் காணக்கூடியதாக இல்லை. அரசியல் கைதிகள் விவகாரத்தைப் பொறுத்தவரை, நீதியமைச்சர் இப்போது அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று கூறுகிறார். பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படமாட்டாது என்றும் அரசாங்கம் கூறுகிறது.

இன்னொரு கசப்பான விடயம் அதிகாரப் பரவலாக்கல் மற்றும் புதிய அரசியலமைப்பு தொடர்பானதாகும். புதிய அரசியலமைப்பு ஒன்று கொண்டு வரப்படும் வரை மாகாண சபைகள் தொடர்ந்து இருக்கும் என்று தேசிய மக்கள் சக்தி கூறுகின்றது. ஆனால், புதிய அரசியலமைப்பைக் கொண்டு வரும் திட்டம் இப்போது பின் போடப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி திசாநாயக்க இந்தியாவுக்கு மேற்கொண்ட முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தின் இறுதியில் இரு நாடுகளும் வெளியிட்ட கூட்டறிக்கையில் அதிகாரப் பரவலாக்கம் பற்றியோ அல்லது மாகாணசபைகள் பற்றியோ எந்த குறிப்பும் இடம் பெறாதிருப்பதை உறுதி செய்யக் கூடியதாக அவரால் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நம்பவைக்க இயலுமாக இருந்தது.

### இந்திய மீனவர்களின் அத்துமீறல்

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களில் அத்துமீறில் தொடர்ந்து உறுத்திக் கொண்டிருக்கும் ஒரு முக்கிய பிரச்சினையாகும். இந்திய மீனவர்களின் படகுகள் வருவதையும் அவர்கள் இழுவைப் படகுகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதையும் தடுத்து நிறுத்துவதாக 2024 தேர்தல் பிரசாரங்களின் போது சந்திரசேகரும் அநுரா குமார திசாநாயக்கவும் விசேடமாக வாக்குறுதிகளை வழங்கினார்கள்.

ஆனால், இதுவரையில் அர்த்தமுடைய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இந்திய படகுகள் பெரும் எண்ணிக்கையில் வந்து வடபகுதி கடலில் தொடர்ந்து இழுவைப்படகுகள் மூலமாக மீன்பிடியில் ஈடுபடுகின்றன. இந்திய மீனவர்களை இடைக்கிடை கைது செய்து அவர்களின் படகுகளையும் கைப்பற்றும் நடவடிக்கைகளை இலங்கை கடற்படை தொடர்ந்து மேற்கொள்கிறது. ஆனால் சில நாட்களுக்கு பிறகு மனிதாபிமான அடிப்படையில் அந்த மீனவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள். 'சட்டவிரோத மீன்பிடியை முடிவுக்கு கொண்டு வருவதற்கு உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்திய இழுவைப்படகுகள் மற்றும் சட்டவிரோத மீன்பிடி தொடர்பாக வடபகுதி மீனவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அதிருப்தி வளர்ந்து வருவது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு ஒரு பிரச்சினையாகலாம். வடபகுதி மீனவர் சமூகத்தைச் சேர்ந்த பெருமளவானோர் பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள். கரையோரப் பகுதி மக்களிடம் தமிழ் அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களன வாக்குக் கேட்கச் சென்ற போது அவர்களுக்கு வாக்களிக்கப் போவதில்லை என்று அந்த மக்கள் முகத்துக்கு நேரே கூறினார்கள்.'

நாங்கள் இந்த தடவை ஜே.வி.பி.க்கே வாக்களிக்கப் போகிறோம். ஏனென்றால் இந்திய மீனவர்களின் அத்துமீறலை முடிவுக்கு கொண்டு வரக்கூடிய ஒரே கட்சி ஜே வி.பி.யே என்று நாம் நம்புகிறோம்' என்று அவர்கள் கூறினார்கள். அவர்களில் பலர் இப்போது ஏமாற்றமடைந்து விட்டார்கள். கதையே தவிர காரியம் எதுவும் இல்லாத ஒரு கட்சியாக ஜே வி.பி. இப்போது பலராலும் நோக்கப்படுகிறது.

இது தவிர, யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆற்றல் மற்றும் நடத்தைகள் தொடர்பில் மக்கள் மத்தியில் பெரும் ஏமாற்றம் காணப்படுகிறது. யாழ்ப்பாண வெற்றியை தங்களது கிரீடத்தில் உள்ள அணிகலன் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் கொக்கரித்துக் கொண்டு திரிகிறார்கள். ஆனால், யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவான மூவரும் செயற்திறன் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பாராளுமன்றத்தில் பேசுவது அபூர்வம். அவ்வாறு அபூர்வமாகப் பேசுகின்ற சந்தர்ப்பங்களிலும் கூட மக்களைப் பாதிக்கின்ற பிரச்சினைகளைப் பற்றி எதையும் கூறுவதை காண முடியவில்லை.

அந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களையும் அவர்களுக்கு வாக்களித்த மக்களால் சந்திக்க முடியாமல் இருக்கிறது. அவர்களிடம் மக்கள் பிரச்சினை கிளப்பும் போது இந்த விவகாரத்தில் எமது கட்சியின் தலைமைத்துவம் மாத்திரமே தீர்மானம் எடுக்க முடியும்' என்று ஒரு பதிலை கைவசம் வைத்திருக்கிறார்கள்.

இந்த நிகழ்வுப் போக்குகள் எல்லாம் யாழ்ப்பாணத்தில் திசைகாட்டிக்கு வாக்களித்த மக்கள் சலிப்படைந்து போகிறார்கள் என்பதை வெளிக்காட்டுகின்றன. ஆனால், இந்த அதிருப்திப் போக்கு ஒரு தொடக்கமா இல்லையா என்பது தெளிவாகத் தெரியவில்லை. அது ஒரு தொடக்கமாக இருந்தால் வாக்களிப்பில் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக மக்கள் பெருமளவில் திரும்பவதற்கு வாய்ப்பு குறைவு. ஆனால் இந்த அதிருப்தி ஆழமானதாக வளருமானால் யாழ்ப்பாணத்தில் உள்ள பதினேழு உள்ளூராட்சி சபைகளையும் கைப்பற்றும் அமைச்சர் (20ம் பக்கம் பார்க்க)

# அநுர அரசுக்கு ஏப்ரல் 21 வரை கால அவகாசம்! வழங்கியுள்ள பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை?



இலங்கையிலுள்ள அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்கும் நோக்கிலேயே தற்போதுள்ள ஆட்சியாளர்களை ஆட்சி பீடத்துக்கு ஏற்றினோம். ஆனால் அரசியல் கலாசாரத்தில் மாற்றம் ஏற்படுத்தாமலும் எமக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமலும் இருந்து வந்தால் நாம் மீண்டும் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்படுமென கொழும்பு மறை மாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தற்போதுள்ள அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்தார்.

அத்துடன் லசந்த விக்ரமதுங்க கொலை, பிரதீப் எக்னெலியகொட காணாமல் ஆக்கப்பட்டமை, கீய்த் நொயர் தாக்கப்பட்டமை உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பிலும், உயிர்த்த ஞாயிறு தின குண்டு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதற்கு தற்போது ஆட்சிபீடம் ஏறியுள்ள அரசாங்கம் இனியும் காலம் தாழ்த்தக்கூடாது.

இந்த விடயங்கள் தொடர்பான எந்தவொரு விடயத்தையும் இரகசியமாக வைத்துக்கொள்ளாமல், எவருடனும் 'டீல்' போடாமல் உண்மையை வெளியே கொண்டு வருவதற்கு விரைந்து செயற்படுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டார். எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதியன்றுடன் 6ஆவது ஆண்டு நிறைவு தினத்துக்கு முன்னதாக உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை பெற்று பெற்றுக் கொடுப்பதாக கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் நாம் வீதியில் இறங்குவதற்கு பின்னிற்க மாட்டோம் எனவும் பேராயர் குறிப்பிட்டார்.

கொழும்பில் அமைந்துள்ள பேராயர் இல்லத்தில் 15 மார்ச் 2025 சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் பேசிய அவர், அரசாங்கம் நீதியை உறுதி செய்யத் தவறினால், வீதிகளில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட வேண்டியிருக்கும் என்றும் எச்சரித்தார்.

இந்த நாட்டை ஆட்சி செய்த தலைவர்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு நீதி வழங்குவதாக உறுதியளித்தனர். எனினும், அந்த வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

அந்த நிலைமையை மாற்ற இந்த அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வருவதை நாங்கள் ஆதரித்தோம், ஆனால் நிலைமை மாறாமல் இருந்தால், புதிய அரசாங்கத்திற்கான எங்கள் நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கும்.

அன்று கட்டுவாபிட்டி தேவாலயத்தில் ஜனாதிபதி அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறு நாங்கள் இன்னும் அரசாங்கத்தை வலியுறுத்தி வருகிறோம். 6ஆவது ஆண்டு நிறைவுக்கு முன்னர் அரசாங்கத்திடமிருந்து நியாயமான மற்றும் உறுதியான பதில் கிடைத்தால், நாங்கள் அதைப் பாராட்டுவோம். இல்லையெனில் மீண்டும் வீதியில் இறங்குவதைத் தவிர வேறு வழி யில்லை என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

## அமைச்சரவைப் பேச்சாளர் கருத்து

பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் ஆதங்கம் நியாயமானது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் விரைவில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் 18 மார்ச் 2025 செவ் வாய்க்கிழமை ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் அறிவிப்பினை எதிர்மறையான ஒரு விடயமாக நாம் பார்க்கவில்லை. அவரால் தெரிவிக்கப்படும் விடயங்கள் நியாயமானவையாகும். எந்தவொரு பிரச்சினையின் போதும் பாதிக்கப்பட்ட சமூகத்தினர் மனதளவில் பாரிய துயரத்தை எதிர்கொள்ள நேரிடும்.

அந்த சமூகத்துடன் தொடர்புடையவர்களுக்கு அது பாரிய கவலையை அளிக்கும். அந்த வகையிலேயே கத்தோலிக்க மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் பேராரயரின் அதிருப்தியும் கவலையும் ஏற்றுக் கொள்ளக் கூடியவையாகும். அரசாங்கம் என்ற ரீதியில் எமக்கும் அதற்கான பொறுப்பு காணப்படுகிறது. எனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த விசாரணைகளின் முன்னேற்றத்தைக் கூறுவதை விட, அதன் அடிப்படையில் எடுக்கப்படவுள்ள சட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை விரைவில் அனைவராலும் அறிந்து கொள்ள முடியும்.

கொலையாளிகளே இதனைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு சாட்சிகளை அழித்த சூழலிலேயே நாம் ஆட்சியமைத்திருக்கின்றோம். எனவே மீண்டும் அவற்றை முன்னெடுப்பது இலகுவான விடயமல்ல. எவ்வாறிருப்பினும் இந்த கொடூர சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் நிச்சயம் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றார்.

ESTD - 1996

# நயினாதீவு கனடியர் அபிவிருத்திச் சங்கம்

## NAINATIVU CANADIAN DEVELOPMENT SOCIETY

Ontario not for profit corporation No: 1284680
Date of Issue of Letters, Patent: March 1996
80 Nashdene Road, C-70, Toronto Ontario. M1V 5E4

## நயினாதீவு கனடியர் அபிவிருத்திச் சங்கம் விடுக்கும்

**2025ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்ட அறிவித்தல்!!!**

**காலம்:** 22-March-2025 **மாலை:** 6:30 **இடம்:** தீபம் கலைக்கூடம்

2024ஆம் ஆண்டிற்கான கணக்கறிக்கை சமர்ப்பித்தல், 2025, 2026 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபைத் தெரிவும், சங்கத்தின் எதிர்கால நலன் கருதிய சிறப்பு சிந்தனைகளோடு கூடிய நல் ஆலோசனை ஆண்டு பொதுக்கூட்டம்.

**பின்குறிப்பு:**
சங்கத்தின் 2024 ஆண்டுக்கான அங்கத்துவ பொது சந்தா ($100) பணத்தினை பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக செலுத்தி தங்களது அங்கத்துவத்தினை உறுதிப்படுத்தி (2025)ம் ஆண்டுக்கான பொதுக்கூட்டத்திற்கு சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

"ஊருக்கு பலமாய் உறவுகளாய் இணைவோம்.....வாரீர்....."

**இங்கனம்:**
நிர்வாகசபை
நயினாதீவு கனடியர் அபிவிருத்திச் சங்கம்.

**தொடர்புகளுக்கு:**

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் | பத்திராதிபர் |
|---|---|---|---|
| ப. சுதாகரராசா | க. ந. ஜெயசிவதாசன் | மு. ரவீந்திரன் | சௌ. திருமாறன் |
| 416.823.0983 | 416.825.8083 | 416.579.4502 | 416.317.7544 |


VIBRANT HOSPITALIT GROUP
தமிலோசை வழங்கும்
Canada Tamil Music Festival
இசைக் குயில் 2025
25 YEARS
APRIL
SATURDAY
12
2025
3 PM ONWARDS
ADMIT ONE
TICKET $20
VIP TICKETS
DURHAM CONVENTION CENTER
630 BRCK CRESCENT AJAX, ON L1Z 1C9 | 416 556 3219
Announcers
MUSICAL BAND
NATCHATHRAA MUSIC GROUP







# யாழ்ப்பாணத்தில் பிறந்த தமிழ்க் கனடியர் ஹரி ஆனந்தசங்கரி கனடாவின் நீதியமைச்சராகவும் சட்டமாஅதிபராகவும் பதவியேற்றார்

கனடாவின் லிபரல் கட்சியின் புதிய தலைவரான மார்க் கார்னி அந்நாட்டின் 24 வது பிரதமராக 2025 மார்ச் 14 ஆம் திகதி பதவியேற்றார்.

1965 மார்ச் 16 ஆம் திகதி பிறந்த பிரபல்யமான பொருளாதார நிபுணர் கனடா வங்கியின் எடடாவது ஆளுநராக ஐந்து வருடங்களும் ( 2008 – 2013) இங்கிலாந்து வங்கியின் 120வது ஆளுநராக ஏழு வருடங்களும் ( 2013 – 2020) பணியாற்றினார்.


அமெரிக்காவின் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் 1988ஆம் ஆண்டில் பொருளாதாரத் துறையில் பட்டம் பெற்ற அவர் 1995 ஆம் ஆண்டில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார்.

ஜஸ்ரின் ட்ரூடோ பதவி விலகியதை அடுத்து பிரதமராக நியமிக்கப்பட்ட மார்க் கார்னி 24 பேரைக் கொண்ட அமைச்சரவையை நியமித்தார். அவர்களில் 13 பேர் ஆண்கள், 11 பேர் பெண்கள்.

ட்ரூடோவின் அமைச்சரவையில் இருந்த மையக் குழுவினரை தொடர்ந்தும் வைத்திருக்கும் கார்னி 18 பேரை நீக்கினார். கார்னியும் அவரது முதலாவது அமைச்சரவையும் மார்ச் 14 ஆம் திகதி ஒட்டாவாவில் றிடியூ மண்டபத்தில் இடம் பெற்ற வைபவத்தில் பதவியேற்றுக் கொண்டனர்.

பதவியேற்றுக் கொண்ட புதிய அமைச்சர்களில் இலங்கையின் முதுபெரும் தமிழ் அரசியல் தலைவரான தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீரசிங்கம் ஆனந்தசங்கரியின் மகன் கரி ஆனந்தசங்கரியும் ஒருவர். அவர் நீதியமைச்சராகவும் கனடாவின் சட்டமா அதிபராகவும் பழங்குடியினர் உறவுகள் மற்றும் வடக்கு விவகாரங்கள் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கனடாவின் நீதியமைச்சர் சட்டமா அதிபர் பதவியில் இருப்பவர் அமை



ச்சரவையில் இரட்டைப் பாத்திரத்தைக் கொண்டிருக்கிறார். நீதியமைச்சர் என்ற வகையில் அவர் நீதி திணைக்களத்துக்கான முடியாட்சிப் பொறுப்பைக் கொண்டவராகவும் சட்டமா அதிபர் என்ற வகையில் முடியாட்சியின் சார்பில் வழக்குத் தொடுப்பவராகவும் கனடா அரசாங்கத்தின் பிரதம சட்ட ஆலோசகராகவும் பணியாற்றுவார். மதிப்புமிக்க இந்த இரட்டைப் பாத்திர அமைச்சர் பதவியை முன்னர் வகித்தவர்களில் பலர் பின்னர் பிரதமராகவும் வந்தனர். டேவிட் தோம்சன், பியரி ட்ரூடோ, ஜோன் ரேர்ணர், கிம் காம்பல் மற்றும் கிரேசியன் ஆகியோர் அவர்களில் சிலர்.

முன்னதாக ஜஸ்ரின் ட்ரூடோவின் அமைச்சரவையில் கரி ஆனந்த சங்கரி பழங்குடியினர் உறவுகள் மற்றும் வடக்கு விவகார அமைச்சராக இருந்தவர். வடக்கு விவகார அமைச்சு கனடாவின் வடபிராந்தியத்தின் பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்துக்கு பொறுப்பானதாகும். 2023 ஆம் ஆண்டில் ஜஸ்ரின் ட்ரூடோவினால் முதன் முதலாக அமைச்சராக நியமிக்கப்பட்டபோது கரி ஆனந்தசங்கரி கனடாவின் அமைச்சரவையில் முதலாவது இலங்கைத் தமிழ் உறுப்பினர் என்ற பெருமையைத் தனதாக்கி வரலாறு படைத்தார்.

1983ஆம் ஆண்டில் ஒரு பத்து வயது அகதியாக கனடாவுக்கு வந்த கரி இன்று அந்த நாட்டின் அமைச்சரவையில் ஒரு உயர்மட்ட அமைச்சர். இது ஒரு குடியேற்ற வாசியின் முதன்மை வாய்ந்த வெற்றிக் கதையாகும்.

தனது வேர்களைப் பற்றி பிரக்ஞை கொண்டவராகவும் இலங்கையில் உள்ள தனது மக்களின் துன்பங்களைப் பற்றி அக்கறை கொண்டவராகவும் இருப்பது கரியை பொறுத்தவரை மிகவும் பாராட்டத் தக்க ஒரு குணாதிசயமாகும். அவர் வெளிப்படையான தமிழ்த் தேசியவாத உணர்வுகளைக் கொண்ட ஒரு தமிழ்க் கனடியன்.

தனது மாணவ நாட்களில் இருந்து அரசியலில் ஆர்வம் கொண்டிருந்த கரி கனடாவின் லிபரல் கட்சியில் இணைந்தார். புதிதாக உருவாக்கப் பட்ட ஸ்கார்பரோ – றூஜ் பார்க் தொகுதியில் போட்டியிடுவதற்கு கட்சியின் நியமனத்தை அவர் கோரினார்.

ஸ்கார்பரோவின் கிழக்குப்பகுதியில் இருக்கும் இந்த தொகுதியின் சனத்தொகையில் சுமார் 15 சதவீதமானவர்கள் தமிழ்பேசும் மக்கள். 2015 பாராளுமன்ற தேர்தலில் ஸ்கார்பரோ – றூஜ் பார்க்கிற்கான லிபரல் கட்சியின் வேட்பாளராக கரி போட்டியிட்டார். 29, 913 (60.24 சதவீதம்) வாக்குகளைப் பெற்றுஅவர் வெற்றியடைந்தார். மீண்டும் 2019 தேர்தலில் அதே தொகுதியில் 31, 360 ( 62.2 சதவீதம்)வாக்குகளைப் பெற்று அவர் வெற்றி பெற்றார். 2021 தேர்தலில் மூன்றாவது தடவையாகவும் போட்டியிட்டு 28,102 (62.8 சதவீதம் )வாக்குகளை பெற்று வெற்றியடைந்தார் கரி ஆனந்தசங்கரி ஒரு சட்டத்தரணியான ஹரிணி சிவலிங்கத்தை திருமணம் செய்து கொண்டார். அவர் கனடாவில் தமிழீழ சங்கத்தின் முன்னாள் தலைவரான என். சிவலிங்கத்தின் மகளாவார். தம்பதியருக்கு பைரவி, சஹானா என்ற இரு மகள்கள் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

